Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 16+8

விலை ரூ. 60

ஞாயிற்றுக்கிழமை 16 ஜூலை 2023

ஆனி 31 ஆம் நாள் – வள... 2054





## குருந்தூர்மலை விவகாரம்; வெட்கித்தலைகுனியவேண்டும்

### நீதி அமைச்சர் விஜயதாஸ சீற்றம்

கொழும்பு, ஜூலை 16

நீதித்துறைக்கு சவால்விடும்வகையிலும்குருந்தூர்மலையை சிலர் பயன்படுத்த முற்படுகின்றனர். இது நாட்டுக்கு அவமானத்தை ஏற்படுத்தும் செயல் - இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

»14

## குருந்தூர்மலையில் எவரும் வழிபடலாம்

### அங்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு விரைவில் தீர்வு என்கிறார் ரணில்

கொழும்பு, ஜூலை 16

குருந்தூர்மலை ஒரு வழிபாட்டிடம், அங்கு யாரும் சென்று வழிபடலாம் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

குருந்தூர்மலையில் நேற்றுமுன்தினம் வழிபடச்சென்ற தமிழ் மக்கள், பிக்குகளாலும் சிங்கள மக்களாலும் பொலிஸாராலும் இடையூறு

»14



குருந்தூர்மலை

# தமிழர்களுக்குச் சொந்தமல்ல: பௌத்தர்கள் வழிபடும் தலம்

### இனத்துவேசம் கக்குகிறார் வீரசேகர; ஊடகங்கள் மீதும் அவர் பாய்ச்சல்

கொழும்பு, ஜூலை 16

குருந்தூர்மலை தமிழர்களுக்குச் சொந்தமானது அல்ல. பௌத்தர்கள் வழிபடும் தலத்தில் பொங்கல் விழா என்ற பெயரில் தமிழர்கள் வந்து சண்டித்தனம்காட்ட அனுமதிக்கமுடியாது. அதன் காரணமாகத்தான் அங்கு சென்ற தமிழர்களை பொலிஸார் திருப்பியனுப்பியிருக்கக்கூடும் என்று நான் நம்புகின்றேன் - இவ்வாறு தெரிவித்துள்ளார் ஆளும் கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர.

»15

## வழிபாட்டுரிமை மறுப்புக்கு எதிராக அணிதிரளவேண்டும்

### சைவமகாசபை வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 16

குருந்தூர்மலை ஆதிசிவன் வழிபாடுகள் தடுக்கப்பட்டமை தொடர்பாகவும்,

»14

## இணைய விளையாட்டுக்கு அடிமை பல்கலை. மாணவன் சலடமாக மீட்பு

### யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

இணைய விளையாட்டுக்கு அடிமையானமையால் ஏற்பட்ட மனவிரக்தியில் பல்கலைக்கழக

»15

## கோழிஇறைச்சி விலை குறைப்பு

கொழும்பு, ஜூலை 16

கோழியிறைச்சி ஒரு கிலோக்கிராமின் விலை 200 ரூபாவால்

»14

## 13ஐ உதறித்தள்ளவும் முடியாது; அது தமிழரின் இறுதித்தீர்வுமல்ல

### தமிழ்க் கட்சிகள் ஒருமித்து தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

13ஆவது திருத்தச்சட்டத்தை உதறித்தள்ளிவிட்டு நாம் அனைத்தையும் பெறமுடியாது. ஆனால், இதுவே முழுமையான தீர்வுமல்ல - இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் கொழும்பு அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

»15



## பனை விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஜூலை 16

மோட்டார் சைக்கிளை ஹைஏஸ் வாகனம் மோதியதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

»16

## போலியான 'லைசென்ஸை' புதுப்பிக்கச் சென்றவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 16

போலியாகத் தயாரிக்கப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரத்தை (லைசென்ஸ்) மாவட்டச் செயலக மோட்டார் போக்கு

»14

## '13' ஐ நடைமுறைப்படுத்தக் கோருவது சமஷ்டிக்கோரிக்கைக்கு குந்தகமல்ல

### விக்னேஸ்வரன் 'வில்லங்க' விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

13ஆவது திருத்தச் சட்டம் அரசமைப்பின் அங்கம். அதை நடைமுறைப்படுத்தக் கோருவது எந்தவிதத்திலும் எமது சமஷ்டிக் குறிக்கோளைப் பாதிக்காது. தற்போது மக்களுக்கு அதிகாரம் வேண்டும். நாம் இன்று அதிகாரமின்றி இருக்கின்றோம். 13ஆவது

»15

சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மருந்துகளின் இருப்பை விரைந்து உறுதிசெய்க!



## சுகாதார அமைச்சுக்கு ஜனாதிபதி உத்தரவு

**கொழும்பு, ஜூலை 16**

**மக்களுக்கு மருந்துகளை தாமதமின்றிப் பெற்றுக்கொடுப்பதை சுகாதார அமைச்சு உறுதிசெய்ய வேண்டுமெனவும், நாட்டில் உள்ள அனைத்து மருந்து வகைகள் தொடர்பிலும் வெளிப்படைத்தன்மை அவசியம் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.**

சுகாதாரத்துறையில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுகாதார அமைச்சால் நிர்வகிக்கப்படும் விசேட இணையத்தளம் மூலம் ஒவ்வொரு மருத்துவமனையிலும் உள்ள மருந்துகளின் அளவு மற்றும் நாளாந்தம் பெற்றுக்கொள்ளும் மொத்த மருந்துத் தொகை குறித்த தரவுகளை வழங்கவேண்டும். இந்த வலையமைப்பு சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டால் மருத்துவமனைகளுக்கு இடையே மருந்துகளைப் பரிமாறிக்கொள்ளவும் முடியுமாக இருக்கும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டை உடனடியாகத் தீர்க்கும் வகையில் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபை சட்டத்தின் திருத்தம் தொடர்பான ஆலோசனைகள் உடனடியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மருந்துத் தட்டுப்பாட்டைத் தவிர்க்க, அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட மருந்துகளை தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபையின் செயல்முறை மூலம் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக நேரடியாக கொள்வனவு செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுங்கள் - என்றார். (ம)

## மருத்துவர்களின் ஓய்வு 63 வயது வரை நீடிப்பு

மருத்துவர்கள் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் வகையில், மருத்துவர்கள் ஓய்வுபெறும் வயதெல்லையை 63ஆக நிர்ணயிக்குமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மருத்துவர்கள் பற்றாக்குறை தொடர்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அமைச்சரவையின் உபகுழு ஏற்கனவே இந்தப் பரிந்துரையை முன்வைத்துள்ள நிலையில், 2024ஆம் ஆண்டு இறுதி வரையாவது இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அத்துடன், காலத்தின் தேவைகருதி மேலதிக தீர்மானங்களை எடுப்பதற்கும் அவர் சுகாதார அமைச்சுக்கு அறிவுறுத்தியுள்ளார். (ம)



## இலங்கையுடன் துணைநிற்போம்

### பாக்லே உறுதி

கொழும்பு, ஜூலை 16

இலங்கையை பொருளாதார, பௌதீக ரீதியாக அபிவிருத்தி செய்ய இந்திய அரசாங்கத்தினதும், வர்த்தக சமூகத்தினரினதும் ஆதரவு தொடர்ந்தும் வழங்கப்படும் என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவைச் சேர்ந்தவர்கள் நீண்ட காலமாக இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவற்றை விரிவுபடுத்துவதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையே நட்புறவுப் பாலத்தை உருவாக்க முடியும். அது இலங்கை மக்கள் மத்தியில் செழிப்பான தாக்கத்தை ஏற்படுத்தும். இலங்கை மக்கள் ஒடுக்கப்பட்டபோதெல்லாம் அந்த மக்களுடன் இந்தியா துணையிருந்தது. கடந்த ஆண்டு ஏற்பட்ட நிதி நெருக்கடியின் போது இலங்கையின் பொருளாதாரத்தை மீட்பதற்கு இந்திய அரசாங்கம் வர்த்தக சமூகத்துக்கு உதவிகளை வழங்கியது. இலங்கை தற்போது நிதி நெருக்கடியில் இருந்து மீண்டு வருகிறது என்றே கூறவேண்டும். நிதி நெருக்கடியின் போதும், இலங்கையின் நிதி நிலைமை நன்றாக உள்ளது என்ற செய்தியை உலகுக்கு தெரிவிக்க இந்திய வர்த்தகர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொண்டுள்ளனர் - என்றார். (ம)

## ஊழல்வாதிகள் உழைக்கவே தரமற்ற மருந்து இறக்குமதி!

### அரச மருத்துவ அதிகாரிகள் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 16

ஊழல்வாதிகள் தாம் பணம் சம்பாதிப்பதற்காகப் பதிவுசெய்யப்படாத இந்திய மருந்து உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து தரமற்ற மருந்துவகைகளைக் கொள்வனவு செய்கின்றனர். இதற்கு இந்தியா அனுமதிக்கக் கூடாது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவரும் கொழும்பு தேசிய மருத்துவமனையின் பதில் பணிப்பாளருமான மருத்துவர் ருக்ஷன் பெலன தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மருந்துகளால் பல உயிரிழப்புகள் ஏற்படுகின்றமை தொடர்பில் ஆங்கிலப் பத்திரிகையொன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்;

இந்தியாவின் பதிவுசெய்யப்படாத நிறுவனங்களிடமிருந்து சுகாதார அமைச்சு மருந்து வகைகளைக் கொள்வனவு செய்கிறது. அந்த நிறுவனங்களின் தரம் பற்றி இந்திய ஊடகங்கள் ஏற்கனவே கேள்வி எழுப்பியிருந்தன. இந்த மருந்து வகைகளால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அசேல குணவர்த்தனவுமே பதிலளிக்க வேண்டும் - என்றார். (ச-6)

## கலைப்பிரிவினருக்கு தாதியர் பயிற்சிகள்!

### ஜனாதிபதி ரணில் பரிந்துரை

கொழும்பு, ஜூலை 16

தாதியர் ஆட்சேர்ப்பின்போது கலைப் பிரிவு படித்தவர்களையும் தாதியர் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளும் வகையில் விதிமுறைகள் திருத்தப்படவேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரிந்துரைத்துள்ளார்.

சுகாதாரத்துறையில் நிலவும் நெருக்கடி தொடர்பில், சுகாதார அதிகாரிகளுடனான கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போதே, தாதியர் பற்றாக்குறைக்கான தீர்வாக, கலைப் பிரிவில் கற்றவர்களுக்கும் தாதியர் பயிற்சிகளை வழங்குவதற்கு ஜனாதிபதி பரிந்துரைத்துள்ளார். (ம)

## பொருளாதார வளர்ச்சி அடைய திறந்த பொருளாதாரக்கொள்கை

### இந்திய வர்த்தகர்கள் மத்தியில் ஜனாதிபதி ரணில் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 16

பொருளாதார வளர்ச்சியை அடைய வேண்டுமாயின், திறந்த பொருளாதாரக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இலங்கை வர்த்தக உலகுக்குத் திறந்துவிடப்பட வேண்டியது தற்காலத்தில் மிக அவசியம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்திய வர்த்தகர்கள் மத்தியில் கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் சுமார் எழுநூறு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பமானது. கேரளாவில் இருந்து இலங்கைக்கு வியாபாரம் செய்ய வந்த வரலாறு எமக்கு உண்டு. நவகமுவில் உள்ள பத்தினி ஆலயம் கேரள மக்கள் இந்த நாட்டுக்கு வந்து வர்த்தகம் செய்யும்போது கட்டப்பட்டதாகவும் வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது ஆசியப் பிராந்தியத்தில் பலம் வாய்ந்த நாடாக இந்தியா தனது அதிகாரத்தை நிலைநாட்டியுள்ளது. ஆனாலும், மேற்கு ஆசிய நாடுகளும் பலமாக மாறியிருப்பதும் சிறப்பு வாய்ந்தது. இந்தியா போன்ற பலம் வாய்ந்த நாட்டுடன் வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவது இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெரும் நன்மை பயக்கும். பிரதமர் மோடி மேற்கொண்ட நிதிக் கொள்கையால், பொருளாதாரத்தில் இந்தியா முன்னேற முடிந்தது. அந்த நிதிக் கொள்கை இலங்கைப் பொருளாதாரத்தின் எதிர்காலத்துக்கும் உதவக்கூடியதாக அமைந்துள்ளது.

நான் இலங்கையை மிகவும் போட்டி நிறைந்த பொருளாதாரத்துக்கு கொண்டு செல்லவே விரும்புகிறேன். பசுமைப் பொருளாதாரம் மற்றும் டிஜிற்றல் பொருளாதாரம் மூலம் இலங்கையின் பொருளாதார நிலையை வலுவான நிலைக்கு உயர்த்த முடியும். அதற்குச் சட்டவிதிகள் அவசியம். போட்டி, பசுமை மற்றும் டிஜிற்றல் பொருளாதாரத்துக்குத் தேவையான சட்டங்களை எதிர்காலத்தில் சீர்திருத்த எதிர்பார்க்கின்றோம்.

எமது பொருளாதாரத்தை வலுப்படுத்த, இந்தியாவுடன் நெருங்கிய உறவை வைத்திருக்க வேண்டும். இலங்கையின் பொருளாதார நோக்கங்களையும் இலக்குகளையும் அடைவதற்கு இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது. இரு நாடுகளுக்குமிடையில் புதிய உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு அதற்கான துறைகளை அவற்றில் ஈடுபடுத்த வேண்டும் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு விழாவும் கண்காட்சியும்



நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் கடந்த 3ஆம் திகதி திங்கட்கிழமை இடம் பெற்ற புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் 45 ஆவது ஆண்டு பகிரங் கப் பொதுக்கூட்டத்தின்போது கட்சியின் கடந்த கால மக்கள் சார் போராட்டங்கள் மற்றும் பொதுப் பணிகள் தொடர்பான புகைப்படங்கள், புத்தகங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன. (ய-27)

# விசா காலாவதியானதால் இந்தியப் பிரஜை கைது

## யாழில் தங்கியிருந்தவர் மட்டு சென்றபோது சிக்கினார்

மட்டக்களப்பு, ஜூலை 16

இந்தியாவிலிருந்து சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து, விசா காலாவதியாகி 2 ஆண்டுகளாகிய நிலையில் தங்கியிருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவரை மட்டக்களப்பு நகரில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய நிலையில் நேற்றுக் கைது செய்துள்ளதாக மட்டு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழ்நாடு, சின்னப்பள்ளிகிராமம் கம்பள்ளி பேஸ்ட் கிருஸ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த செல்லப்பன் செல்வதுரை என்பவரே கைதாகியுள்ளார்.

2021ஆம் ஆண்டு சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்த நிலையில் யாழ்ப்பாணம் கைலாசபிள்ளையார் கோவில் பகுதியில் தங்கிருந்துள்ளார்.

மட்டக்களப்பு நகர்பகுதியில் மட்டக்களப்பைச் சேர்ந்த நண்பர் ஒருவருடன் சந்தேகத்துக்கு இடமாக நேற்று நடமாடிய நிலையில் இருவரையும் கைது செய்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தபோதே, குறித்த நபர் விசா காலாவதியான நிலையில் இலங்கையில் தங்கியிருந்தமை தெரியவந்துள்ளது. (அ-ஒ.இ)

## புத்தகங்கள் கையளிப்பு



மிகவும் பொருண்மியம் நலிவுற்ற பிரதேசத்தைச் சேர்ந்த கோட்டை கட்டியகுளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம்- 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு சுயமாகக் கற்கக்கூடிய கணிதபாட பயிற்சி நூல்கள் அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்டன. இந்த நூல்களின் நூலாசிரியர்களான வி.குகநாதன், எஸ்.வி.பாலமுரளி ஆகியோர் அண்மையில் நூல்களை பாடசாலை அதிபர் திருமதி.அ.கிருஸ்ணகுமாரிடம் கையளித்தனர். (ய)

## நகுலேஸ்வரக்குருக்கள் நேற்று இரவு உயிரிழப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 16

கீரிமலை, நகுலேஸ்வரம் ஆதீனகுரு இராஜசிறி நகுலேஸ்வரக்குருக்கள் (வயது-98) நேற்று இரவு இறைபதமடைந்துள்ளார். (ஒ-இ)

## துறைமுக நகரத்தின் செயற்கை கடற்கரை பார்வைக்குத் திறப்பு

கொழும்பு, ஜூலை 16

கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தின் செயற்கைக் கடற்கரை மக்களின் பயன்பாட்டுக்காக நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளது. இரண்டு கிலோமீற்றர் நீளமான கடற்கரையைப் பார்வையிட வருகை தரும் சுற்றுலாவி களுக்காக பல வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது. நாட்டில் புதிய அனுபவத்துடன், நிர்மாணிக்கப்படும் கொழும்பு துறைமுக நகரின் நிர்மாணப்பணிகள் தற்போது முன்னெடுக்கப்படுவதுடன், கொழும்பு துறைமுக நகரத்தின் செயற்கை கடற்கரையின் பகுதியொன்று ஒரு வருடத்துக்கு முன்னதாக மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.இ)

## கௌரவிப்பு





வரணி மத்திய கல்லூரியின் வலய மட்ட விளையாட்டுப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்த வீர, வீராங்கனைகளுக்கான பாராட்டு விழாவும் பதக்கம் அணிவித்து கௌரவம் வழங்கும் நிகழ்வும் கல்லூரி முதல்வர் ஆ.தங்கவேலு தலைமையில் கடந்த 10ஆம் திகதி திங்கட்கிழமை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

இதற்கு அனுசரணை பிரித்தானியாவில் வசிக்கும் பழைய மாணவன், உதைபந்து விளையாட்டு வீரன் கந்தையா இராமநாதன் வழங்கியதுடன் நிகழ்விலும் கலந்து சிறப்பித்தார். (ய-159)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


# 'க்ளோகல் பெயார்' ஆரம்பமானது நேற்று

யாழ்ப்பாணம், ஜூலை 16

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவையான 'க்ளோகல் பெயார்' யாழ்ப்பாணம் முற்றவெளி விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பமானது. இரண்டாவது நாளாக இன்றும் நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கொழும்புக்குச் சென்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் மூலம் பொதுமக்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய அனைத்துச் சேவைகளையும் கொழும்புக்கு வராமல் யாழ்ப்பாணத்திலேயே பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை 'க்ளோகல் பெயார்' வழங்குகிறது.

ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி தொடர்பான பிரச்சினைகள், வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு தொடர்பான விடயங்கள், வெளிநாட்டலுவல்கள் அமைச்சகத்தின் தூதரகத் துறையின் சேவைகள் முதலானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான வசதிகளும் இதில் செய்யப்பட்டுள்ளன. ஆரம்ப நிகழ்வில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெய்பாஸ்கர், வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ம-20)



## துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 16

கேகாலை, கலபிட்டமட - துனமால பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

உயிரிழந்தவர் இறப்பர் தோட்டமொன்றில் காவலாளியாகப் பணிபுரிபவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கப்ரக வாகனமொன்றில் பயணித்துக் கொண்டிருந்தபோதே அவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் கலபிட்டமட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-22)

## யானை தாக்கி இளைஞர் சாவு!

கொழும்பு, ஜூலை 16

அநுராதபுரம்- மதவாச்சிப் பகுதியில் யானைத் தாக்குதலுக்கு இலக்காகி இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடந்துள்ளது. ஒரு பிள்ளையின் தந்தையான 29 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார். வயல் வேலைக்குச் சென்றுவிட்டு காட்டு வழியாக வீடு திரும்பும்போதே யானை தாக்கியதில் அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-22)

## முதியவரொருவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, ஜூலை 16

மட்டக்களப்பு வாவிக்கரையில் வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 5ஆம் திகதி காணாமற்போன வயோதிபரே நேற்றுச் சனிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. சடலமாக மீட்கப்பட்டவருக்கு 73 வயது என்றும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ச-22)

# ஜனநாயகத்தைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றிணையுங்கள்!

## எதிர்க்கட்சித் தலைவர் அழைப்பு



**கொழும்பு, ஜூலை 16**

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலை, அரசாங்கம் பொய்யான காரணங்களை முன்வைத்து ஒத்திவைத்துள்ளது. அரசின் இந்த ஜனநாயக விரோத நடவடிக்கையை முறியடித்து சட்டத்தின் பிரகாரம் தேர்தலை நடத்த ஆளும் - எதிர்க்கட்சிகள் என அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான விசேட கலந்துரையாடல் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய அரசாங்கம் பொய்யான காரணங்களை முன்வைத்து- மக்களை அவமதிப்புக்குள்ளாக்கி நடத்த வேண்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைத்துள்ளது. கலைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளை மீள அழைக்கும் தீவிர ஜனநாயக விரோத நடவடிக்கையில் இந்த அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. நிறைவேற்று அதிகாரம் நீதித்துறையில் தலையீடு செய்கின்றது. ஜனநாயகக் கட்டமைப்பு பாதுகாக்கப்பட வேண்டும். தேர்தலை வெளிப்படைத்தன்மையுடன் சரியான நேரத்தில் நடத்துவது சகலரினதும் பொறுப்பாகும். தேர்தலை வலியுறுத்தி ஆளும் கட்சிகளும், எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் - என்றார். (ச)

### றோயல் பார்க் கொலைவழக்கு:

# சட்டவிதிகள் பின்பற்றப்பட்டே குற்றவாளிக்கு பொதுமன்னிப்பு

கொழும்பு, ஜூலை 16

ராஜகிரியவிலுள்ள தொடர்மாடிக் குடியிருப்பில் யுவதி ஒருவரைக் கொலைசெய்த வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட ஜூட் ஜயமக என்பவருக்கு அரசமைப்புக்கு அமைவாகவே பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

2005ஆம் ஆண்டு ராஜகிரிய றோயல் பார்க் தொடர்மாடிக் குடியிருப்பில் தங்கியிருந்த 18 வயதான யுவதியை ஜூட் ஜயமக என்பவர் கொலைசெய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு அவருக்கு மேல் நீதிமன்றால் மரணதண்டனை விதிக்கப்பட்டது.

பின்னர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் 2016ஆம் ஆண்டு மரணதண்டனை விதிக்கப்பட்ட பிரதிவாதி உட்பட 70 பேரின் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தார்.

இந்தப் பொதுமன்னிப்பில் முறையான சட்டநடைமுறைகள் பின்பற்றப்பட வில்லை என்றும் பொதுமன்னிப்பில் குற்றவாளியை விடுதலை செய்யும் தீர்மானத்தை ரத்துச்செய்யுமாறும் கோரி மகளிர் ஊடக அமைப்பு மனுத் தாக்கல் செய்தது. இந்த அடிப்படை உரிமை மீறல் மனு கடந்த வியாழக்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலவின் சட்டத்தரணி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ச-இ)



# தனுஷ்கவை ஆஸியில் சந்தித்து மகிழ்ந்த ஹரின்

கொழும்பு, ஜூலை 16

பாலியல் குற்றச்சாட்டுக்கு உள்ளான கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்கவை சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ அவுஸ்திரேலியாவில் கடந்த வியாழக்கிழமை சந்தித்து உரையாடியுள்ளார்.

சந்திப்பின்போது எடுக்கப்பட்ட ஒளிப்படத்தை தனது சமூக வலைத்தளத்தில் பகிர்ந்து "உங்களைக் காண்பதில் மகிழ்ச்சி சகோதரரே" என்று அதில் பதிவிட்டுள்ளார்.

இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக அவுஸ்திரேலியா சென்றிருந்தபோதே சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தனுஷ்க குணதிலக்கவை சந்தித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற 20-20 உலகக் கிண்ணத் தொடரின் முதல் போட்டியில் தனுஷ்க பங்கேற்றபோது ஏற்பட்ட உபாதை காரணமாக போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தார்.

அதேவேளை சிட்னியின் கிழக்குப் புறநகரிலுள்ள அவரது வீட்டில் தன்னைப் பாலியல்துன்புறுத்தல்செய்தாரென சமூகவலைத்தளம் ஊடாக அறிமுகமான பெண்ணொருவர் தனுஷ்கவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்த நிலையில் அவர் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தில் இன்று குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 16
அமரர் நாகலிங்கம் தெய்வேந்திரத்தின் இரண்டாம் ஆண்டு நினைவையொட்டி விதையனைத்தும் விருட்சமே குழுமத்தால் குருதிக்கொடை முகாமொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை குருதி வங்கிப் பிரிவில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை இந்தக் குருதிக்கொடை முகாம் நடைபெறவுள்ளது. குருதிக் கொடையாளர்கள், ஆர்வலர்கள் பங்கேற்று குருதிக்கொடையளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ச-66)

# வீடுகளுக்குள் நுழையும் மயானத்தின் கழிவுகள்!

### கல்லுண்டாய் குடியேற்றத் திட்ட மக்கள் விசனம்

**யாழ்ப்பாணம், ஜூலை 16**

**ஆனைக்கோட்டை - கல்லுண்டாய் இந்து மயானத்தில் சடலங்கள் எரியூட்டப்படும்போது அதிலிருந்து மேலெழும் புகை வீடுகளுக்குள் வருவதுடன் மழைகாலங்களிலும் மயானத்தின் கழிவுகள் எமது குடியிருப்புக்குள் அடித்து வரப்படுகின்றன. இதனால் பலரும் நோய்த் தாக்கங்களுக்கு உள்ளாக நேரிடுகிறது என கல்லுண்டாய் குடியேற்றத்திட்ட மக்கள் கவலை வெளியிட்டுள்ள னர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;
நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் இந்தப் பகுதியில் குடியேற்றத்திட்டம் மூலம் குடியமர்த்தப்பட்டோம்.
எமது குடியேற்றத்திலிருந்து சுமார் 30 மீற்றர் தொலைவில் ஆனைக்கோட்டை கல்லுண்டாய் மயானம் அமைந்துள்ளது.
மயானத்தில் சடலங்களை எரிக்கின்றபோது அந்தப் புகை எமது குடியிருப்புக்குள் வருகின்றது.
மழைகாலங்களில் மயானத்திலிருந்து வழிந் தோடும் வெள்ளநீரில் மயானத்தில் எரிக்கின்ற கழிவுகள் வீடுகளுக்குள் அடித்து வரப்படுகின்றன. மயானத்தை இடம்மாற்றி புதிய இடத்தில் மயானம் அமைப்பதற்காக வரவு - செலவுத் திட்டத்தில் நிதியொதுக்கப்பட்டது.
புதிய மயானத்துக்கென சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தால் சுமார் ஒரு ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.
வரவு - செலவுத் திட்டத்தில் மயானம் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட நிதி எங்கே? சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுதொடர்பில் கவனத்திற்கொண்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் வழங்கிய காணியில் மயானத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச-27)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தாயாரின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் அதனால் மகிழ்ச்சியே ஏற்படும்.

**மிதுனம்:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள்.செலவுகள் ஏற்படக் கூடும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வீண் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பணியாளர்களால் சில பிரச்சினைகள் ஏற்படும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் உதவியுடன் சுபநிகழ்ச்சிக்கான சாதகமாக முடியும். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். பிணக்குகள் நீங்கும்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். விற்பனையும் லாபமும் உண்டாகும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**விருச்சிகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். செலவு செய்ய வேண்டி வரும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. அந்நியோன்யம் அதிகரிக்கும். தேவைகளை நிறைவேற்றுவீர்கள். லாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**மகரம்:** ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். சிலருக்கு எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** சிறு சிறு கருத்துவேறுபாடுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது.

## இலட்சார்ச்சனையும் சமயநற்சிந்தனையும்

யாழ்ப்பாணம், ஜூலை 16
சுதுமலை அருள்மிகு ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த இலட்சார்ச்சனையும் சமய நற்சிந்தனையும் கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 22ஆம் திகதி ஆடிப்பூரம் வரை இடம்பெறவுள்ளன.
பத்து தினங்களும் வருடாந்த இலட்சார்ச்சனையும் ஸ்ரீ வித்யா ஸ்ரீ சக்ரபூசையும் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இடம்பெறும்.
மாலை 6 மணி தொடக்கம் 7 மணிவரை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் கு.பாலஷண்முகன் நற்சிந்தனை நிறைந்த சமயச் சொற்பொழிவை ஆற்றுவார். (ச)




## 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்'

### நூல் வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 16
தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் கலாசூரி இ.சிவகுருநாதனின் இருபதாம் ஆண்டு நினைவை முன்னிட்டு ஐங்கரன் விக்கினேஸ்வரா தொகுத்த 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' நூல் வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில்வேலவர் தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது. நிகழ்வில் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலை வகிக்க, பிரதம அதிதியாக லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஆசிரியர்பீட பணிப்பாளர் சிசிர பரணதந்திரி கலந்து கொள்ளவுள்ளார். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின்தலைவர் நடராஜா காண்டீபன், 'ஞானம்' பத்திரிகையின் முதன்மை ஆசிரியர் சாகித்யரத்னா ஞானசேகரன் ஆகியோர் நிகழ்வில் வாழ்த்துரை நிகழ்த்தவுள்ளனர்.
தகவல் அறியும் ஜனாதிபதி ஆணைய உறுப்பினர் ஏ.எம். நாகியா, எழுத்தாளர் முருகபூபதி ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர். நூலை கல்வியமைச்சின் மேனாள் கூடுதல் செயலாளர் தில்லை நடராஜா அறிமுகம் செய்வார். (ச)

### கோப்பாய் விபத்து

## தானே குற்றவாளியென இருவர் உரிமைகோரல்!

### குழப்பத்தில் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஜூலை 16
கோப்பாய் விபத்தில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் விபத்தை ஏற்படுத்திய சந்தேக நபர் யார் என்பதில் சிக்கல் எழுந்துள்ளது.
இந்த விபத்தை ஏற்படுத்தியமைக்காக முன்னதாக ஒருவர் கைதுசெய்யப்பட்ட நிலையில், திடீர்த் திருப்பமாக பிறிதொருவர் தானே விபத்தை ஏற்படுத்தியதாக சரணடைந்துள்ளார்.
அதனையடுத்தே இந்தக் குழப்பம் எழுந்துள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கடந்த பெப்ரவரி மாதம் கைதடி-மானிப்பாய் வீதியிலுள்ள கிருஸ்ணர் கோயிலுக்கு அருகாமையில் இடம்பெற்ற கார் மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்தில் 24 வயதுடைய இளைஞர் உயிரிழந்தார். விபத்தை ஏற்படுத்திய [illegible] சென்ற நிலையில் சந்தேக நபரை கைதுசெய்வதற்கான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் துரிதப்படுத்தியிருந்தனர்.
இதன்போது விபத்தை ஏற்படுத்திய காரைச் செலுத்திச் சென்றவர் உரும்பிராயில் வைத்து கோப்பாய் பொலிஸாரால் அண்மையில் கைதுசெய்யப்பட்டார்.
இந்தநிலையில் மேலுமொரு சந்தேகநபர் குறித்த விபத்தை தானே ஏற்படுத்தியதாக சரணடைந்துள்ளார்.
சந்தேகநபர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் இருவரையும் எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இதுவா பொலிஸாரின் நீதித்தராசு?

அருவருக்கத்தக்க இனவாதத்தாலும் மதவாதத்தாலும் குருதி சகதியாகப் பெருக்கெடுத்தோடிய இலங்கைத் தீவில், இன்னொரு போர் தோன்றுமாக இருந்தால், அதற்கான போர்முனைகளில் ஒன்றாக முல்லைத்தீவு – குருந்தூர்மலை நிச்சயம் இருக்கும். அந்த ஆபத்தம்சங்கள் அனைத்தும் நிறைந்ததாகத்தான் குருந்தூர்மலையில் பௌத்த பேரினவாதம் மீண்டுமொருமுறை தன் வெறியாட்டத்தை நேற்றுமுன்தினம் நிகழ்த்திக் காட்டியிருக்கின்றது.

ஆதிசிவன் ஐயனாருக்குப் பொங்கல் பொங்கிப் படைப்பதற்காகச் சென்ற தமிழர்கள் மீது பௌத்த தேரர்கள் தலைமையிலான சிங்களக் காடையர்கள் மூர்க்கமான எதிர்வினைகளை ஆற்றியதுடன், பொலிஸ் இயந்திரமும் தமிழர்களுக்கு எதிராக நின்று பேரினவாதக் கைக்கூலிகளுக்கு விசுவாசம் காட்டியிருக்கின்றது. இந்த விவகாரத்தில் தமிழர்களின் வழிபாட்டுரிமை முற்றுமுழுதாக மறுக்கப்பட்டுள்ளதுடன், நீதிமன்ற உத்தரவுகளும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டிருக்கின்றன. 'பொலிஸாரின் நீதித்தராசு' வழக்கம்போல சிங்கள – பௌத்த சிந்தனையின் பாற்பட்டு தமிழர்களைத் தாக்கியிருக்கின்றது – தள்ளியிருக்கின்றது – குண்டுக்கட்டாகக் காவிச்சென்றிருக்கின்றது – பலர் காயமுறவும் காரணமாக அமைந்திருக்கின்றது.

ஆதிசிவன் ஐயனாருக்குப் பொங்கிப் படையலிடுவது என்பது ஒற்றை இரவில் உதித்த சிந்தனையல்ல. இந்த முடிவு எடுக்கப்பட்டு சுமார் இரண்டு வாரங்கள். தொல்பொருள் மரபுரிமை சார் இடமாக குருந்தூர்மலை இருப்பதாலும் அங்கே இதற்கு முன்னரும்கூட விரும்பத்தகாத செயற்பாடுகள் அரங்கேற்றப்பட்டமையாலும் பொங்கலிட்டு வழிபடுவதற்கான அனுமதியை நீதிமன்றத்திடம் தமிழர்கள் பெற்றிருந்தனர். அவ்வாறெனில் பொலிஸாரின் முதற்கடமை பொங்கிப் படையலிட வந்தவர்களின் 'நீதிமன்ற உத்தரவுக்கு அமைவான' வழிபாட்டு உரிமையைப் பாதுகாப்பதும் இனமுறுகலொன்று ஏற்படாதிருக்க வழிவகைகளை ஏற்படுத்துவதும்தான். ஆனால், வழிபாடுகளைக் குழப்புவதற்காக தேரர் ஒருவரின் வழிப்படுத்தலில் அழைத்துவரப்பட்ட காடையர்கள் கூட்டத்தைத்தான் பொலிஸார் காத்துநின்றனர். அந்தக் குண்டர்கள் கூட்டத்துக்குச் சார்பாகவும் சாதகமாகவும் பொலிஸாரின் நீதித்தராசுகள் தாழ்த்தப்பட்டு தரமிறக்கப்பட்டன.


உண்மையில் குருந்தூர்மலையில் உரிமை மறுக்கப்பட்டதும் மதிப்பிழப்புச் செய்யப்பட்டதும் தமிழர் தரப்புக்கு அல்ல. நீதிதேவதைதான் அந்த மலையில் 'கண்கள் கட்டப்பட்ட நிலையில்' அங்கலாய்த்துத் திரிகிறாள். நீதியை நிலைநாட்டுவதற்கான அவளின் உரிமை பொலிஸாரால் நீண்டகாலமாகச் சின்னாபின்னமாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. நீதி தேவதைக்கு அரணாக நிற்க வேண்டிய பொலிஸாரே அவளைக் காவிகளின் கூட்டமும் காவாலிகளின் கும்பலும் கடித்துக்குதறக் காரணமாக இருக்கின்றனர். இப்படியானதொரு இழிநிலை தமிழர்தாயகத்தைத் தவிர வேறு எங்குதான் நிகழ்ந்துவிடும்?

*1983*ஆம் ஆண்டு இதுபோன்றதொரு ஜூலையில்தான் இலங்கையில் அரக்கத்தனமான படுகொலைகள் அரச இயந்திரத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டன. 'கறுப்பு ஜூலை' என்ற அடையாளப்படுத்தலுடன் அழைக்கப்படும் அந்தப் படுகொலைகளுக்கான நீதிகூட இன்னமும் கிட்டியபாடில்லை. இவ்வாறிருக்கையில் மற்றுமொரு ஜூலையில் நிகழ்ந்திருக்கும் இந்த அடக்குமுறைகளும் நீதிப்படுகொலைகளும், மூன்று தசாப்தகால போரினின்று எந்தக் கற்பிதத்தையும் இலங்கை பெற்றுக்கொள்ளவில்லை என்பதையே மெய்ப்பிக்கின்றன. அடக்குமுறைகள் சொல்லொணா வகையில் திணிக்கப்பட்டு உரிமைகள் கண்மூடித்தனமாக மறுக்கப்படுகின்றபோதுதான் கிளர்ச்சிகள் வெடிக்கும். உலக வரலாறும் இலங்கையின் இறந்தகாலமும் இதுதான். இதேநிலை நீடிக்குமாயின், இன்னொரு குருதிச் சகதி இந்த நாட்டில் பெருக்கெடுத்தாலோ அதற்குரிய போர்முனைகளில் ஒன்றாக குருந்தூர்மலை அமைந்தாலோ அவை ஆச்சரியத்துக்குரிய விடயங்கள் அல்ல. ஏனெனில், பொலிஸாரின் சப்பாத்துக்கால்களால் மிதித்து அணைக்கப்பட்ட கற்பூரத்தீபம் தமிழர்களின் உயிர்க்கூடுகளில் நெடுங்காலத்துக்கு கனன்றுகொண்டுதான் இருக்கும்.

## நாளொரு நல்வார்த்தை

"உங்கள் நம்பிக்கையை வைத்து முழுமையாக வாழுங்கள். உலகத்தையே உங்களால் புரட்டிப்போட முடியும்"

**– ஹென்றி டேவிட் தொரேயு**




# கடும் வரட்சிநிலை: பாலுற்பத்தி வீழ்ச்சி



## *கிளிநொச்சி பண்ணையாளர்கள் கவலை*

**கிளிநொச்சி, ஜூலை 16**

**கிளிநொச்சி மாவட்டத்தில், கடும் வரட்சி காரணமாக கால்நடைகளுக்கான மேய்ச்சல்தரை குறைவடைந்துள்ளமையால் அல்லது இல்லாமல் போகின்றமையால் பாலுற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று கிளிநொச்சி கால்நடைப் பண்ணையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:- கடும் வரட்சிநிலையால் கால்நடைகள் பச்சைப் புற்களைத் தேடி நீண்டதூரம் செல்கின்றன. அத்துடன் குளங்களில் நீர் வற்றியதால் குடிதண்ணீரின்றியும் கால்நடைகள் அலைந்து திரிகின்றன. கால்நடைகளின் மேய்ச்சல் குறைவடைந்துள்ளமையால் பால் உற்பத்தி வீழ்ச்சியடைகின்றது. அதனால் எமது வாழ்வாதாரம் இழக்கப்படும் நிலை உருவாகியுள்ளது. ஏனவே அதிகாரிகள் கால்நடைகளுக்கு சிறந்த மேய்ச்சல் தரைகளை உருவாக்கித் தரவேண்டும் - என்றனர். (ச-113)




# யாழ்ப்பாணக் கல்லூரியின் பாரம்பரிய வாகன பவனி

யாழ்ப்பாணம், ஜூலை 16

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்தை முன்னிட்டு வாகன பவனி நேற்றுச் சனிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்றிலில் ஆரம்பமான வாகனப் பவனி, அராலி, கோட்டைக்காடு, நவாலி, மானிப்பாய் சித்தன்கேணி ஊடாக மீண்டும் கல்லூரியை வந்தடைந்தது. வாகனப்பவனியில் யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய தட்டிவான், பழைய ரக கார்கள், மோட்டார் வாகனங்கள் அணிவகுத்தன. (ச-125,27)

# சங்கத்தானையில் ரயில் கடவை!

## பந்துல இணக்கம்



சங்கத்தானை புளியடிச் சந்தியில் ரயில் கடவை அமைப்பதற்கு போக்குவரத்து அமைச்சர் பந்துல இணக்கம் தெரிவித்துள்ளார். அந்தப் பகுதிக்குச் சென்ற பந்துலவிடம், மக்கள் தங்கள் முறைப்பாட்டை நேரடியாகத் தெரிவித்ததை அடுத்தே சங்கத்தானை புளியடிச் சந்தியில் ரயில் கடவையொன்றை அமைத்து வழங்குவதற்கு அவர் இணக்கம் தெரிவித்துள்ளார். (ம-27)

**நாளை**

**17.07.2023**
**திங்கட்கிழமை**
**ஆடி 01**

சுபநேரம் : 12.00 - 01.30
ராகுகாலம் : 07.30 - 09.00
**ஆடி அமாவாசை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனைகளுக்குச் செல்லவே மக்கள் இன்று பயப்படும் நிலைமை



## சுகாதார அமைச்சர் பதவி துறக்கவேண்டும் என்கிறார் விமல் வீரவன்ஸ

**கொழும்பு, ஜூலை 16**

**அரச மருத்துவமனைகளுக்குச் சென்றால் உயிருக்கு உத்தரவாதம் இருக்குமா? என மக்கள் அச்சம் கொள்ளும் நிலை தோற்றம் பெற்றுள்ளது. சுகாதாரத்துறை அமைச்சர், சுகாதாரத்துறை அமைச்சின் செயலர் ஆகியோர் பதவி விலக வேண்டும் - இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

கொழும்பில் அண்மையில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் இலவச சுகாதார சேவை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. மருந்துத் தட்டுப்பாடு தோற்றம் பெற்றவுடன் அவசர கொள்வனவு முறையில் திறந்த விலை மனுக்கோரல் இல்லாமல் மருந்துப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்தியாவில் இருந்து அவசர கொள்வனவு முறையில் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளின் தரம் தொடர்பில் சர்ச்சை தோற்றம் பெற்றுள்ளது.

மருந்துத் தட்டுப்பாடு மற்றும் தரமற்ற மருந்துக் கொள்வனவு தொடர்பில் சுகாதாரத்துறை அமைச்சர் சிறு பிள்ளை போல் கருத்துரைக்கிறார். மருந்துத் தட்டுப்பாடு, தரமற்ற மருந்துக் கொள்வனவால் இலவச சுகாதார சேவையை நம்பியுள்ள நடுத்தர மக்களே தற்போது பெரும் அச்சம் கொண்டுள்ளனர்.

நாட்டு மக்களின் சுகாதாரம் கேள்விக்குள்ளாகியுள்ள நிலையில் சுகாதாரத்துறை அமைச்சர், சுகாதார அமைச்சின் செயலர் ஆகியோர் பதவி விலக வேண்டும் - என்றார். (ஒ-22)

# பயங்கரவாதமாக மாறியுள்ளது இலங்கையின் சுகாதாரத்துறை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் காட்டம்

கொழும்பு, ஜூலை 16

30 வருடகால போரை முடிவுக்குக் கொண்டுவந்த நாட்டில் தற்போது சுகாதாரத்துறை பயங்கரவாதமாக மாறியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

வரலாற்றில் முதல் தடவையாக நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரால் குழுவொன்று உருவாக்கும் நிகழ்வு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நாடாளுமன்றத்தின் குழு அறையில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க கதிரியக்கத் தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம், அரசாங்க மருந்தாளர்கள் சங்கம், சிவில் உரிமைகளுக்கான மருத்துவ நிபுணர்கள் சங்கம், சுகாதார நிபுணர்கள் நிறுவனம் போன்றவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் குழுவினர் இதில் கலந்து கொண்டனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த சஜித், மருந்துப்பொருள்களை இறக்குமதி செய்வதில் கொள்முதல் முறையைக் கடைபிடிக்க வேண்டும் என்று சட்டம் கூறினாலும், அதைப் பொருட்படுத்தாமல் விசேட தேவை எனக் கூறி மனித சடலங்களில் 'மருத்துவ வியாபாரத்தை' அரசாங்கம் மேற்கொண்டுவருகின்றது. இதனால் கடந்த காலங்களில் தரக்குறைவான மயக்க மருந்துப் பாவனையால் பல சிறுவர்கள் மற்றும் பிரஜைகள் உயிரிழந்துள்ளனர்.

தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபையின் 23 நிபுணர்கள் அதிலிருந்து நீக்கப்பட்டு அந்தத் தகவல்கள் மறைக்கப்பட்டுள்ளன. சில மருத்துவர்கள் தகவல்களை சமர்ப்பித்த போது அவர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

ஊழல், மோசடி, அதிக விலைக்கு மருந்து பெறுதல், மருந்துப் பொருள் மோசடிகள் குறித்து அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பவுள்ளேன். இதற்கு எதிராக நாடாளுமன்றத்துக்குள்ளேயும் வெளியேயும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது - என்றார். (ஒ-44)

# வழமைக்குத் திரும்பும் திரிபோஷா உற்பத்தி!

## மாதாந்தம் 13 லட்சம் பைக்கெற் தயாரிப்பு

திரிபோஷா உற்பத்தி மற்றும் விநியோகம் வழமைக்குத் திரும்பியுள்ளது. தற்போது மாதம் ஒன்றுக்கு 13 லட்சம் திரிபோஷா பைக்கெற்றுகள் தயாரிக்கப்படுகின்றன என்று நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன தெரிவித்துள்ளார்.

50 வருடங்கள் வரலாற்றைக் கொண்ட திரிபோஷா நிறுவனம் இலாபமீட்டி திறைச்சேரிக்கு வருடாந்தம் நிதி வழங்கும் நிறுவனமாகக் காணப்படுகிறது.

மாதத்துக்குத் தேவையான திரிபோஷாவைத் தயாரிப்பதற்கு 15 மெற்றிக்தொன் சோளம் தேவைப்படும். உள்ளூர் சோள உற்பத்தியாளர்களிடமிருந்து சோளத்தைப் பெற்றுக்கொள்ள இயலாமையால், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. தேசிய ரீதியில் பெரும்பாலும் சோளம் உற்பத்தி செய்யப்பட்டாலும் அவர்களுக்குத் தேவையான அறுவடைத் தொழில்நுட்ப அறிவு இல்லை. விளைச்சலை சரியான தரத்துடன் சந்தைக்கு வழங்க முடியாதுள்ளது.

மாதாந்தம் 19 லட்சம் திரிபோஷாப் பொதிகள் வழங்கப்படவேண்டியுள்ளபோதும் 13 இலட்சம் பொதிகள் வரை தற்போதைக்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. தேவையான அளவு சோளம் கிடைத்தால் 19 இலட்சம் பொதிகளை தொடர்ச்சியாக 20 நாள்களுக்குள் உற்பத்தி செய்ய முடியும் என்று குறிப்பிட்டார். (ச-இ)

# பேராதனையில் பெண் சாவு! ஒவ்வாமையே காரணமாம்

## தடுப்பூசியில் தவறில்லை என்கிறார் சுகாதார அமைச்சர்

கொழும்பு, ஜூலை 16

வயிற்றுவலி காரணமாக, பேராதனை போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், திடீரென உயிரிழந்த 21 வயதுப் பெண்ணின் உயிரிழப்புக்கு ஒவ்வாமையே காரணம் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். பெண்ணுக்கு வழங்கப்பட்ட தடுப்பூசியில் எவ்வித பிரச்சினையும் இல்லை என்றும் அமைச்சர் கூறி யுள்ளார்.

ஆயினும், மருத்துவமனையில் வழங்கப்பட்ட தடுப்பூசி காரணமாகவே, தமது மகள் உயிரிழந்ததாக, குறித்த பெண்ணின் பெற்றோர் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இவ்வாறான நிலையில், உயிரிழப்புத் தொடர்பில் ஆராய்வதற்காக, மருத்துவ நிபுணர் குழுவொன்று, பேராதனை மருத்துவமனைக்குச் செல்ல உள்ளதாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன குறிப்பிட்டார். (ஒ-இ)



# சடலம் மீட்பு!

கொழும்பு, ஜூலை 16

காலி, அம்பலாங்கொடை பிரதேசத்தில் வெட்டுக்காயங்களுடன் ஆணொருவரின் சடலம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பலாங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடையவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இளைஞரின் வீட்டுக்கு 200 மீற்றர் தொலைவிலுள்ள வெற்றுக்காணியொன்றிலேயே அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. (ச-ரி-22)

# உலக்கையால் தாக்கி பெண் படுகொலை

## மாதம்பையில் சம்பவம்

உலக்கையால் தாக்கப்பட்டு குடும்பப் பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் புத்தளம் மாதம்பை பிரதேசத்தில் கடந்தவியாழக்கிழமை நடந்துள்ளது.

42 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயே சாவடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். மதுபோதையில் வீட்டுக்கு வந்த கணவர், இந்த வெறியாட்டத்தைப் புரிந்துள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்டவிசாரணையில் தெரிவிக்கப்படுகிறது. சந்தேகநபரான கணவரைக் கைது செய்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-22)

# விபத்தில் சிக்கி வயோதிபர் சாவு!

வீதியால் நடந்து சென்ற வயோதிபரை பின்னால் வந்த ஹைஏஸ் வாகனம் மோதியதில் வயோதிபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்துச் சம்பவம் நீர்கொழும்பில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. விபத்தில் 77 வயதுடைய முதியவரே உயிரிழந்துள்ளார். விபத்தை ஏற்படுத்திய ஹைஏஸ் சாரதி தப்பிச் சென்ற நிலையில் பொலிஸார் துரத்திப் பிடித்து கைதுசெய்துள்ளனர். விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-ரி-22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது வைத்தியசாலையில் வைத்திய உத்தியோகத்தராக கடமை புரியும் **Dr.திருமதி R.கமலாதேவி** அவர்களின் அன்பு **மாமனார்** காலமாகிவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தகவல்**
**பணியாளர் நலன்புரிச் சங்கம்**
**சித்த போதனா வைத்தியசாலை கைதடி.**

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 20 | 13 |
| 12 | 07 |
| 1939 | 2023 |

### திருமதி டெவினி கிளாடிஸ் லூட்ஸ் மலர் (Malar) சிறிராஜா

யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத்தெருவை வதிவிடமாக கொண்ட திருமதி டெவினி கிளாடிஸ் லூட்ஸ் மலர் (Malar) சிறிராஜா கடந்த (13.07.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி முத்துக்குமார் அவர்களின் பாசமிகு மகளும். காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சிங்கநாயகம் அவர்களின் மருமகளும். காலஞ்சென்ற வின்ஸ்ரன் சிறிராஜா(Chutty) அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் உடல் இறுதி அஞ்சலிக்காக இன்று (16.07.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 6.00மணி வரைக்கும். திங்கட்கிழமை காலை 8.30 தொடக்கம் மு.ப 10.00 மணி வரையும் White House இல் வைக்கப்பட்டு முற்பகல் 10.30 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**திருமதி M.E.I.லோரன்ஸ் (மைத்துனி)**
**+94775951242**

(CS 25537)A-1

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 | 16 |
| 02 | 06 |
| 1949 | 2023 |

**கடந்த 16.06.2023 அன்று சிவபதமடைந்த**
**எமது குடும்பத் தலைவர்**

### அமரர் உயர்திரு. இராசையா இராசலிங்கம்

**(ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர், நல்லூர் பிரதேச செயலகம்)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (16.07.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**


அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும் தொலைபேசியூடாகவும் முகநூல் மின்னஞ்சல், Rip Book ஆகியவை மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும். அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையங்கள். மலர் மாலைகள் சாத்தியவர்களுக்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்த வேளையில் உதவிய வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் உற்றார், உறவினர் நண்பர்கள் மற்றும் இன்று வரை எமக்கு சகல உதவிகளையும். செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

**குடும்பத்தினர்**

**பத்தானை வீதி, தாவடி தெற்கு,**
**கொக்குவில்.**

(CS 25534)(K-1)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 | 15 |
| 07 | 07 |
| 1943 | 2023 |

### திருச்செல்வம் விஜயரட்ணம்

அளவையை பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் விஜயரட்ணம் நேற்று (15.07.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.S.S.திருச்செல்வம் இலக்குமி அம்மாள் தம்பதியரின் பாசமிகு மகனும், இரட்ணசபாபதி பூசத்திருமேனி தம்பதியரின் அன்பு மருமகனும். நாகேஸ்வரியின் அன்புக் கணவரும். மதிதரன் (உதவிக் கல்விப் பணிப்பாளர். வலயக் கல்வி அலுவலகம். தென்மராட்சி வலயம்). தயாதரன் (யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிலானி (ஆசிரியை. வட்டு மத்திய கல்லூரி), சிவாகரி (அபிவிருத்தி உத்தியோகத்தர். காரைநகர் பிரதேசசபை) ஆகியோரின் அன்பு மாமனாரும். இலக்கியா. அக்ஸயா, சாயகி, சாருஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.09, நெல்லிப்பளை வீதி,**
**வட்டுக்கோட்டை.**
**077 3126 445, 0773049820**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 03 | 13 |
| 11 | 07 |
| 1964 | 2023 |

### திருமதி சத்தியகுமாரி மரியதாஸ்

**(ஆசிரியை, யா/ குளமன்கால் றோ.க.த.க.பாடசாலை**
**யா/ அளவெட்டி அருணோதயா வித்தியாலயம்)**

பத்தாவத்தை இளவாலையைப் பிறப்பிடமாகவும். அலுக்கை அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியகுமாரி மரியதாஸ் அவர்கள் கடந்த (13.07.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் யோண்பிள்ளை மரியதாஸ் அவர்களின் அன்பு மனைவியும். மரிய ஜோஜிதன். மரிய வெலானி (யா/ மகாஜனாக் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தாயாரும். காலஞ்சென்ற இராசநாயகம் ஞானசவுந்தரி அவர்களின் அன்பு மகளும். காலஞ்சென்ற யோண்பிள்ளை திரேசம்மா அவர்களின் அன்பு மருமகளும். இரட்ணகுமாரி (ஓய்வு நிலை ஆசிரியை). சந்திரகுமாரி (ஓய்வு நிலை பிரதிஅதிபர் . வ/ இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி). சற்குணராஜா (ஆசிரியர். வ/ விபுலானந்தா கல்லூரி). சுகிர்தகுமாரி (லண்டன்), நற்குணராஜா (ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ்). பற்குணராஜா ( ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ்). வதனகுமாரி (ஆசிரியை. வ/இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை). காலஞ்சென்ற பொற்குணராஜா. யமுனாகுமாரி (ஓய்வு நிலை ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும். அந்தோனிப்பிள்ளை. பற்றிக் லூயிஸ் (வின்சன்ற்). ஜெசிந்தா யூதாதேயு (பேபி). கிறிஸ்ரி. பிரான்சிஸ் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.07.2023) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து திருப்பலிக்காக அளவெட்டி புனித சூசையப்பர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின்னர் அளவெட்டி மல்லாகம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 3707 393**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பனை அபிவிருத்தி வாரத்தை சுருங்கச் செய்வது ஏற்பல்ல!

## பசுமை இயக்கத் தலைவர் ஐங்கரநேசன் ஆதங்கம்



**யாழ்ப்பாணம், ஜூலை 16**

**வடக்கு மாகாண பனை அபிவிருத்தி வாரத்தின் நோக்கத்தைச் சிதைக்கும் வகையில் அதனைக் கொண்டாடாது தவிர்க்கவோ அல்லது மாற்றியமைக்கவோ மாகாணக் கூட்டுறவுத் திணைக்களத்துக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. தவறின் தமிழரின் அடையாளமான பனைக்குத் தவறிழைத்த வரலாற்றுப் பிழையைச் சுமக்க நேரிடும் - இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.**

வடமாகாணக் கூட்டுறவுத் திணைக்களம் ஆடிப்பிறப்பை முன்னிட்டு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் மூன்று நாள்கள் நல்லூர் கிட்டுப் பூங்காவில் பனையுற்பத்திப் பொருள்களின் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.

இதுதொடர்பில் அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

தமிழ் மக்களின் பண்பாட்டைப் 'பனைப் பண்பாடு' என்று சொல்லும் அளவுக்கு உணவு முதல் உறையுள் வரை இடம்பிடித்து வந்த பனைவளம் தற்போது எமக்கு அந்நியமாக மாறியுள்ளது. பனைப் பொருள்களின் பயன்பாடு அருகிவருவதனால் பனை வளத்தைத் தொழில் மூலாதாரமாகப் பயன்படுத்தி வந்த மக்கள் வாழ்வாதாரப் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர்.

அந்தவகையில், பனை வளத்தைப் பெருக்கவும், நுகர்வோரை ஈர்க்கவும் வடக்கு மாகாண அமைச்சரவையின் ஒப்புதலுடன் ஆண்டுதோறும் ஜூலை 22 ஆம் திகதி தொடக்கம் 28 வரையான ஒருவார காலப்பகுதி வடமாகாண பனை அபிவிருத்தி வாரமாகக் கொண்டாடப்பட்டு வந்தது. ஆனால், கடந்த சில வருடங்களாகப் பனை அபிவிருத்தி வாரத்தின் நோக்கத்தைச் சிதைக்கும் வகையில் அவை தவிர்க்கப்பட்டு வருகின்றது. உரிய நோக்குடன் கொண்டாடப்பட்டு வந்த பனை அபிவிருத்தி வாரத்தைத் தனியே ஆடிப்பிறப்புக் கூழுக்குப் பனங்கட்டி விற்பதுடன் சுருக்கிக் கொள்வது எவ்விதத்திலும் ஏற்புடையது அல்ல. இதனைக் கைவிடவோ, மாற்றியமைக்கவோ மாகாணக் கூட்டுறவுத் திணைக்களத்துக்கு எவ்வித அதிகாரமும் இல்லை.

இதன் பல்பரிமாணத்தை வடமாகாணக் கூட்டுறவுத் திணைக்களம் புரிந்துகொண்டு அடுத்த ஆண்டிலிருந்தாவது உரிய காலப்பகுதியில், உரியமுறையில் கண்காட்சிகள், கலை நிகழ்ச்சிகள், ஆய்வரங்குகளோடு மிகச் சிறப்பாகக் கொண்டாட முன்வரவேண்டும். தவறின் தமிழரின் மாண்புமிகு அடையாளமான பனைக்குத் தவறிழைத்த வரலாற்றுப் பிழையைச் சுமக்க நேரிடும் - என்றுள்ளது. (ச-27)




வவுனியா கோயில்குளம் உமாமகேஸ்வரன் வீதியில் அமைந்துள்ள உமாமகேஸ்வரன் நூலகத்தில் வீரமக்கள் தினத்தை முன்னிட்டு இலவச மருத்துவ முகாம் நேற்று இடம்பெற்றது. மருத்துவ முகாமில் இரத்தப் பரிசோதனைகள் உட்பட பல மருத்துவச் சேவைகள் இடம்பெற்றதோடு, கண் பரிசோதனை செய்யப்பட்டு 200க்கும் மேற்பட்டோருக்கு கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. (ம-110)

# பாலைமரக் குற்றிகளுடன் கைதானவருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

பாலை மரக்குற்றிகளுடன் கைதானவருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பிட்டுள்ளது.

யாழ். மாவட்ட வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்துக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய அளவெட்டிப் பகுதிக்கு விரைந்த வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தினர் சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரமின்றி உடைமையில் வைத்திருந்த பாலைமரக் குற்றிகளை அண்மையில் கைப்பற்றினர். இது தொடர்பில் சந்தேகநபருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. கடந்த புதன்கிழமை வழக்கு விசாரணைக்காக எடுக்கப்பட்டது. சந்தேகநபர் குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து அவருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன், மரக்குற்றிகள் அரசுடைமையாக்கப்பட்டன. (ம-125)



# யாழில் நேற்றுமுன்தினம் இரு நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 16

மறைந்த பிரபல எழுத்தாளர் குப்பிழான் ஐ.சண்முகனின் 'ஓர் இலக்கியக்காரனின் வாழ்வனுபவங்கள்' மற்றும் அவரது பாரியார் ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி புனிதவதி சண்முகனின் 'ஆனந்தக் கூத்து' நாட்டிய நாடகத் தொகுப்பு ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மஹால் மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்.வேலணை மத்திய கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் சி.கிருபாகரன் வாழ்த்துரையையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் நூல் வெளியீட்டுரையையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களான தி.செல்வமனோகரன், கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் மற்றும் குருஷேத்திரம் நடனாலய இயக்குனர் கலாபூஷணம் பேரின்பநாயகி சிவகுரு ஆகியோர் நூல் நயப்புரைகளையும் நிகழ்த்தினர். (ம-66)

# அனுமதிப்பத்திரமின்றி இயங்கிய மரக்காலை

## உரிமையாளருக்கு ரூ.50,000 தண்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

அளவெட்டியில் அனுமதிப் பத்திரமின்றிச் சட்டவிரோதமாக மரக்காலை நடத்திய உரிமையாளருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து மல்லாகம் நீதிவான் நீதிமன்று அண்மையில் தீர்ப்பளித்துள்ளது.

யாழ். மாவட்ட வனவள பாதுகாப்புத் திணைக்களத்தினருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய குறித்த மரக்காலையை சோதனைக்குட்படுத்தியபோது அனுமதிப் பத்திரமின்றி மரக்காலை இயங்கி வந்தமை கண்டறியப்பட்டது.

அத்துடன் சட்டவிரோதமாக தேக்குமரக்குற்றிகளையும் வைத்திருந்தமை தெரியவந்தது. அதனையடுத்து சந்தேகநபரான மரக்காலை உரிமையாளருக்கு எதிராக வழக்குப் பதிவுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக் கொண்ட நிலையில் மரக்குற்றிகள் அரசுடைமையாக்கப்பட்டதுடன் 50 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. (ச-125)



# சவுக்கு மரங்களை வெட்டியோர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 16

சுனாமி தடுப்பு வலயமாகக் காணப்படும் வடமராட்சி மணற்காட்டுப் பகுதியில் சவுக்கு மரங்களை சட்டவிரோதமாக வெட்டிய குற்றச்சாட்டில் 6 பேர் அண்மையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். குறித்த பகுதியில் சவுக்கு மரங்கள் வெட்டப்படுவதாக வனவள பாதுகாப்புத் திணைக்களத்தினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்தக் கைது இடம்பெற்றது.

சந்தேகநபர்களிடமிருந்து வெட்டப்பட்ட சவுக்குமரக் குற்றிகள், அவற்றைக் கொண்டுசெல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட சைக்கிள்கள் என்பன கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்களை சட்டநடவடிக்கைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என வனவள பாதுகாப்புத் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ச-125)



யாழ். கோட்டை ஸ்ரீ முனீஸ்வரர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவப் பெருவிழாவின் இரத பவனி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் சிறப்பாக நடைபெற்றது. (ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



தோற்றம் 22 . 03 . 1948

மறைவு 12 . 07 . 2023

### பொன்னுச்சாமி ஜெகதீசன்
**(ஆயுர்வேத வைத்தியர் – பாவட்டை பரியாரியார்)**

பலாலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும். வட்டக்கச்சி, திருகோணமலை ஆகிய இடங்களில் வசித்து தற்போது மல்லாகத்தை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னுச்சாமி ஜெகதீசன் (ஆயுர்வேத வைத்தியர் - பாவட்டை பரியாரியார்) கடந்த (12.07.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி - மகேஸ்வரி தம்பதிகளின் மூத்த புதல்வனும். காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - தங்கம்மா தம்பதிகளின் மருமகனும். வசந்தாதேவியின் அன்புக் கணவரும். வினோதினி (பிரான்ஸ்). மிருணாளினி ( முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - பிரதேச செயலகம். தெல்லிப்பளை) ஆகியோரின் அன்புத் தந்தையும். பார்வதிதேவி (பாடகி). காலஞ்சென்ற முருகதாஸ் (கலைஞன்) மற்றும் சகுந்தலாதேவி (பாடகி). ஆரா அமுதன் (சித்த வைத்தியர்). உமாகாந்தன் (பல்துறை கலைஞர்). பாரதி (பாப்பா) ஆகியோரின் மூத்த சகோதரனும். ஸ்ரீசங்கரின் அன்பு மாமனாரும். சேகுவேரா. யாதவன். யாதவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2023) ஞாயிற்றுக் கிழமை மல்லாகத்திலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் நல்லடக்கத்துக்காக அளவெட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோணப்புலம்,**
**மல்லாகம் வடக்கு, மல்லாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**076 846 2927** (CS/51257) AH-1

## வேலையாட்கள் தேவை

சாவகச்சேரி விக்னேஸ்வரா களஞ்சியத்தில் களஞ்சியம் மற்றும் வாகனத்தில் பொருட்கள் விநியோகம் செய்வதற்கு வேலையாட்கள் தேவை. சாவகச்சேரியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு : **021 227 0355** (CR/37261)

## பணிநிலை வெற்றிடம்

- ✓ இயந்திர இயக்குநர்
- ✓ தேங்காய் உரிக்கும் ஊழியர்
  (பளைப் பிரதேசத்தை அண்மித்தவர்களும். சாரதி அனுமதிப்பத்திரத்தினை உடையவர்களும் விரும்பத்தக்கது)
- ✓ தேங்காய்களை ஏற்றி இறக்குவதற்கான வாகனம் வைத்திருப்போர்.
- நன்கு பழுத்த தேங்காய்கள் நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்படும்.
  (தொடர்ச்சியாக வழங்கக் கூடியவர்கள் தேவை)
- தேங்காய் மட்டைகள் மற்றும் சிரட்டைகள் மொத்தமாக விற்பனைக்குண்டு.

(CR/37251)AH-1

**077 410 9214**

## தொழில்நுட்ப வல்லுநர்கள் தேவை

வட மாகாணத்தில் சிறிய தொழிற்சாலைகளுக்கான புதிய இயந்திரங்கள் பொருத்துநர்கள், இயந்திரம் பழுதுபார்ப்பவர்கள் மற்றும் பராமரிப்பவர்கள் இத் தொழிற்சாலைகளுக்கான மின் இணைப்புக்கள் மற்றும் திருத்த வேலைகள் மேற்கொள்ளக்கூடிய தகுதி வாய்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் தேவை.

**077 670 5677**

## அறைகள் வாடகைக்கு

வெள்ளவத்தையில் காலி வீதியில் கொமர்ஷியல் வங்கிக்கு முன்பாக (Opposite Commercial Bank) அறைகள் நாள் வாடகைக்கு உண்டு.
(Tiles and Attached Bathroom)

(CS/24976)AH-1

**076 965 9679, 071 262 5405**

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவகுலம் **(V).** 1985 இல் பிறந்த **BSc, MSc** தகைமை உடைய குறுகிய கால விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு படித்த தகுதியான மணமகன் தேவை.

**077 413 7211**

## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை முதலாம் கட்டையில் இருந்து 300 m தூரத்தில் 3 பரப்புக் காணியுடன் சகல வசதியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

**076 103 3150, 077 725 2702**

## பணிப்பெண் தேவை

தெகிவளையில் வயோதிபத் தாயாரை வீட்டில் தங்கியிருந்து மகள் போல் பார்த்துக்கொள்வதற்கு அன்பும் பொறுமையும் கொண்ட பெண்ணொருவர் தேவை.

**077 433 4445**

## மணமகள் தேவை

லண்டன் வயது 38 கிறிஸ்தவர் எவ்வித தீய பழக்க வழக்கங்கள் அற்ற நற்குணம் உள்ள மணமகனுக்கு நற்குணம் உள்ள மணமகள் தேவை. அண்மையில் எடுத்த புகைப்படம் தொலைபேசி இலக்கத்துடன் கீழ் காணும் மின் அஞ்சல் முகவரிக்கு தொடர்புகொள்ள வேண்டும்.

E.mail - Sathesmennen@yahoo.com


# நீங்காத நினைவுகளில் 14 ஆண்டுகள்.....



### அமரர்
# சுப்பிரமணியம் நாகராஜா
**(Retired MSO Jaffna Post Office)**

திதி:- சதுர்த்தசி (16.07.2023) ஞாயிற்றுக்கிழமை

மலர்வு 18 . 07 . 1930



உதிர்வு 22 . 06 . 2009

**அப்பா உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்**

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காக நம் குடும்பத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து அனைவரது வாழ்வினையும் பிரகாசிக்கச் செய்த **அமரர் சுப்பிரமணியம் நாகராஜா** அவர்களது ஆத்ம சாந்திக்காக **இன்று (16.07.2023) ஞாயிற்றுக்கிழமை கைதடி வீரகத்திப் பிள்ளையார் சிவன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள்** இடம்பெற்று **சுன்னாகம் வாழ்வக விழிப்புல வலுவிழந்தோர் இல்லம், வவுனியா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளக முதியோர் இல்லம், புதுக்குடியிருப்பு இனிய வாழ்வு இல்லம்** ஆகிய பராமரிப்பு நிலையங்களிலுள்ள **சிறுவர்கள், முதியோர்களுக்கு விசேட மதிய உணவும்** வழங்கப்படும்.

**குடும்பத்தினர் சார்பாக**
**மகன் - நாகராஜா விஜயகுமார் (சங்கர்) - சுவிஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்பம் (V). மிருகசீரிட இடபராசி. சூரியசெவ்வாய் (I). 1987 ஆம் ஆண்டு பிறந்த சொந்தத் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. (அரச தொழிலும் விரும்பத்தக்கது)

**பொருத்தமான நட்சத்திரங்கள்:**

பூசம். அனுஷம். உத்தரட்டாதி. அச்சுவினி. மகம். ஆயிலியம். கேட்டை. ரேவதி.

**070 683 3711** (CS/51268) AH-1

## பணியாளர்கள் தேவை

**நல்லூரில் இயங்கிவரும் உற்பத்தி நிறுவனத்துக்குப் பின்வரும் பணியாளர்கள் தேவை.**

- ☑ கணினி பதிவு (பெண்)
- ☑ உற்பத்தி பிரிவு (பெண்)
- ☑ விற்பனை / சந்தைப்படுத்தல் (ஆண்)
- ☑ சாரதிகள் (ஆண்)

(CS/51240)AH-1

மேலதிக விபரங்களுக்கு

**077 863 0888, 021 221 0888**

## விற்பனைக்கு

- மல்லாகத்தில் வீட்டுடன் காணியும்
- 2 ஆம் குறுக்குத் தெருவில் காணியும்
- மீசாலை வடக்கில் வேம்பிராய் வீதியில் வீட்டுடன் காணியும் விற்பனைக்குண்டு.

Contact number

**+94 77 221 5531** (cs 51269) (N.1)

## காணி விற்பனைக்கு

கோண்டாவில், பலாலி வீதியில் இருந்து 100m தூரத்தில் 17 பரப்பு குளி 17.3 காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கு, களஞ்சியசாலை, நிறுவனங்களுக்கு உகந்த இடம்.

**076 821 9414** (CS/51250)AH-1

## காணி விற்பனைக்கு

அரியாலை திருமகள் சனசமூக நிலையத் திற்கு முன்னால் 1 1/4 பரப்பு 2 குழி 10 அடி ஒழுங்கை கொண்ட வெட்டுக் கிணறு மற்றும் மலசல கூடம் அமைய பெற்றுள்ள காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 077 664 8287**
**076 651 7648** (CS 51262) A-1

## Rent

Rooms Available only for Girls.
Rooms with attached Bathroom,
Near the Jaffna town and Hospital
Suitable for. Doctors, Medical Students and Workers.

**Contact:- 076 313 6818**

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் பிரபல சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலைக்கு ஆட்கள் தேவை

- ✔ உணவு பரிமாறுபவர் ஆண்/ பெண்
- ✔ துப்பரவு பணியாளர் ஆண்/ பெண்
- ✔ தேநீர் தயாரிப்பவர்

தொடர்பு:

**076 166 1986**

## கணினி தட்டெழுத்தாளர் தேவை

கொக்குவிலில் உள்ள அலுவலகம் ஒன்றிற்கு (Computer Typing (Tamil, English) செய்யக்கூடிய பெண்பிள்ளைகள் வேலைக்குத் தேவை.

தகுந்த ஊதியம் வழங்கப்படும்.

**077 138 6601** (cs.51266)(N-1)

## காணி விற்பனைக்கு

யாழ். சுண்டுக்குளி மொறிஸ் ஒழுங்கையில் 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு.

இடைத்தரகர்கள் தேவையில்லை

**076 156 2983** (cs.51263)(N-1)

## மணமகன் தேவை

சுவீடன் மற்றும் கனடாவை வதிவிடமாக்கொண்ட (28,23) வயதுடைய பெண்களிற்கு மணமகன்கள் தேவை.

**074 353 6881** (cs.51265)(N-1)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கேட்டை நட்சத்திரம் கிரகபாவம் 20 ஐக் கொண்ட 37 வயதினையுடைய Postman (A/L) மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு : **070 606 8453** (cs.51267 )(N.1)

# சுகாதார அமைச்சராக மீண்டும் ராஜித?

### அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு



கொழும்பு, ஜூலை 16

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளு மன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன மீண்டும் சுகாதார அமைச்சராக நிய மிக்கப்படக்கூடும் என கொழும்பு அர சியல் வட்டாரங்களில் பரபரப்பாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை முன்வைப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகிவருகின்றது.

இதற்கிடையில் கெஹலிய ரம்புக்வெல பதவி விலகக்கூடும் எனவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. இவ்வாறான தொரு பின்புலத்தி லேயே கெஹலிய பதவிவிலகினாலோ அல்லது நம்பிக் கையில்லாப் பிரே ரணை மூலம் பதவி விலக்கப்பட் டாலோ புதிய சுகா தார அமைச்சராக ராஜித நியமிக்கப் படலாம் என தெரி யவருகின்றது.

(அ-ஒ,44)

## சிறுநீரகம் தேவை

50 வயதினையுடைய நபரொருவருக்கு AB+ குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

**076 244 4279** (CS/51270)AH-1

## தேவை

பொதியிடல், பில் கிளாக், உதவியாளர், மாவறுத்தல் (1200/=) என்பவற்றிற்கு பெண் ஊழியர் தேவை.

பிருந்தா மில், 184, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

**077 174 6101**

## பணிப்பெண் தேவை

கொழும்பில் ஒரு சிறிய தமிழ் குடும்பத்துக்கு வீட்டு, சமையல் வேலைக்கு பணிப்பெண் தேவை.

**072 339 7399** (CS/24980)AH-1

## பூந்தோட்டப் பராமரிப்பாளர் தேவை

**யாழ். நகரை அண்டிய பகுதியில் பூந்தோட்டமொன்றைப் பராமரிக்க, அனுபவமுள்ளவர் தேவை.**

**தொடர்பு:- 077 959 0793**

## விற்பனைக்கு

வீடு கட்டுவதற்கு உகந்த நிலையில் 700 கொங்கிறீட் கற்கள் விற்பனைக்குண்டு.

**075 742 7608** (CS/51258 AH-1

## வீடு விற்பனைக்கு

**வெள்ளவத்தை காலி வீதியிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் 6.29 Perch காணியில் தனி வீடு ( 2 Units ஆகவும் பாவிக்கலாம் ) விற்பனைக்கு உண்டு.**

No Brokers : 077 30 13 236

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 85 ரூபாய்

**077 334 1281**

## யாழ்ப்பாணம் மாநகர சபை
## நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் -2023

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பப் படிவங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும்.

- **கேள்விப்படிவக் கட்டணம்** :- ரூபா 1,000.00 + Vat 15%
- **கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி** :- 17.07.2023 தொடக்கம் 31.07.2023 (ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த நாட்களில் மு.ப 9.00 - பி.ப 2.30 மணி வரை)
- **கேள்விப்படிவம் விநியோகிக்கும் இறுதித் திகதி** :- 31.07.2023 பி.ப 12.30 மணி வரை
- **கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல்** :- 01.08.2023 முற்பகல் 10.00 மணி வரை
- **கேள்விப்படிவம் திறத்தல்** :- 01.08.2023 முற்பகல் 10.00 மணிக்கு
- **தற்காலிக கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம்** :- ரூபா 2,000.00

விண்ணப்பப் படிவங்கள் யாவும் ஆணையாளர். மாநகர சபை. யாழ்ப்பாணம் என முகவரியிட்டு நானாவித இறைவரி பகுதியில் வைக்கப்படும் கேள்விப்பெட்டியினுள் 01.08.2023 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமூகமளித்தல் வேண்டும். கேள்வியில் சித்தி பெற்றவர்கள் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகர சபை நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

(CR 37264)AH-1

## YALL Aruvi

# Bottled Drinking Water

**எமது நிறுவனம் SLS 894 தரச் சான்றிதழ்களைப் பெற்றுள்ளதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத் தருவதுடன் மீண்டும் எமது Home Delivery Service விஷேட விலைக் கழிவுடன் தங்கள் வீட்டு வாசல் தேடி.......**

**புதிதாக இணையும் வாடிக்கையாளர்களுக்கான விஷேட சலுகை - 19l Refil - 275.00**

**மேலும் உங்கள் நிகழ்வுகள் எதுவானாலும் தங்களுக்கு வேண்டிய அளவுகளில் (0.5l, 1l, 1.5l, 5l,7l) SLS 894 தரத்தில் விஷேட விலைக்கழிவில் நீங்கள் பெற்றுக்கொள்ள அழையுங்கள்.**

**077 863 0888**
**074 042 8122** (CS/51244)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இன ஒற்றுமையை வலியுறுத்தி வவுனியாவில் கவனவீர்ப்பு!

வவுனியா, ஜூலை 16

கறுப்பு ஜூலைக் கலவரத்தை நினைவுகூர்ந்தும், இன ஒற்றுமையை வலியுறுத்தியும் வவுனியாவில் நேற்றுமுன்தினம் கவனவீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

சோசலிச இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் மூவின மக்களின் பங்குபற்றுதலுடன் வவுனியா பழைய பேருந்து நிலையம் முன்பாக இந்தக் கவனவீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

கவனவீர்ப்பில் ஈடுபட்டவர்கள், 'இனியும் கலவரம் வேண்டாம்', 'பிரிவினைகள் வேண் டாம்', 'சமூக ஒற்றுமையைக் குலைக்காதே', 'ஆட்சியாளர்களே இனவாதத்தைத் தூண்டாதே', 'யாழ் நூலகத்தை எரித்தது இனவாதமே', 'நாடு பூராகவும் ஜூலைக் கலவரத்தை திட்மிட்டு நடத்தியது ஆட்சியாளர்களே' என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர். (ம-110)













# இலவச சித்த மருந்தகம் மிருசுவிலில் திறப்பு

கொடிகாமம், ஜூலை 16

உள்ளூராட்சி அபிவிருத்தி உதவித் திட்ட நிதியனுசரணையில் நிர்மாணிக்கப்பட்ட இலவச சித்தமருந்தகம் மற்றும் உபஅலுவலகம் என்பன மிருசுவிலில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டன.

சாவகச்சேரி பிரதேசசபையின் செயலாளர் க.சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் பங்கேற்றார். சுகாதாரப் பரிசோதகர்கள், ஆயுள்வேத உத்தியோகத்தர்கள் மற்றும் சாவகச்சேரி பிரதேசசபையின் உத்தியோகத்தர்கள், உறுப்பினர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ச-159)





# தேசிய நல்லிணக்கத்தை சிதைக்க இடமளிக்கோம்

## யாழ்ப்பாணத்திலும் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

தேசிய ஒற்றுமையை வலியுறுத்தி 'பிரிப்பதற்கு இடங்கொடோம் ஒன்றாய் நாம் பறந்திடுவோம்' எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் யாழ். மத்திய பேருந்து நிலையம் முன்பாக நேற்று சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் இளைஞர் அமைப்பான சோசலிச இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. (ச-26-125,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகதம்பிரான் ஆலயத்துக்கு பழைய நிர்வாகம் மீளத் தெரிவு

கிளிநொச்சி, ஜூலை 16

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. கண்டாவளை பிரதேச செயலாளர் தலைமையில் ஆலய முன்றிலில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது முன்னாள் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர் அந்தந்தப் பதவிகளுக்கு ஏகமனதாக மீளவும் தெரிவு செய்யப்பட்டனர். (ச-113)



## குருந்தூர்மலை...

குருந்தூர்மலையில் நேற்றுமுன்தினம் வழிபடச்சென்ற தமிழ் மக்கள், பிக்குகளாலும் சிங்கள மக்களாலும் பொலிஸாராலும்இடையூறு விளைவிக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டமை தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

'வெட்கித்தலைகுனிய வேண்டிய செயற்பாடு. இந்தப் பிரச்சினைக்குப் பின்னால் இருக்கும் குழுவினரை அடையாளம் காணவேண்டும். அந்தக் குழுதான் தமிழ் மக்களையும் பௌத்த - சிங்கள மக்களையும் முட்டிமோதவிட்டு வேடிக்கை பார்க்க எண்ணுகின்றது. இந்தப் பிரச்சினைக்கு விரைந்து ஒரு தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதில் நீதி அமைச்சர் என்ற ரீதியில் நான் உறுதியாகவுள்ளேன். அதேவேளையில் நீதித்துறைக்கு சவால்விடும் வகையிலும் குருந்தூர் மலையை சிலர் பயன்படுத்த முற்படுகின்றனர். இது நாட்டுக்கு அவமானத்தை ஏற்படுத்தும் செயல். அனைத்துக்கும் விரைந்து இணக்கமான சூழலை ஏற்படுத்தவேண்டும்' என்றார் விஜயதாஸ.

(அ-ஒ.5,22)

## வழிபாட்டுரிமை...

நீதிமன்றக் கட்டளையைப் பிக்குகளுடன் இணைந்து பொலிஸார் உதாசீனம் செய்தமைக்கு எதிராகவும் ஒட்டுமொத்தத் தமிழர்களும், சைவர்களும் எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டுமென அகில இலங்கை சைவமகாசபையின் பொதுச் செயலர் மருத்துவக் கலாநிதி ப.நந்தகுமார் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குருந்தூர் ஆதிசிவன் மலையில் வழிபாடுகளுக்கு அரச இயந்திரத்தாலும், மாற்று மதத்தவர்களாலும் மிக மிலேச்சத்தனமான முறையில் இடையூறு விளைவிக்கப்படுவது, பொங்கல் பானை உட்பட சைவ வழிபாடுகள் பொலிஸாராலேயே மிதித்து மானபங்கப்படுத்தப்படுவது நிறுத்தப்படும் வரை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தைப் புறக்கணிக்கத் தமிழ்ச் சைவ அமைப்புகள் கோர வேண்டுமெனவும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

(அ-ஒ.66)

## போலியான...

வரத்துத் திணைக்களத்திடம் புதுப்பிக்கச் சென்ற தெல்லிப்பழையைச் சேர்ந்த நபர் யாழ். மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் போலி சாரதி அனுமதிப் பத்திரம் தயாரித்த குற்றச்சாட்டில் இருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பலருக்கும் பணத்தைப் பெற்று போலியாக சாரதி அனுமதிப் பத்திரம் தயாரித்துக் கொடுத்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இதனையடுத்து மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினரும் உசார்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை போலி சாரதி அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கு சென்ற போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார். சாரதி அனுமதிப்பத்திரப் பரீட்சைக்குத் தோற்றி இரு தடவை சித்தியடையாத நிலையில், 50 ஆயிரம் ரூபா பணத்தைச் செலுத்தி போலிச் சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டதாக விசாரணைகளில் தெரிவித்துள்ளார். (ஒ.26)

## கோழி இறைச்சி...

குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை கோழியிறைச்சி வர்த்தகர் சங்கம் தெரிவித்துள்ளது. கோழியிறைச்சி ஒரு கிலோக் கிராம் ஒன்றின் விலை ஆயிரத்து 450 ரூபா வரையில் குறைவடைந்துள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர குறிப்பிட்டுள்ளார். விலங்குத் தீவனங்களின் விலைகள் குறைவடைந்துள்ளமையால் கோழியிறைச்சியின் விலையும் குறைக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-ஒ.இ)

## குருந்தூர்மலையில்...


விளைவிக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டமை தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

'குருந்தூர்மலை விவகாரத்தை வைத்து ஒரு தரப்பினர் அரசியல் லாபம் தேட முற்படுகின்றனர். இன்னொரு தரப்பினர் மதக் கலவரத்தை ஏற்படுத்த முனைகின்றனர். இவையிரண்டும் தற்போதைய நிலைமையில் தேவையற்றவை. குருந்தூர்மலை வழிபாட்டிடம், அங்கு எவரும் சென்று வழிபடலாம். இந்தநிலையில் அங்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண்பது எமது கடமை. சம்பந்தப்பட்ட இரு தரப்பினருடனும் நாம் கலந்துரையாடி தீர்வு பெற்றுக்கொடுப்போம்' என்று ரணில் குறிப்பிட்டார்.

(அ-ஒ.5,22)

# மரண அறிவித்தல்

## பொன்னையா சீவரத்தினம்



தோற்றம் 07.09.1932 — மறைவு 13.07.2023

சோனெழு, கோப்பாய் மத்தி, கோப்பாயை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா சீவரத்தினம் கடந்த (13.07.2023) அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
சோனெழு,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

(CS 25543) A-1


## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் உள்ள பிரபல புடைவையகத்திற்கு முகாமையாளர் மற்றும் விற்பனையாளர்கள் (ஆண், பெண் இருபாலாரும்) தேவை. அருகில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு :
077 3151 341, 077 7251 143


# மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 10 . 2000



மறைவு 15 . 07 . 2023

## புஸ்பராசா எழில்நாத்

(தொழில்நுட்ப பிரிவு 1ம் வருட மாணவன், அறிவியல்நகர் யாழ்.பல்கலைக்கழகம்

லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பராசா எழில்நாத் அவர்கள் நேற்று (15.07.2023) சனிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் ஐயாத்துரை புஸ்பராசா -புஸ்பராசா வத்சலா தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, அருளம்மா, நவரட்ணம் சத்தியபாமா ஆகியோரின் பாசமிகு பேரனும், கனகசபாபதி, சுப்பிரமணியம், தங்கராசா, இராசரட்சுமி, ரட்ணசிங்கம், மேனகா, சகுந்தலா, அமரர் ரேனுகா ஆகியோரின் பெறாமகனும், தனேஸ், டினேஸ், லோஜன், கிருஜன், விபூஷா, விதுஷா, பியூனிஷா, வினோஷன், கஜலக்சனா, ரிஷானி, உருத்ரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஐங்கரன், அபிராமி, ஆதவன், ஆதித்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.07.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

(CS 25548)A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 11 . 1984



மறைவு 15 . 07 . 2023

## எம்பெருமான் குமரவேள்

முள்ளியவளையை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி திருநகர் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட எம்பெருமான் குமரவேள் அவர்கள் நேற்று (15.07.2023) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் எம்பெருமான் தவபுத்திரி தம்பதியரின் அன்பு மகனும், விக்னேஸ்வரி (அதிபர்- சிலாவத்தை மகா வித்தியாலயம்) அவர்களின் பெறாமகனும், காலஞ்சென்ற நந்தகுமார் மற்றும் யோகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், அருட்செல்வி (பிரதேச செயலகம் - கரைச்சி) அவர்களின் பாசமிகு கணவரும், அக்சயா (கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்), டர்னியா (ஆதவன் முன்பள்ளி), அகர்ணியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்சினி, விஜயபாலா (சுவிஸ்), பௌசிகா (ஆசிரியர் - சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவாஸ்கரன் (ஆசிரியர் - முத்தையன்கட்டு வலதுகரை மகா வித்தியாலயம்), கிறிஸ்ரீனா (சுவிஸ்), குகதர்சன் (மின்சாரசபை - யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும், கரிவேணன், ஆரதி ஆகியோரின் சிறிய தந்தையும், லேபிரதித், திக்சிகா, தக்ஷித், ரோகித் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 3.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழர்களுக்கு...

குருந்தூர்மலையில் நேற்றுமுன்தினம் வழிபடச்சென்ற தமிழ் மக்கள், பிக்கு களாலும் சிங்கள மக்களாலும் பொலி ஸாராலும் இடையூறு விளைவிக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டமை தொடர்பில் சம்பவ இடத்தில் நேரடியாக இருந்த செய் தியாளர்கள் அறிக்கையிட்டுள்ளமை தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண் டவாறு பதிலளித்தார்.

'குருந்தூர்மலைக்கு பௌத்தர்கள் வழி படத்தான் சென்றிருந்தார்கள். அவர்கள் வன்முறையைத்தூண்டச்செல்லவில்லை. குருந்தூர்மலையில் பிரிவினைவாதி களான தமிழ் சட்டத்தரணிகளும் தமிழ் அரசியல்வாதிகளும் தமிழர்களைத் தூண்டி விட்டு வேடிக்கைபார்க்க முயன் றனர். அவர்களின் கனவும் நேற்றுத் தவிடுபொடியாகிவிட்டது. இந்த நிலை யில் பொலிஸார் மீதும் குருந்தூர் மலை பிக்கு மீதும் வழிபடச் சென்ற பௌத்தர் கள் மீதும் குற்றம்சாட்டுவது ஏற்கக்கூடி யது அல்ல. வடக்கிலும் தெற்கிலும் உள்ள சில ஊடகங்கள் ஒரு தரப்பின் கருத்துகளை மட்டும் செவிசாய்த்துக் கொண்டு செய்திகளை வெளியிடுகின் றன. அந்த ஊடகங்கள் இரு தரப்பின ரது கருத்துகளையும் கேட்டறியவேண் டும். அதேபோல் செய்தியாளர்களும் உண்மையை வெளியுலகுக்கு படம்பிடித் துக்காட்டவேண்டும்' என்று பதிலளித்தார் வீரசேகர. (அ-ஓ.5,22)

### '13' ஐ...

திருத்த நடைமுறையாக்கம் ஓரளவு அதிகாரங்களைப் பெற்றுக்கொடுக்க வல்லது - இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக் கள் கூட்டணியின் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் செல்வநாயகம் நினைவு கலையரங்கத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ் வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தா வது:-

13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழான அதிகாரப் பகிர்வென்ற முறையில் மலை யகக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தி ருக்கலாம். தமிழ்ப் பேசும் முஸ்லிம் கட்சி உறுப்பினர்களையும் உரிய காலத்தில் உள்ளடக்கவேண்டும் என்ற எண்ண மும் இருப்பதாகக் கேள்வி.

13ஆவது திருத்தச் சட்டம் வட கிழக்கு மக்களின் நிரந்தரத் தீர்வல்ல. ஒற்றை யாட்சியின் கீழ் பாற்பட்டது. ஒற்றையாட்சி தமிழ் மக்களை சிங்கள பெரும்பான் மையினரின் கீழ் நிரந்தரமாக அடிமைப் படுத்தவல்லது. நாங்கள் நிரந்தர தீர்வை எட்ட தற்போது உடனே முயற்சிக்க வில்லை. எமது முடிவான குறிக்கோள் எதுவாக இருப்பினும் தற்போது வட கிழக்கு தமிழ் மக்களுக்கு இருக்கும் பிரச் சினைகள் அறியப்பட வேண்டும் என்று நம்புகின்றோம். அதனால் எமது குறை கள் பற்றிய ஒரு இருப்பு, கணக்கெடுப்பு எடுத்தல் அவசியமாகின்றது. எடுத்த பின் அவற்றைத் தீர்க்க என்ன செய்ய லாம் என்று நாங்கள் முடிவு எடுக்க வேண்டும், அதற்கான வழிமுறைகளை அடையாளப்படுத்த வேண்டும். அதன் பின் தற்போதிருக்கும் சட்டங்களை வலு வாக்கி அவை மூலமாக எவ்வெவற்றை உடனே தீர்க்கலாம் என்று ஆராய வேண்டும். அதேநேரத்தில் எமது நிரந் தரத்தீர்வுக்கும் வழிவகுக்கவேண்டும்.

போதிய அதிகாரங்களைத் தராத 13 ஆவது திருத்தச்சட்டத்தை முற்றும் முழு துமாக நடைமுறைப்படுத்தக் கோருவது ஏன் என்ற கேள்வி உள்ளூரில் இருந் தும் வெளிநாடுகளில் இருந்தும் தமிழ் உறவுகளால் கேட்கப்பட்டு வருகின்றன. இவர்களுக்கு மூன்று விடயங்களை நினைவுபடுத்த வேண்டியுள்ளது.

நாங்கள் நிரந்தரத் தீர்வை எண்ணிப் போராடும் போது, நில மட்டத்தில் காணி கள் பறிபோகின்றன. வளங்கள் சூறை யாடப்படுகின்றன. அதிகாரங்கள் அபக ரிக்கப்படுகின்றன. வடக்கு - கிழக்குத் தமிழ்த் தாயகம் கூறு போடப்பட்டு வரு கின்றது. வடக்கு - கிழக்கின் தொடர்ச்சி அறுபட்டு வருகின்றது. இவை உடனே நிறுத்தப்படவேண்டுமல்லவா? சமஷ்டி அல்லது வடக்கு - கிழக்கு மக்கள் தீர்ப்பு வரும் வரையில் இவை தாமாகவே நிறுத் தப்பட்டிருப்பனவா?

உள்ளூரில் நாங்கள் சமஷ்டி கேட்க வெளிநாடுகளில் எம்மவர் தனிநாடு கோரி வருகின்றார்கள் அல்லவா? இது உள்ளூரில் எம்மை எவ்வாறு பாதிக்கின் றது என்பதை நாம் அறிந்துள்ளோமா? சமஷ்டிக்கு சம்மதம் தெரிவிக்கும் சிங்க ளச் சிந்தனையாளர்கள் கூட எமது புலம் பெயர்ந்தோரின் குறிக்கோளை மனதில் எடுத்து சமஷ்டி வேண்டாம் என்று கூறு வதை எம்மவர் எத்தனை பேர் அறிவர்? கையில் உள்ள ஒரு பழத்தை ருசி பார்க் காது புதரிலுள்ள இரண்டு பழங்களுக் காகப் போராடுவது ஈற்றில் கையில் இருக்கும் ஒரு பழத்தையும் பறிகொடுக் கவல்லது என்பதை நாம் உணர்ந்து கொண்டுள்ளோமா? 2009 ஆம் ஆண் டின் பின்னர் எமது நிலை மிகக் கவ லைக்கிடமாக மாறியுள்ளதை நாம் உணர்கின்றோமா?

இவற்றைவிட மிக முக்கியமானதொரு விடயம் உள்ளது. நாம் தேர்தல் மூலம் ஜனநாயக முறைப்படி மக்களால் மாகா ணசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள் ளோம் என்ற விடயமே எமக்கு ஒரு பலம் என்பதை நீங்கள் யாவரும் உணர வேண்டும்.

நான் 2013இல் முதலமைச்சராக தேர்ந் தெடுக்கப்பட்டபோது வடமாகாணமெங் கும் படையினர் மிக்க அதிகாரத்துடன் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். எந்த ஒரு பொதுக் கூட்டம் நடந்தாலும் அங்கு ஒரு இராணுவ உயர் அதிகாரி மேடை யில் அமர்ந்திருப்பார். நான் முதலமைச் சர் ஆகிய சில வாரங்களில் விசுவமடு வில் ஒரு கூட்டத்துக்குச் சென்றேன். துப் பாக்கிகள் சகிதம் சுமார் 25 படையினர் மண்டபத்துக்கு வெளியில் நின்றார்கள். நான் வாகனத்தில் இருந்து இறங்கிய தும் அத்தனை பேரும் எனக்கு சல்யூட் அடித்தார்கள்.

நான் மேடையில் ஏறியபோது அங்கு ஒரு உயர் இராணுவ அதிகாரி ஏற்க னவே இருந்து கொண்டிருந்தார். முதல மைச்சர் வந்ததால் மற்றவர்கள் எழுந்த னர். அவர் அலட்சியமாக இருந்து கொண்டிருந்தார். நான் கூட்டத்தில் பேசியபோது இப்பொழுது மக்களால் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள் அதிகாரத்துக்கு வந் துள்ளோம். தொடர்ந்தும் படையினர் இவ்வாறான கூட்டங்களில் கலந்து கொள்ள அவசியமில்லையே என்று பொதுவாகக் கூறினேன் கூட்டம் முடிந்த தும் எனக்குப் பின்னுக்கு கதிரையில் இருந்த உயர் அதிகாரியிடம் 'என்ன? நான் கூறியது சரிதானே?' என்று கேட் டேன். அவர் எதுவும் கூறவில்லை. சற்று கொதிப்படைந்திருந்தார் என்று தெரிந் தது. நான் மண்டபத்தை விட்டுச் செல் லும்போது ஒவ்வொரு படைவீரரும் வேறெங்கோ பார்த்துக் கொண்டிருந்த னர்! எவரும் சல்யூட் அடிக்கவில்லை! நான் சிரித்தும் அவர்கள் எவரும் சிரிக்க வில்லை! இந்தக் கூட்டத்துக்குப் பின்னர் படிப்படியாக படையினர் எமது கூட்டங்க ளுக்கு சமுகமளிப்பதை ஓரளவு குறைத்து வந்தார்கள். எமது மக்களின் கை ஓங்க அவர்கள் பின்வாங்கத் தொடங்கினர். காலாகாலத்தில் எந்தப் படையினரும் எமது கூட்டங்களுக்கு வரவில்லை.

அதிகாரமில்லாத 13ஆவது திருத்தச் சட்டத்தால்தான் இதைச் செய்ய முடிந் தது. அந்தத்திருத்தச் சட்டம் ஊடாக நிகழ்த்தப்பட்ட மாகாணசபைத் தேர்த லில் மக்கள் வாக்களித்த ஒரு காரணத் தால் படையினர் மக்கள் பிரதிநிதிகளை மதிக்க வேண்டியிருந்தது. 13ஆவது திருத்தச் சட்டம் எவ்வாறான அதிகாரங் களை வழங்கியுள்ளது என்பதிலும் பார்க்க மக்கள் பிரதிநிதிகள் அதிகாரத் தில் உள்ளார்கள் என்று ஒரு விடயமே எமக்கு சில அதிகாரங்களையும், அடை யாளங்களையும், மதிப்பையும், மரியா தையையும் வழங்கியது - என்றார். (அ-ஓ.125)

### 13 ஐ உதறித்...

அதிகாரப் பகிர்வுகான இயக்கத்தின் ஏற் பாட்டில் '13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைபடுத்துவதும் இந்தியாவின் வகிபாகமும்' என்ற தலைப்பிலான கலந்துரையாடல் யாழ்ப் பாண மத்திய கல்லூரி அருகில் உள்ள செல்வநாயகம் நினைவு கலையரங்கத் தில் நேற்று மாலை நடைபெற்றது. இதில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர்கள் இவ்வாறு கூறினர்.

இந்த நிகழ்வில் அகில இலங்கை தமிழர் மகாசபையின் தலைவர் கா.விக்னேஸ் வரன், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க.வி.விக்னேஸ்வரன், ஈ.பி.டி. பி. சார்பில் வடக்கு மாகாணசபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா, தமிழ் மக்கள் விடுதலைப் புலி கள் கட்சி சார்பில் அந்தக் கட்சியின் செயலர் பூ.பிர சாந்தன், ஈ.பி. ஆர்.எல்.எப். சார் பில் அந்தக் கட்சி யின் தலைவர் சுரேஷ் பிரேமச் சந்திரன், தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் தலைவர் திருநாவுக்கரசு சிறீ தரன், சமத்துவக் கட்சியின் தலைவர் மு.சந்திரகுமார், ஈழவர் ஜனநாயக முன் னணியின் செயலர் இ.பிரபாகரன், புளொட் சார்பில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகி யோர் உரையாற்றினர்.

இராஜாங்க அமைச்சர்களான சிவநேச துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), வியாழேந்திரன், இலங்கைத் தமிழ் அர சுக் கட்சியின் தலைவர் மாவை.சோ. சேனாதிராசா மற்றும் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்துகொள்வதாக அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டபோதும் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. (அ-ஓ.125)

### இணைய...

மாணவன் ஒருவன் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை யைச் சேர்ந்த புஸ்பராசா எழில்நாத் (வயது - 22) என்ற கிளிநொச்சி அறிவி யல்நகர் பல்கலைக்கழகம் மாணவனே உயிரிழந்துள்ளான்.

தாயும், தந்தையும் நேற்று வேலைக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர். மதியம் தந்தை வீடு திரும்பியுள்ளார். இதன் போது பல்கலை. மாணவன் தவறான முடிவு எடுத்து உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளான்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஓ.26)


## விற்பனைக்கு

*Honda CD-200 Road Master 1 சோடி சைலன்சர் Brand New ஜப்பான்.
*Honda Bendly-125 Brand New சைலன்சர், வெள்ளிரும்பு சைலன்சர் விற்பனைக்கு உண்டு.

077 699 9021

## வேலையாள் தேவை

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட வியாபார நிலையமொன்றில் கணக்காளர் வேலைக்கு 40 வயதிலிருந்து 60 வயதிற்குட்பட்ட ஆண் தேவை. (யாழ். மாநகரசபைக்குட்பட்டவர்கள் விரும்பத் தக்கது)

தொடர்பு:-
076 057 0354

(CS 25538) A-1

## வீடு விற்பனைக்கு

நாவற்குழியில் 1 1/4 பரப்பில் அமைந்த வீடு. குடிநீர் கிணறு மற்றும் பயனுள்ள மரங் களுடன் A-9 வீதியிலிருந்து 500m தொலை வில் உள்ளது.
விலை 45 லட்சம்
077 358 2704

## தேவை

பொதிகள் சேவை நிறுவனத்திற்கு உதவியாளர் தேவை. A/L குறைந்த தகைமையாகும். நல்லூர், யாழ்ப்பாணத்திற்கு அண்மித்த பகுதியில் இருப்பவர் விரும்பத்தக்கது. கிளிநொச்சியில் உள்ள நிலையத்திற்கு ஆண் உதவியாளர் தேவை.
074 200 1214, 070 330 5500

## சரவணபவன் பென்சி கவுஸ் இன் மாபெரும் ஆடித் தள்ளுபடி

கொழும்பு மொத்த விலையில் 30% விலைக்கழிவுடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். பிளாஸ்ரிக் பொருட்கள், கிறீம் வகைகள், பான்சி வகைகள், பாட்டா வகைகள், சில்வர், மாபிள், அலுமினிய பொருட்கள், சோடனை பொருட்கள், விளையாட்டு பொருட்கள், மணிக்கூட்டு வகைகள், தையல் உபகரணங்கள், அன்பளிப்பு பொருட்கள், மொடல் பட்டின்கள், குடைகள், அழகுசாதன பொருட்கள், மாஸ்க் வகைகள், கவரிங் வகைகள், பாடசாலை உபகரணங்கள், பாக் வகைகள் இன்னும் பல பொருட்கள் ஒரே இடத்தில் மலிவாக பெற்று கொள்ளலாம்.

உரிமையாளர்:
தே. கலைதாசன் (கரன்)
021 3155 900

26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், (கஸ்தூரியார் வீதி)யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை
நெல், தானியங்கள், தேங்காய், கொப்பறா, மில் உபகரணங்கள் மற்றும் கூலி ஆட்கள் தேவை. தொடர்பு: 077 772 2215

## பெண் வேலையாள் தேவை
யாழ்ப்பாணத்தில் உள்ள Lovely Flower கடை ஒன்றுக்குப் பெண் வேலையாள் தேவை.
077 400 5023

## வேலையாள் தேவை
கோண்டாவிலில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு பெண் சமையலாளர் தேவை. கடமை நேரம் காலை: 7.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
076 119 0267

## மணமகள் தேவை
1994 இல் பிரான்ஸ் நாட்டில் பிறந்த எஞ்சினியராகப் பணிபுரியும் மணமகனுக்குப் பிரான்ஸில் உள்ள அவருக்குத் தகுதியான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (மணமகனின் குடும்பம் பிரான்ஸில் வசிக்கிறார்கள்) (CS/51243)AH-1
075 021 1810 (இலங்கை)
065 225 5578 (பிரான்ஸ்)

## கார் விற்பனைக்கு
WPKM - XXXX
Toyota Axio - 2007- X Model
92500km, 1500CC
077 640 6539
நீர்வேலி

## காணி விற்பனைக்கு
கல்வியங்காட்டில் நல்ல சுற்றாடலில் 1 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
077 781 3417

## A/L - Online Classes
English Medium
Biology, Chemisty
(cs. 25455) (N.1) 077 807 5566

## வேலைக்கு ஆள்கள் தேவை
யாழ்நகரில் இயங்கும் பிரபல தனியார் விருந்தினர் விடுதிக்கு Restaurant Waiter வேலைக்கு ஆள்கள் தேவை.
077 179 3388

## வீடு வளவு விற்பனைக்கு
கொக்குவில் இந்துக் கல்லூரிக்குப் பின்பாக 1 1/2 பரப்பு உடன் கூடிய வீடு வளவு விற்பனைக்குண்டு.
077 190 9253

## வீட்டுப் பணிப்பெண் தேவை
70 வயதுடைய ஆரோக்கியமான பெண்மணிக்கு ஒத்தாசையாகத் தங்கி நின்று வீட்டில் பணிபுரியக் கூடிய 45 வயதுக்கு மேற்பட்ட குடும்பப் பொறுப்புக்களற்ற பணிப்பெண் தேவை.
சம்பளம் - 30,000/- (CS/25532) AH-1
077 366 6175

ஆரம்பம்: 19.07.2023 காலை : 9.00 மணி
DAY CLASS
பகல் நேர வகுப்புக்கள்
வர்த்தகப்பிரிவு
- கணக்கீடு - D.Sam
- பொருளியல் - K.R. உதயன் / S.S.சிறி
- வணிகக்கல்வி - T.S. றிஷி / பசில் கெஷோன்

DMI Jaffna
f Dmi Daniel 077 848 0604


### பளை...
(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

யாழ். - கண்டி பிரதான வீதியில் பளை, இத்தாவில் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற மேற்படி விபத்தில் முல்லைத்தீவு -முள்ளியவளையைச்சேர்ந்த எம்பெருமாள் குமரவேல் (வயது - 39) என்பவரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளை அதே திசையில் பின்னால் வந்த ஹைஏஸ் வாகனம் மோதி விபத்தை ஏற்படுத்தியதாகப் பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ-ஓ,27,113)


## அண்ணா பொதிகள் சேவை
வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
ANNA EXPRESS COURIER SERVICE



விரைவு சேவை 3 முதல் 6 நாட்கள்
சாதாரண சேவை 1 முதல் 3 வாரங்கள்
யாழ்ப்பாணம் - நல்லூர் - சங்கானை
வட்டுக்கோட்டை - ஆவரங்கால் - நெல்லியடி
கைதடி - கிளிநொச்சி - வவுனியா
திருகோணமலை - நீர்கொழும்பு - கொழும்பு
075 330 5500
070 330 5500
076 122 1566

## பணியாளர்கள் தேவை
- Waiter
- Kitchen Helper
- House Keeper
- Cleaner

குறிப்பு: முன்அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
Saffron Hotel & Restaurant
075 410 0329


## வேலைவாய்ப்பு
இலங்கையின் பிரசித்தி பெற்ற முன்னணி நிறுவனம் ஒன்றின் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணக் கிளையில் வேலைவாய்ப்புக்கள். சுயவிபரக் கோவையை Whatsapp செய்யவும்.
077 874 7451, 077 865 1993

## வீட்டுப் பணிப்பெண் தேவை
தெல்லிப்பழையில் உள்ள வீடொன்றுக்கு தங்கிநின்று வேலை செய்ய வீட்டுப்பணிப் பெண் தேவை.
077 400 5023

## வேலைக்கு ஆட்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கும் பேக்கரி ஒன்றுக்கு காசாளர், உதவியாளர், கேக் தயாரிப்பாளர், பேக்கரி உதவியாளர், பேக்கர் வெற்றிடங்கள் உண்டு. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (CS/25527)AH-1
070 312 3456


# மரண அறிவித்தல்

மலர்வு 20 . 04 . 1951



உதிர்வு 11 . 07 . 2023

## பீற்றர் அல்பர்ட் தேவராஜன்
(தெல்லிப்பளை வீமன்காமம்)

யாழ். தெல்லிப்பளை வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட பீற்றர் அல்பர்ட் தேவராஜன் கடந்த (11-07-2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வீமன்காமத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பீற்றர் செல்லாச்சி தம்பதிகளின் பாசமிகு மகனும், வீமன்காமத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான துரைரத்தினம் சாவித்திரிதேவி தம்பதிகளின் அன்பு மருமகனும், கங்காநிதி அவர்களின் ஆருயிர்க் கணவரும், சிந்துஜா, லக்ஷா, றொஷான் ஆகியோரின் பாசமிகு அப்பாவும், சுதர்சன், பிரகாஷ், ஜனனி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷைலி, சகீல், பெலா, ஷேன், இமாரா, சிவின் ஆகியோரின் ஆசைப் பேரனும், தேவநேசன், தயாவதி , தேவதாசன், தேவசுந்தர், அருள்ராஜ், காலஞ்சென்ற தேவசுரேந்திரன் மற்றும் சுகந்தி, சந்திரராஜ் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மேரி தேவநேசன், நவீனி தேவசுந்தர், சசிலாதேவி அருள்ராஜ், சுகுணசந்திரன், கதாநிதி சந்திரராஜ், கலாநிதி கதிர்காமநாதன், கருணாநிதி இராஜரட்ணம், கற்பகநிதி இராஜகோபால், ராகவன் (Hopper Hut), சிறீலஷ்மி, கஜநிதி சத்தியமூர்த்தி, காஞ்சனாநிதி கிருபாகரன், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, ஞானமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.07.2023) திங்கட்கிழமை கனடாவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

ராகவன் - 001 647 339 3209
சுதர்சன் - 001 647 821 3692
பிரகாஷ் - 001 647 989 7281

தகவல்:
பீற்றர் தேவதாசன் (பாபு)

(cs51259) (N-1)

# நீங்கா நினைவலைகள்
12ஆம் ஆண்டு 13ஆம் ஆண்டு

பிறப்பு 05.02.1933
இறப்பு 30.06.2011



பிறப்பு 04.06.1935
இறப்பு 16.08.2010

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் வேலுப்பிள்ளை பூபாலசிங்கம்
(காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன முன்னாள் உத்தியோகத்தர்)

திதி: அபரபக்க சதுர்த்தசி (16.07.2023)

உங்கள் இருவரையும் தேடி ஊர் உலகம் தேடி
நாயாய் அலைகின்றோம் எப்போ கிடைப்பீர்கள்?
யாரைக் கேட்கிறது எங்கே ஆறுவோம்?

அம்மாவின் பிரிவுத்துயர் தாழாமல்
அவரோடு நீங்களும் சென்றது ஏன் தொடர்ந்து?
உங்கள் திருமண தினத்தன்று
அக்கினியில் நீங்கள் செய்துகொண்ட
சத்தியம் தான் காரணமோ?

வேதனைகள் வேர் வரை சென்றாலும்
விழுதுகளாய் எம்மைத் தாங்கினீர்கள்!
உங்கள் இருவரின் குரல் கேட்காமல்
பரிதவிக்கும் எங்கள் குமுறல்கள்
உங்கள் காதுகளில் கேட்கிறதா?

ஊர் விட்டு வந்து நம் சொந்த ஊருக்கு
திரும்ப முடியாமல் தவித்த தவிப்பும்
இப்போ ஊருக்கு போகு நிலை வந்தும்
போவதற்கு நீங்கள் இல்லையே அப்பா....

உயரங்கள் நாம் காண எம்
வாழ்க்கைப் பயணத்தில் துணையாய் இருந்த
ஈரிரண்டு கண்களையும் கண்கெட்ட
எமனுக்கோ பொறுக்கவில்லை

நாள்கள் வாரமாகி வாரங்கள் மாதமாகி
மாதங்கள் ஆண்டாகி போனாலும்
ஆறவில்லை எங்கள் துயர்

உங்கள் வார்த்தைகள் எம்மை வாழவைக்கும்
உங்கள் நினைவுகள் எம்மை வாழ்த்திடும்

## திருமதி பாக்கியம் பூபாலசிங்கம்

திதி: பூர்பக்க அட்டமி (25.07.2023)

அம்மா நீ சென்ற கணமும்
அம்மா நீ சொன்ன வார்த்தைகளும்
அம்மா நீ செய்த உன்னதங்களும்
அம்மா நீ தந்த நெறிகளும்
எம் நெஞ்சினில் என்றும் அழியாதம்மா
எழுகின்ற கேள்விகளுக்கெல்லாம்

நாளும் விடை தேடுகின்றோம் அம்மா!
எங்கள் வலிகளைத் தாங்க
யாருமே இல்லையம்மா
அப்பா அம்மா இல்லாத
அநாதைகளானோம் அம்மா
அந்த இறைவனே கண்ணீரைப் பரிசாகத் தந்து
மௌனம் காணுகின்றார் அம்மா

அன்பு அம்மாவே!
கொடிய நோய் வடிவில் காலன்
கொன்றுவிட்டானே உங்களை
அன்று மாலைவரை நீங்கள் புரிந்த அன்பு மழை
இன்னும் எம் கண்முன்னே வந்து செல்லுதம்மா.....

நாடு கடந்து வந்து நாம் உங்களைக் கண்டு
நாளும் பொழுதும் மகிழ்ந்து இருந்த கணங்களும்
மருமகளையும், பேரப்பிள்ளைகளையும்
நீ கொஞ்சிக் குலாவிய தருணங்களும்
என்றும் உங்களை நினைவூட்டுகின்றது அம்மா......

நீங்கள் எனக்காக கட்டிய வீடு
இன்று பாலைவனமாய் கிடக்கின்றது
நீங்கள் இன்று இருந்திருந்தால்
நீங்களாவது அந்த வீட்டில் இருந்திருப்பீர்களே அம்மா......
உயிரைத் தந்து உடலில் சுமந்து
உலகில் வாழ உருவம் தந்த
தெய்வம் நீயம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்
மகன் - 077 774 3185

மாதகல் மேற்கு,
மாதகல்.

(CS.25069) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

ஒரு நாள் போவார் ஒரு நாள் வருவார்
ஒவ்வொரு நாளும் துயரம்
ஒரு சாண் வயிறை வளார்ப்பவர் உயிரை
ஊரார் நினைப்பது சுலபம்
- வாலி

சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 ஆனி 31 ஞாயிற்றுக்கிழமை (16.07.2023)



# தமிழ்க்கட்சிகள் எழுதும் கடிதங்கள்?

நிலாந்தன்

அண்மையில் தனது 90 ஆவது வயதை நிறைவு செய்த ஆனந்தசங்கரி, அரசியலில் அதிகம் கடிதம் எழுதிய ஒரு தமிழ் அரசியல்வாதி . கடவுளைத்தவிர அவர் ஏனைய எல்லாருக்குமே கடிதம் எழுதியிருக்கிறார். அவருடைய கடிதங்களுக்கு பதில் கிடைத்ததோ இல்லையோ, அந்தக்கடிதங்கள் அந்தக்காலகட்ட அரசியலில் ஏதும் விளைவுகளை ஏற்படுத்தினவோ இல்லையோ, அவர் தொடர்ச்சியாக எழுதிக் கொண்டிருந்தார். அவை சிலசமயங்களில் துணிச்சலான,பல சமயங்களில் சுவாரசியமான அல்லது பம்பலான அரசியல் ஆவணங்களாகப் பார்க்கப்பட்டன.



இப்பொழுது ஆனந்தசங்கரியிடம் இருந்து ஏனைய தமிழ் அரசியல்வாதிகளும் அதைக் கற்றுக்கொண்டுவிட்டார்கள் போலத்தெரிகிறது. அண்மை நாட்களாக தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சிகளின் தலைவர்கள் இந்தியப் பிரதமருக்கு கடிதங்களை எழுதுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மனோ கணேசன் தனது கட்சி அவ்வாறு கடிதம் எழுதப்போவதில்லை என்று கூறுகிறார். இந்தியாவுக்கு இங்குள்ள பிரச்சினை விளங்கும். ஆகவே கடிதம் எழுதி அதன் மூலம் பத்திரிகையில் தலைப்புச் செய்தியாக இடம்பெறுவதை விரும்பவில்லை என்று மனோ கணேசன் கூறுகிறார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த மாதம் 21 ஆம் திகதி இந்தியாவுக்கு செல்கிறார். அங்கே அவர் இந்தியப் பிரதமரை சந்திப்பதற்கிடையில் தமிழ்க் கட்சிகளின் மூன்று கடிதங்கள் பிரதமர் மோடிக்கு அனுப்பப்படுகின்றன. முதலாவது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடையது. அந்தக்கடிதம் எற்கனவே ஊடங்களுக்குத் தரப்பட்டுவிட்டது. இரண்டாவது சம்பந்தருடையது. மூன்றாவது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் விக்னேஸ்வரனின் கட்சிகளுடையது.

இந்தக்கடிதங்களின் உள்ளடக்கம் என்னவென்பதும் ஏற்கனவே ஊடகங்களில் வெளிவந்துவிட்டது. அந்த உள்ளடக்கங்களைத் தொகுத்து பார்த்தால், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் விக்னேஸ்வரனும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பதாகத் தெரிகிறது.

இரண்டாவது கடிதம் தமிழரசுக் கட்சியுடையது. இந்தியாவுக்கு ஆறு கட்சிகள் இணைந்து கடந்த ஆண்டின் தொடக்கத்தில் கடிதம் எழுதியபொழுது அதில் தமிழரசுக் கட்சியும் கையொப்பமிட்டது. கடிதத்தின் உள்ளடக்கத்தை மாற்றுவதில் தமிழரசுக் கட்சி முக்கியமான பங்காற்றியது. அந்தக்கடிதம் மூலம் '13க்குள்' முடங்கக்கூடாது என்பதனை வலியுறுத்தி அதற்குமப்பால் போக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை தமிழரசு கட்சி ஏற்படுத்தியது. ஆனால் இப்பொழுது தமிழரசுக் கட்சி தனியாக ஒரு கடிதம் எழுதுகிறது. அந்தக்கடிதமானது 13 வது திருத்தத்தை கடந்து சென்று ஒரு சமஷ்டிக் கோரிக்கையை= கூட்டாட்சிக் கோரிக்கையை- முன்வைப்பதாகக் கூறப்படுகிறது. இதுவிடயத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் வரைந்த கடிதத்தை சம்பந்தர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் தெரிகிறது. அந்தக்கடிதத்தில் அவர் கையெழுத்திட மறுத்துவிட்டார். எனவே,தமிழரசுக்கட்சி தனியாக ஒரு கடிதத்தை எழுதப்போவதாக அறிவித்துள்ளது.

மூன்றாவது கடிதம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடையது. இப்படி ஒரு கடிதத்தை எழுதப்போவதாக முதலில் சொன்னது அந்தக்கட்சிதான். தமது கடிதத்தை முதலில் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியதும் முன்னணிதான். அந்தக்கட்சி இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதம் மிகத்தெளிவாக 13 ஆவது திருத்தத்தை நிராகரிக்கின்றது. அதேபோல மிகத் தெளிவாக கூட்டாட்சிக் கோரிக்கையை முன்வைக்கின்றது. மேலும் கடிதத்தின் இறுதி வரியில் "இந்தியாவின் சட்டபூர்வமான பிராந்தியப் பாதுகாப்பு நலன்களை" அந்தக்கட்சி ஏற்றுக் கொள்வதை கடிதம் மீள வலியுறுத்துகின்றது.

இந்தியாவின் புவிசார் பாதுகாப்பு நலன்களை தாம் ஏற்றுக் கொள்வதாகவும் அந்த அடிப்படையில் இந்திய - இலங்கை உடன்படிக்கையை தாங்கள் ஏற்றுக் கொள்வதாகவும் அந்தக்கட்சி ஏற்கனவே உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கிறது. அதேசமயம் அந்த உடன்படிக்கையின் விளைவாக உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தத்தை இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வாக ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும் அந்தக்கட்சி தெளிவாகக் கூறிவிட்டது.

இந்தியாவின் புவிசார் பாதுகாப்பு நலன்களை ஏற்றுக் கொள்ளும் ஒரு கட்சி இந்தியாவைப் பகை நாடாகப் பார்க்கமுடியாது. ஆனால் நடைமுறையில் முன்னணியானது, தனது அரசியல் எதிரிகளை விமர்சிக்கும்போது அல்லது தன்னை விமர்சிக்கும் அரசியல் விமர்சகர்களைத் தூற்றும் போது அவர்களை இந்தியாவின் முகவர்கள், கைக்கூலிகள், துரோகிகள் என்றெல்லாம் குற்றஞ்சாட்டுவதுண்டு.

தமது கடிதத்தை யாழ்ப்பாணத்தில் உள்ள துணைத் தூத ரகத்திடம் கையளித்தபின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் ஊடகங்களுக்குத் தெரிவித்த கருத்துக்களிலும் அது வெளிப்படுகின்றது. நடைமுறையில் இந்தியாவை ஒரு பகை நாடாகக் காட்டிக்கொண்டு, உத்தியோகபூர்வமாக இந்தியாவின் பாதுகாப்புசார் நலன்களைத் தாம் ஏற்றுக் கொள்வதாக அந்தக்கட்சி கூறுவதை, அகமுரண்பாடு என்று விளங்கிக் கொள்வதா? அல்லது உள்ளூரில் கட்சி மோதல்களில் வெளியுறவு நிலைப்பாடுகளை எவ்வாறு வெளிப்படுத்த வேண்டும் என்ற முதிர்ச்சி அந்தக் கட்சியிடம் இல்லை என்று எடுத்துக் கொள்வதா?

இந்தியா ஒரு எதிரி நாடா அல்லது கையாளப்பட வேண்டிய ஒரு பிராந்தியப் பேரரசா என்ற தெளிவு ஈழத்தமிழர்களுக்கு இருக்கவேண்டும். பகைநாடு என்றால், அதன் புவிசார் பாதுகாப்பு நலன்களோடு சமரசம் செய்யத் தேவையில்லை. மாறாக, கையாளப்பட வேண்டிய ஒரு நாடு என்றால், அதை எப்படிக் கையாள்வது என்பது தொடர்பில் பொருத்தமான ஒரு வெளியுறவுத் தரிசனம் இருக்கவேண்டும். அந்த வெளியுறவுத் தரிசனம் உள்நாட்டில் எமது பேரபலம் எது? பிராந்தியத்தில் எமது பேரபலம் எது? உலக அளவில் எமது பேரபலம் எது? என்பது தொடர்பான தொகுக்கப்பட்ட ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் அமையவேண்டும். உள்நாட்டுக் கொள்கைக்கு வெளியே வெளியுறவுக் கொள்கை என்று ஒன்று இருக்க முடியாது.

தமிழ்க் கட்சிகள் இந்தியாவுக்கு கடிதம் எழுதுகின்றனவென்றால், அதுவும் ரணில் அங்கு போகவிருக்கும் ஒரு பின்னணியில் மூன்றுகடிதங்கள் அனுப்பப்படுகின்றனவென்றால், இந்தியாவை ஏதோ ஒருவிதத்தில் கையாள வேண்டிய தேவை உண்டு என்று மேற்படி கட்சிகள் நம்புகின்றன என்று பொருள். இனப்பிரச்சினைக்கான தீர்வில் இந்தியா தவிர்க்கப்படவியலாத, கையாளப்பட வேண்டிய ஒரு சக்தி என்பதை மேற்படி கடிதங்கள் உணர்த்துகின்றன. ஆயின் இந்தியாவைக் கையாள்வதற்கு மேற்படி கட்சிகளிடம் எவ்வாறான வெளியுறவுக் கொள்கை உண்டு? அதற்கு வேண்டிய ஏதாவது நிபுணத்துவக் கட்டமைப்பு அவர்களிடம் உண்டா? இல்லை. அப்படிப்பட்ட வெளியுறவுத் தரிசனங்கள் இருந்திருந்தால் ரணில் பிரதமர் மோடியை சந்திக்கப்போகும் ஒரு காலகட்டத்தில் கடிதம் எழுதிக் கொண்டிருப்பதை விடவும் அதற்கு முன்னரே அதாவது ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிடம் இருந்து தனக்கு அழைப்பு வர வேண்டும் என்று காத்துக் கொண்டிருந்த, அதற்காக உழைத்துக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் அந்த இடையூட்டுக்குள் புகுந்து வேலை செய்திருக்க வேண்டும்.

ஆனால் எந்த ஒரு தமிழ்க்கட்சியும் அதைச் செய்யவில்லை. இப்பொழுது எதிர்த்தரப்பு முன்னெடுக்கும் ஒரு நகர்வுக்கு பதில்வினையாற்றும் நடவடிக்கையாகவே கடிதம் எழுதப்படுகின்றது. அதாவது 'ரியாக்டிவ் டிப்ளோமசி'.


கடந்த ஆண்டு ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டபொழுது அதை இந்தியா விரும்பவில்லை என்று கருதப்பட்டது. டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்குமாறு இந்தியா கூட்டமைப்பைக் கேட்டதாக அப்பொழுது தகவல்கள் வெளிவந்தன. ஜனாதிபதியாக வந்ததும் ரணில் இந்தியாவுக்குச் செல்வதற்கு இந்தியாவிடமிருந்து அழைப்பு வரவில்லை. அதற்காக அவர் ஏறக்குறைய ஓராண்டு காலம் உழைக்க வேண்டியிருந்தது. இப்பொழுதுதான் அந்த அழைப்பு வந்திருக்கிறது. இவ்வாறு ரணில் இந்தியாவை நெருங்கிச் செல்வதற்கு உழைத்துக் கொண்டிருந்த ஒரு காலப்பகுதிக்குள் தமிழ்க் கட்சிகள் தமது நோக்கு நிலையிலிருந்து எவ்வாறான வெளியுறவுச் செயற்பாடுகளை "புரோஅக்டிவாக" முன்னெடுத்தன?

கடந்த 2021ஆம் ஆண்டு இந்தியா கூட்டமைப்பைஅப்பொழுது கூட்டமைப்பாகத்தான் இருந்ததுடெல்லிக்கு வருமாறு அழைத்தது. ஆனால் சம்பந்தர் பொருத்தமற்ற காரணங்களைக் கூறி அந்த அழைப்பை நிராகரித்தார். எந்தப் பேரபலத்தை வைத்து அப்படி ஒரு முடிவை எடுத்தார்? இன்றுவரையிலும் அவர் அதை யாருக்கும் வெளிப்படையாகச் சொல்லவில்லை. இந்தியாவின் அழைப்பை சம்பந்தர் நிராகரித்துவிட்டார். அதன்பின் இந்தியா தமிழ்த் தலைவர்களை டெல்லிக்கு அழைக்கவில்லை. ரணில் ஜனாதிபதியாக வந்ததும் இந்தியத் தலைவர்களைச் சந்திப்பதற்கு அவருக்கும் டெல்லியிலிருந்து அழைப்பு வரவில்லை. தமிழ்த் தலைவர்களுக்கும் அழைப்பு வரவில்லை. ஆனால் அரசுடைய தரப்பாகிய சிங்களத் தலைவர்கள் அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்புசார் உறவை வெற்றிகரமாகக் கையாண்டு புதுடில்லியை நெருங்கி சென்று விட்டார்கள். ஆனால் அரசற்ற தரப்பாகிய தமிழ்த் தரப்போ கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறது.

ரணில் ஒரு புத்திசாலி ,தந்திரசாலி என்று தமிழர்கள் கூறிக் கொள்ளுகிறார்கள். அப்படியென்றால் ஒரு தந்திரசாலியை எதிர்கொள்வதற்கு தமிழ் மக்கள் எப்படிப்பட்ட தந்திரங்களை வகுத்து வைத்திருக்கிறார்கள்? ரணில் விக்கிரமசிங்க உள்ளூராட்சிசபைத் தேர்தலை அறிவித்தபொழுது அதை நம்பி சுவரொட்டிகளை அடித்த தமிழ்க் கட்சிகள்தானே? அதுவும் பொருளாதார நெருக்கடி காரணமாக ஒரு சுவரொட்டிக்கு பெருமளவு காசைச் செலவழிக்க வேண்டியிருந்த ஒரு பின்னணியில், ரணிலின் அறிவிப்பை நம்பி தமிழ்க் கட்சிகள் சுவரொட்டிகளை அடித்தன. அல்லது நஷ்டப்பட்டன என்றும் சொல்லலாம். இப்பொழுது அவர் டெல்லிக்கு போகிறார் என்றதும் ஆனந்தசங்கரியைப் போல கடிதம் எழுதத் தொடங்கி விட்டார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லைக் கிராமங்களில் குடியேற்றப்பட்ட



# சிங்கள மக்கள் சொல்வது என்ன?



**நேரடி ரிப்போர்ட்**

அ. நிக்ஸன்

ஊடக விரிவுரை ஒன்றுக்காக சிங்களக் குடியேற்றங்கள் செய்யப்பட்ட , அநுராதபுரம் பதவியா, கிராமத்துக்கு இந்த வருடம், இரண்டு தடவைகள் சென்று வந்தேன். அருகே பதவிசிறிபுர, வெலிஓயா கிராமங்கள் உள்ளிட்ட பல சிறிய கிராமங்கள் உண்டு. இந்தக் கிராமங்கள் அநுராதபுரம் மாவட்ட நிர்வாகப் பிரிவுக்குள் அடங்கினாலும் தமிழ் மக்களுக்குச் சொந்தமான முல்லைத்தீவு,வவுனியா, திருகோணமலை மாவட்டங்களுக்குரிய காணிகள் என்பது எல்லோருக்கும் தெரிந்தது தான்.

அதாவது வடக்கு- கிழக்கு எல்லையை இணைக்கும் தமிழ்க் கிராமங்கள்தான் இவை. இந்தக் கிராமங்கள் அநுராதபுரம் மாவட்ட நிர்வாகத்துடன் இணைக்கப்படுவதற்கான எந்த ஒரு புவியியல் காரணிகளும் இல்லை. ஏறத்தாழ இது பலஸ்தீனப் பிரதேசத்தை இஸ்ரேல் அரசு அபகரித்த முறையை ஒத்தது எனலாம்.

ஆனால் நான் இப்போது அந்த அரசியல் பற்றி இங்கு பேச வரவில்லை. ஏனெனில் கொழும்பை மையமாகக் கொண்ட சர்வதேச அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் ஏற்பாட்டுடன் வவுனியாவில் உள்ள இரு அரசசார்பற்ற நிறுவனங்களினால் நடத்தப்பட்ட பயிற்சி விரிவுரை ஒன்றுக்காகவே அங்கு நான் இரு தடவைகள் சென்று வந்தேன்.

அதன் காரணமாக ஈழத்தமிழர்களின் பிரதான அரசியல் கோரிக்கையின் மையப் பொருளோடு ஒப்பிட்டு இந்தக் கட்டுரையை ஆழமாக எழுதுவதைத் தவிர்ப்பது தொழில் ஒழுக்கம் சார்ந்த பண்பு.

இந்தக் குடியேற்றப் பகுதிகளுக்கு நேரில் சென்று வேறு சிலர் பார்த்தனரா, இந்த மக்களுடன் கதைத்துப் பேசினரா என்பது பற்றி எனக்குத் தெரியாது. இருந்தாலும் இந்தக் கிராமங்கள் தொடர்பாகவும் சிங்களக் குடியேற்ற அரசியல் நோக்கங்கள் பற்றியும் பலருக்கும் தெரியும். இது பற்றிப் பல கட்டுரைகளை என்னைப் போன்ற வேறு சிலரும் எழுதியிருக்கின்றனர்.

ஆனால் நான் முதன் முதலில் இந்தச் சிங்களக் குடியேற்றக் கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று .அங்குள்ள மக்களுடன் பேசிப் பழகியதுடன், அந்த மக்களின் வாழ்க்கைக் கஷ்டங்கள், புறக்கணிப்புகள், தண்ணீர்ப் பிரச்சினைகள் பற்றியும் அறிய முடிந்தது.

குறிப்பாகக் காட்டு யானைகள் கிராமங்களுக்குள் நுழைவதுதான் இந்த மக்களின் பிரதான பிரச்சினை. அதனைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கோபம் மக்களிடம் வெளிப்பட்டது.

அதேநேரம் தாங்கள் இங்கு ஏன் குடியேற்றப்பட்டோம் என்ற அரசியலைக்கூடத் தெரியாதவர்களாகவே இந்த மக்கள் இருக்கிறார்கள் என்பதைச் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களின் பேச்சுகள் மூலமும் உணர முடிந்தது.

2009 மே மாதம் போர் முடிவுறும் வரையும் தங்களுக்குக் கிடைத்த வசதி வாய்ப்புகள் எவையும் தற்போது இல்லை என்றும், சகல வசதிகளையும் கொண்ட பதவியா அரச மருத்துவமனையின் அனைத்துக் கருவிகளும் தம்புத்தேகம மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் இந்த மக்கள் கூறினார்கள்.

மருத்துவர்கள், மருத்துவ நிபுணர்கள், தாதிகள் இடமாற்றம் செய்யப்பட்டதால் தற்போது பதவியா மருத்துவமனை, வசதிகள் அற்ற நிலையில் இயங்குவதாகவும் சுட்டிக்காட்டினர். அங்கு எனது விரிவுரையில் பங்குகொண்ட இளைஞர்கள், பெண்கள் மற்றும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் அனைவருமே எந்த வேறுபாடுகளும் இன்றி என்னுடன் பண்பாக உரையாடினர். குறித்த தலைப்பில் கற்பித்த பாடங்களைப் புரிந்துகொண்டனர்.

அவர்களுடன் நான் எனது பாடப்பரப்பைத் தவிர சிங்கள தமிழ் இன முரண்பாடுகள் பற்றி எதுவுமே பேசவில்லை. அது பற்றி அவர்கள் அவ்வப்போது சொன்ன விடயங்களை மாத்திரமே என்னால் செவிசாய்க்க முடிந்தது.

தமது பிரதேசக் கஷ்டங்கள் மற்றும் வசதியீனங்கள் பற்றியும் தமது பிரதேசத்தில் ஊடகவியலாளர்கள் இல்லை எனவும் தமது பிரச்சினைகள் சிங்கள நாளிதழ்களில் வருவதில்லை என்ற விவகாரங்களையும் குறிப்பாகக் கொழும்பில் உள்ள அரச தொலைக்காட்சிகளைத் தவிர தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகள் தெளிவில்லை என்பதால் அவற்றைப் பார்க்க முடியாதென்றும் அவர்கள் கூறினர்.

அத்துடன் அனைத்து மக்களும் சம உரிமையுடன் வாழ வேண்டும் என்பது பற்றியும் எடுத்துரைத்தனர்.

அப்போது தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது என்ற கருத்து இளைஞர்கள் சிலரிடம் இருந்து எழுந்ததை அவதானித்தேன்.

ஆனால் இனப் பிரச்சினையின் தன்மை, சிங்களக் குடியேற்றங்கள், அதனால் தமிழ் - முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றியெல்லாம் அவர்களுக்கு ஆழமாகத் தெரிந்திருக்கவில்லை. வடக்கு - கிழக்கில் தற்போதும் சிங்களக் குடியேற்றங்கள், புத்தர் சிலை வைத்தல் மற்றும் காணி அபகரிப்புகள் போன்ற ஆக்கிரமிப்புகள் பற்றியும் அவர்களுக்குத் தெரியாது என்பதையும் அவர்களின் பேச்சுகள் மூலம் நான் உணர்ந்து கொண்டேன்.

**தமிழர்களுக்குச் சிங்கள அரசியல் தலைவர்கள் நேர்மையாக இல்லை என்பது வேறு. ஆனால் தமிழர்களின் காணிகளில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களின் வாழ்வியல் மீதும் அவர்களுக்கு அக்கறையே இல்லை என்பதுதான் வேடிக்கை**

ஆனால் 1954 இல் இந்தப் பிரதேசத்தில் உங்களைக் குடியேற்றியது போன்று 2009 இற்குப் பின்னரான சூழலிலும் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை அரசாங்க ஆதரவுடன் பௌத்த குருமார் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது பற்றி நான் எதுவுமே அவர்களிடம் சுட்டிக்காட்டவில்லை.

குடியேற்றங்களினால் தமிழ் மக்களுக்கு ஏற்படும் தாக்கங்கள், வலிகள் பற்றியும் எடுத்துரைக்க விரும்பவில்லை. குறித்த பாடப்பரப்போடு மாத்திரம் நான் மட்டுப்படுத்திக் கொண்டேன்.

07 ஜூன் 2023 அன்று கெப்பெற்றிக்கொலாவ சந்தியில் இருந்து சுமார் 35 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பதவியா கிராமத்துக்கு இலங்கைப் போக்குவரத்துச்சபையின் பேருந்தில் நான் காலை 7.30 க்கு பயணம் செய்தேன். போக்குவரத்து வசதிகள் மிகக் குறைவு. இல்லை என்று கூடச் சொல்லிவிடலாம்.

முன்னர் வவுனியா திருகோணமலை மாவட்டங்களின் எல்லையில் இருந்த கிராமமே, தற்போது கெப்பெற்றிக்கொலாவ என்ற சிங்களப் பெயரில் அழைக்கப்படுகிறது.

வெலிஓயாவில் இருந்து செல்லும்போது வவுனியா திருகோணமலை பிரதான வீதியில் உள்ள கெப்பெற்றிக்கொலாவ சந்தியில் இருந்து இடதுபக்கமாக உட்புறம் நோக்கிச் சுமார் 35 கிலோமீற்றர் தூரமுள்ள பதவியா மற்றும் பதவிசிறிபுர பிரதேசங்களுக்கும் அதன் மூலம் வெலிஓயா கிராமத்துக்கும் செல்ல முடியும். வெலிஓயா முன்னர் முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறு என அழைக்கப்பட்ட வடக்கு-கிழக்கின் இதயபூமியாகும். திருகோணமலையில் இருந்து புல்மோட்டை வழியாக சுமார் 70 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பதவியா சந்திக்கு வந்து வெலிஓயா பிரதேசத்துக்கும் அதன் ஊடாக முல்லைத்தீவுக்கும் பேருந்து செல்வதை அவதானித்தேன்.

கெப்பெற்றிக்கொலாவவில் இருந்து பதவியாவுக்குப் பேருந்தில் சென்று கொண்டிருந்தபோது அதில் இருந்தவர்கள் என்னை உற்று நோக்கினர். இப்படியான பயணப் பொதியுடனும் உடைகளோடும் இந்தப் பிரதேசத்தில் யாரும் பயணிப்பதில்லை என்று பேருந்து நடத்துநர் கூறியதோடு, மேலும் என்னிடம் கதை தொடுத்தார்.

நான் செய்தியாளர் என்று என்னை அடையாளப்படுத்தவில்லை. விரிவுரையாளர் என்றே சொன்னேன். பதவியா போய்ச் சேரும் வரை நாற்பது நிமிடம் அந்த வீதியில் எந்த ஒரு வாகனத்தையும் காண முடியவில்லை. இந்தப் பேருந்து மாத்திரமே சென்று கொண்டிருந்தது. வீதியில் எவ்வித ஆள் நடமாட்டமும் இல்லை.

அருகே காடுகளும் வயல் நிலங்களும் காணப்பட்டன. பல கைகளினால் செய்யப்பட்ட மிகச் சிறிய கொட்டில்களில் சிங்கள விவசாயிகள் வாழ்வதையும் காண முடிந்தது.

எட்டாம் திகதி பயிற்சிக்கு ஏற்பாடு செய்த நிறுவனத்தின் வாகனத்திலேயே பதவியாவுக்குச் சென்றேன். ஏனெனில் ஏதேனும் விபத்து நடந்தாலோ அல்லது எனக்கு ஏதும் ஆபத்து நேர்ந்தாலோ அந்த வீதியில் இருந்து என்னைத் தூக்கிச் செல்லக்கூட ஆள்கள் இல்லை. இருந்தாலும் வீதிகள் காப்பெற் இடப்பட்டு, கொழும்பின் பிரதான வீதிகளைப் பார்ப்பது போன்று காட்சி தந்தன. ஆனால் அங்கு 1954 இல் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களின் வாழ்க்கைதான் மிகவும் பரிதாபத்துக்குரியது.

பதவியாப் பிரதேசத்தில் உள்ள பதினைந்து கிராம சேவகர் பிரிவுகளில் எந்த ஒரு பகுதியிலும் உயர்கல்வி நிறுவனங்கள் இல்லை, பெரிய வர்த்தக நிலையங்கள் இல்லை. சிறிய கடைகள் மாத்திரமே உண்டு. பதவியா சுதர்சனபுரத்தில் மட்டும் பாடசாலை ஒன்று உள்ளது.

அடிப்படை வசதிகள் போதியதாக இல்லை. 35 கிலோமீற்றர் தூரம் உள்ள கெப்பெற்றிக்கொலாவ சந்திக்கு சென்றுதான் அவர்கள் அத்தியாவசியப் பொருள்களையோ அல்லது வேறு எந்தப் பொருள்களையோ கொள்வனவு செய்ய வேண்டும்.

அநுராதபுரம் நகருக்குச் செல்வதாக இருந்தால் சுமார் 100 கிலோமீற்றர் தூரம் பயணம் செய்ய வேண்டும். சென்றுவர 950 ரூபா செலவாகும் என்றும் அப்படிச் செலவு செய்து பயணிக்கத் தங்களிடம் பணம் இல்லை என்றும் கூறினர். பலரும் விவசாயிகள். ஆனால் அவர்களின் விவசாயச் செய்கைக்குரிய வசதி வாய்ப்புகள் அங்கு இல்லை.

இராணுவச் சிப்பாய்களின் குடும்பங்களும் அவர்களின் உறவினர்களும் அங்கு அதிகமாக வாழ்கின்றனர். விகாரைகள் பல உண்டு.

(07 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மாதனமுத்த அரசியல்வாதிகள்' இனியும் ஏமாற்ற முடியாது

சிவகுரு முருகதாஸ்

கடந்த ஜூன் மாதம் 13ஆம் 14ஆம் திகதிகளில் தமிழ் பேசும் மக்களின் அரசியல் கட்சிகள் எனத் தம்மைத்தாமே உரிமை பாராட்டிக் கொண்டிருக்கும் கட்சித் தலைவர்கள் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தபோது யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரனால் ஜனாதிபதியிடம் ஓர் ஆவணம் கையளிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அதனை அவ்விடத்தில் வைத்தே தமது கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரித்துவிட்டதோடு, தமிழ் மக்களது பிரதிநிதிகள் என ஏற்றுக்கொள்ள முடியாத பலரால் தயாரிக்கப்பட்டு அவர்களே ஒப்பமிட்டு வழங்கி இருப்பதனால் அந்த ஆவணத்தில் உள்ள விடயங்களை தமிழ் மக்களது கோரிக்கை என எடுத்துக் கொள்ளவேண்டாம் என ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஊடகங்களுக்குத் தகவல் தெரிவித்திருந்தார்.

அந்தத் தகவல் ஊடகங்களில் வெளிவந்ததும், குறிப்பிடப்பட்ட ஆவணம் தொடர்பில் நான் ஆராய்ந்தேன். நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் பலருடன் சேர்ந்தே அந்த ஆவணத்தைத் தயாரித்திருந்தார்.


அதனை ஜனாதிபதியிடம் கையளிக்க முன்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட வடக்கு - கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் இந்த விடயம் பற்றி கலந்துரையாடியதாகவும், கூட்டமைப்பு தவிர்ந்த ஏனைய கட்சிகள் அது தொடர்பில் பல தடவைகள் கருத்துகளைப் பரிமாறி, இறுதியில் குறித்த ஆவணத்தில் கையொப்பமிட்டிருந்ததாகவும் அறிந்துகொண்டேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்த ஆவணம் தொடர்பில் எதுவிதமான கருத்துகளையும் பரிமாறாத நிலையில் இலங்கை அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக செயற்படுத்த இலங்கை அரசை தூண்டும்படி இந்தியப் பிரதமரை நேரில் சந்தித்து கோரவுள்ளதாகவும் தகவல்களைக் கசியவிட்டிருந்தது.

குறித்த ஆவணங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வசிக்கும் கட்சிகள் ஒப்பமிடாது விட்டிருப்பினும் அதன் உள்ளடக்க விடயம் முழுவதும் அவர்களுக்குத் தெரியும் என்பது வெளிப்படை. அப்படி இருக்கையில் தமிழ் பேசும் மக்களது பிரதிநிதிகளாக செயற்படும் எட்டு அரசியல் கட்சிகளது பிரதிநிதிகளால் ஒப்பமிடப்பட்டு சி.வி.விக்னேஸ்வரனால் ஜனாதிபதியிடம் வழங்கப்பட்ட அந்த ஆவணம் பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்றும், தாம் அந்த ஆவணத்தை ஏற்றுக்கொள்ளவில்லை எனவும், தமிழ் பேசும் மக்களால் நிராகரிக்கப்பட்ட பலர் ஒப்பமிட்டு வழங்கிய அந்த ஆவணத்தை தமிழ் மக்கள் நிராகரிப்பதாகவும் கூட்டமைப்பு ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தது.

இதனை அறிந்து கொண்ட நான், ஜனாதிபதிக்கு விக்னேஸ்வரனால் வழங்கப்பட்ட குறிப்பிடப்பட்ட அந்த ஆவணத்தின் பிரதியொன்றை கடும் முயற்சியின் பின்னர் பெற்றுக்கொண்டேன். மக்கள் இந்த ஆவணம் குறித்து விழிப்படைய வேண்டும் என்ற நோக்கத்தில் அதன் மொழிபெயர்ப்பை இங்கு தருகிறேன்.

**இந்த ஆவணத்தின் எந்த இடத்திலும் இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படவில்லை. இருந்தும் எதற்காக இடைக்கால நிர்வாகசபை பற்றிய பொய்யை முன்வைக்கிறார்கள் என்பது பற்றிய விழிப்படைதல் அவசியமானதாகும்.**



*அதி உத்தம ரணில் விக்கிரமசிங்க*
*ஜனாதிபதி*
*ஐக்கிய தேசியக் கட்சி*

*மேன்மை தங்கிய ஐயா,*

### அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல் செய்தல்

*இலங்கையின் தமிழ்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈரோஸ், எல்.ரி.ரி.ஈ., பி.எல்.ஓ.ரி.ஈ., ரி.ஈ.எல்.ஓ. மற்றும் ரி.யூ.எல்.எப். ஆகிய இயக்கங்கள் தமது சம்மதத்தைத் தெரிவித்தபின் 1987 ஜூலை 27ஆம் திகதி இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் பெறுபேறே இலங்கை அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தமாகும்.*

*இருந்தபோதும் இந்தத் திருத்தத்தை அமுல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டபோது தமிழர் தரப்பினரிடையே இருந்த கருத்தொற்றுமை இல்லாதுபோனது. மேலும் சிங்களத் தரப்பினர் 13ஆவது திருத்தத்தின் பின்னரும் போர் முடிவுக்கு வரும் என்பதில் சந்தேகங்கொண்டனர். அதன் விளைவாகவே கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாக 13ஆவது திருத்தம் பாதிக்கப்பட்டு பின்னடைவைச் சந்திக்க நேர்ந்தது.*

*நாடு இப்பொழுது மிகப்பெரும் ஆபத்தான பொருளாதாரச் சிக்கலில் மாட்டியுள்ளது. 13ஆம் திருத்தத்தை தற்போது முழுமையாக அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமானது என்பதைத் தமிழர் தரப்பினர் உணரத் தொடங்கியுள்ளனர். மாகாணசபைத் தேர்தல்கள் சுமார் 5 ஆண்டுகள் பிற்போடப்பட்டு விட்டன. இந்தநிலையில் ஒருசில மாகாணங்களுக்கு மாகாணசபைத் தேர்தல்களை தாமதப்படுத்துவதால் பெரிய பாதிப்பு ஏற்படமாட்டாது. ஆனால் இந்தத் தேர்தலை நடத்துமுன் சில அவசர முன் ஆயத்தங்கள் செய்யப்படல் வேண்டும்.*

*13ஆவது அரசியல் சீர்திருத்தத்தின் கீழ் கடந்த காலத்தில் மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பல அதிகாரங்கள் கொழும்பில் மையம் கொண்டிருந்த அதிகாரபீடத்தால் அத்துமீறப்பட்டிருக்கின்றன. அவ்வாறான அத்துமீறல்களுக்கு கட்டாயம் தீர்வு காணப்படல் வேண்டும். 35 ஆண்டுகளாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் நியதிச் சட்டங்களை இயற்றுவது ஊக்கப்படுத்தப்படவில்லை. அவற்றின் சுதந்திர நிர்வாகம் குறுக்கீடுகளைச் சந்திக்க நேர்ந்துள்ளது. ஆகவே இது போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண மாகாண நியதிச்சட்டங்கள் இயற்றப்படல் வேண்டும் .தெரிவுசெய்யப்பட்டதொரு மாகாணசபை இயங்காத வேளைகளிலும் நியதிச் சட்டங்களை மாகாணசபை இயற்றுவதற்கு 13ஆவது திருத்தத்தில் ஏற்பாடுகள் உள்ளன. இந்தியாவில் இத்தகைய சூழ்நிலையில் மாநிலத்தில் 'ஜனாதிபதி ஆட்சி நிலவும் காலம்' எனப்படுகிறது.*

*இலங்கையில் அரசியல்யாப்புக்கமைய (உறுப்புரை 154.L) மாகாணத்தின் நிர்வாகத்தை கொண்டு நடத்த முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளதாக மாகாண ஆளுநர் ஜனாதிபதிக்கு அறிக்கை இடவேண்டும். அதையடுத்து ஜனாதிபதி ஆளுநரிடமோ அல்லது வேறெந்த அமைப்பிடமோ இருக்கும் அதிகாரங்கள் சிலவற்றை அல்லது முழுமையாக தான் ஏற்றுக்கொள்வதாகப் பிரகடனப்படுத்துவார். அத்துடன் மாகாண சபையின் அதிகாரங்கள் நாடாளுமன்றத்தால் பிரயோகிக்கப்படும் எனவும் அறிவிப்பார். நியதிச்சட்டம் இயற்றவும், ஜனாதிபதி குறிப்பிடும் அதிகாரசபைக்கு அதிகாரங்களைக் கையளிக்கவும் நாடாளுமன்றத்தால் இயலும். (உறுப்புரை 154.M) இந்த அதிகாரசபை குறித்த மாகாணத்துக்கென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆலோசனைச் சபையாக இருக்கும்.*

*அத்தகைய அதிகாரசபை 13ஆவது அரசியல் சீர்திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தக்கோரும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் தலா ஒரு பிரதிநிதியைக் கொண்டிருக்கவேண்டும் என்பது எமது கருத்தாகும். இந்த ஆலோசனைச் சபைக்கு நியமிக்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவோ உள்ளூராட்சிச்சபைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாகவோ இருக்கக்கூடாது. ஜனாதிபதி தனது நியதிச்சட்டங்களை இயற்றும் அதிகாரங்களை வேறு ஏதும் குறிப்பிடத் தகுந்த செயற்பாடுகளையும் ஆலோசனைச் சபைக்கு பகிர்ந்தளிக்கலாம். ஆலோசனைச்சபை, தான் இயற்றும் நியதிச் சட்டங்களை ஆளுநர் ஒப்புதலுக்குச் சமர்ப்பிக்கும்.*

*மாகாணத்தின் தலைமைச் செயலாளர் ஆலோசனைச் சபையின் செயலாளராக இருப்பார். அவர் அந்த மாகாணத்தின் ஆவணங்கள் பேணப்படும் மொழியை நன்கு புரிந்து கொள்ளக்கூடியவராக இருப்பார். வடக்கு - கிழக்கு மாகாணங்களின் ஆவணங்கள் தமிழிலேயே பேணப்படும். ஜனாதிபதி மாகாணத்துக்கென ஒரு சட்டமா அதிபரை நியமிப்பார். அல்லது மாகாண ஆளுநருக்கு ஒரு சட்ட ஆலோசகரை நியமிப்பார். அந்த அலுவலரின் பணி நியதிச்சட்டங்களை மாகாண சபை இயற்றுவதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதாகும். இந்த மகஜரின் பின் இணைப்பில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு தேர்தல்கள் நடத்துவதற்கு முன் மேற்கொள்ளப்பட வேண்டிய மீள்கட்டமைப்பு பற்றி குறிப்பிட்டுள்ளோம். இந்தப் ணிகளை ஏறக்குறைய ஆறு மாத காலத்துக்குள் நிறைவேற்றமுடியும் என்பது எமது எதிர்பார்ப்பு. எனவே மீள்கட்டமைப்பு பூர்த்தி செய்யப்பட்ட பின் தேர்தல்கள் ஆணையம் 2024 ஜனவரி மாதப் பிற்பகுதியில் மாகாண சபைத் தேர்தல்களுக்கான நியமனப் பத்திரங்களைக் கோரி விதிக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றி தேர்தல்களை நடத்த ஏற்பாடு செய்யுமாறு தங்களை வேண்டுகின்றோம்.*

*மிக்க நன்றி*
*தங்கள் உண்மையுள்ள*
*..............................*

இதுவே அந்த ஆவணத்தின் மொழி பெயர்ப்பாகும்.

இதில் எட்டுக் கட்சிகளது பிரதிநிதிகள் ஒப்பமிட்டிருந்தனர். அத்தோடு. 28 வரையிலான இணைப்புக்களும் இணைக்கப்பட்டிருந்தன.

இந்த ஆவணத்தின் எந்த இடத்திலும் இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படவில்லை. இருந்தும் இந்த ஆவணத்தை விமர்சிப்பவர்கள் - இந்த ஆவணத்தைப் பற்றி மக்களை குழப்பும் கருத்துகளை முன்வைப்பவர்கள் - எதற்காக இடைக்கால நிர்வாகசபை பற்றிய பொய்யை முன்வைக்கிறார்கள் என்பது பற்றிய விழிப்படை தல் அவசியமானதாகும்.


இதேநேரம் இன்னுமொரு விடயத்தை எமது மக்கள் முன்நினைவூட்ட விரும்புகின்றேன்.

கடந்த மாதத்தில் பல தடவைகள் இந்தியா சென்று, இந்தியப் பிரதமரைச் சந்தித்து அவரிடம் இலங்கை அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த ஆவன செய்யுமாறு கோர இருப்பதாகவும் கதையளந்து வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கடந்த வாரம் மீண்டும் ஒரு 'பல்டி' அடித்துள்ளனர். அதுதான் 'இந்தியப் பிரதமரைச் சந்திக்கத் தேவையில்லை. இலங்கை ஜனாதிபதியால் தமிழர் கோரும் விடயங்களுக்குத் தீர்வைத் தரும் சூழல் உருவாகும்' எனக் குறிப்பிட்டிருந்தனர். அப்படியாயின் இந்த ஒரு மாத காலப்பகுதிக்குள் இவர்களுக்கு என்ன நடந்தது? இன்னும் எத்தனை காலத்துக்கு இந்த 'மாதனமுத்த அரசியல்வாதிகளின்' பேச்சுகளைக் கேட்டுக் கேட்டுப் 'பேயர்களாக' இருக்கப்போகின்றோம்? தமிழ் மக்களை ஏமாற்றுவது நீண்டகாலம் நிலைக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ.சர்வேஸ்வரா
விரிவுரையாளர்
கல்வியியல்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



# தனியார் கல்வி நிலையங்கள் மீதான கட்டுப்பாடும் தராசுக் கோட்பாடும்

## அறிமுகம்

அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரால் தனியார் கல்வி நிலையங்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட முடிவு பலதரப்புகளிலும் பல பக்க விவாதங்களைத் தோற்றுவித்துள்ளது. வெள்ளி மாலை மற்றும் ஞாயிறு முழுநாளும் தரம் - 10க்குக் கீழ்பட்ட மாணவர்களுக்கு வகுப்புகளை நடத்துவதற்கு அரசாங்க அதிபரால் விதிக்கப்பட்ட தடை காலப்பொருத்தமானதா, சட்டவலிதுடையதா, அல்லது எல்லோருக்கும் ஏற்புடைய சமத்துவத் தன்மை கொண்டதா என்றவாறான விவாதங்கள் ஊடகங்களிலும் சமூகவலைத்தளங்களிலும் இடம் பெறுகின்றன. இவ்விடயம் தொடர்பில் கல்வித்துறை சார்ந்தவர்களின் குறிப்பாக பல்கலைக்கழக கல்விப் புலம் சார்ந்தவர்களின் நிலைப்பாடு எவ்வாறு உள்ளது என்றவாறான கேள்விகளும் இவ் விவாதங்களில் எழுப்பப்பட்டுள்ளன. இந்தப் பின்னணியில் இந்தக் கட்டுரை தனியார் கல்வி நிலையங்களை மூடுவது தொடர்பான முடிவின் தாக்கம் குறித்தும் அத் தாக்கத்தை கட்டுரையாளரினால் மீள்கட்டமைக்கப்படும் தராசுக் கோட்பாட்டுடன் தொடர்புறுத்தியும் ஆராய விளைகின்றது.

முதலில் பின்வரும் விடயங்களைக் கருத்தில் எடுத்து பொருத்தமான நகர்வுகளையும் உரையாடல்களையும் மேற்கொள்வது இதனுடன் தொடர்புடையதான வினைத்திறனான விளைதிறன்மிக்க மற்றும் பயனுறுதித்தன்மை வாய்ந்த எதிர்கால நடவடிக்கைகள் குறித்துச் சிந்திப்பதற்கு வழிசெய்யும்.

ஒன்று, ஏன் இவ்வாறான முடிவை எடுக்க வேண்டிய அவசிய அவசர நிலையேற்பட்டது? இரண்டாவது, இந்த விடயம் தொடர்பில் சக பொறுப்புதாரர்கள் அதாவது பெற்றோர், தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் மற்றும் சமூக மட்டச் செயற்பாட்டாளர்களுடன் கலந்துரையாடப்பட்டதா? மூன்றாவது இந்த முடிவு நிலைபேண் தன்மை கொண்டதா? நான்காவது தனியார் கல்வி நிலையங்களை மூடுவதற்குப் பதிலாக வேறு பொருத்தமான நடவடிக்கைகள் மூலம் இம் முடிவுடன் தொடர்புடைய இலக்குகளை அடைந்திருக்க முடியாதா? ஐந்தாவது தனியார் கல்வி நிலையங்களை மூடுவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் இலக்குகள் அடையப்பட்டனவா அல்லது அடைவது சாத்தியமா? என்ற வகையிலான எழு வினாக்களுக்கு விடைகாண்பது அல்லது தர்க்கரீதியாக இவ் வினாக்களை அணுகுவது மிகவும் அவசியமானதாகும்.

## அரசாங்க அதிபரின் முடிவின் பின்னணி

முதலில் ஏன் இவ்வாறான முடிவை எடுப்பதற்கு அரசாங்க அதிபர் நிர்ப்பந்திக்கப்பட்டார் என்பது குறித்து ஆராயலாம். அண்மைக்காலமாக இலங்கையின் வடக்குப் பகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இளையோர் மையமான சமூகப் பிறழ்வுகள் அல்லது கலாசார ஒத்திசைவற்ற விடயங்கள் அதிகரித்திருப்பதும் அவற்றின் வகைப்பாடுகள் எண்ணிக்கையில் வீங்கமுற்று வருவதும் சாதாரணமாகவே அவதானிக்கக்கூடிய விடயங்களாகவுள்ளன. தற்கொலைகள், போதைப்பொருள் பாவனை, பாலியல் பிறழ்வு நடத்தைகள், வன்முறைக் கலாசாரம், இளவயதுக் கர்ப்பம், கற்றல் நாட்டமின்மை, பாடசாலை இடைவிலகல், எல்லை மீறிய சாகசத்தன்மை, சமூக வலைத்தள அடிமைத்தனம், தனிமைப் போக்கு, பண்பாட்டுப் பற்றின்மை, ஆன்மீக நாட்டக்குறைவு, தூக்கமின்மை, வரன்முறைகளை மீறிய தொடர்பாடல் கலாசாரம், சமூகத் தலைமைத்துவ நாட்டக்குறைவு, பெற்றோர்-பிள்ளை உறவு இடைவெளி, ஆசிரிய-மாணவ உறவு விலகல், வாசிப்பு நாட்டக்குறைவு, உடல் உள விருத்திக்குறைபாடுகள், கலைத்துவ நாட்டமின்மை, சமூகமயமாதலில் பலவீனங்கள் என தற்போது இலங்கைத் தமிழ்ச் சமூகத்தில் எதிர்காலம் குறித்து அச்சுறுத்தும் விடயங்கள் வேகமான பரவுகையும் முனைப்பும் பெற்று வருகின்றன. மேற்குறிப்பிட்ட நச்சு விடயங்களின் வியாபகத்தன்மைக்கான காரணங்களுள் முதன்மைக் காரணமாக பலரும் முன்வைக்கும் கருத்து இளையதலைமுறையினர் போதிய அறநெறி விழுமியம் சார் வழிகாட்டலும் வாழ்க்கைமுறையும் இன்றி அதன் விளைவாக ஆரோக்கியமான உளவிருத்தியற்று உடலால் மட்டுமே வளர்ந்து வருகின்றனர் என்பதாகும். இக் கருத்தியல் எழுந்தமான அடிப்படையில் ஏற்றுக்கொள்ளக்கூடியது என்பதில் மறுப்பில்லை. அத்துடன் வளர்ந்தவர்களில் ஒரு தரப்பினர் தமது இளைய பராயத்து அனுபவங்களுடன் ஒப்பிட்டு தற்போதைய இளையவர்களுக்கு அவ்வாறான அனுபவ வாய்ப்புகள் கிடைக்காமைதான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணம் என்றவாறான முடிவுக்கும் இலகுவாக வந்துவிடுகின்றனர். கருதுகோள் அடிப்படையில் அவர்கள் எடுக்கும் முடிவையும் உரிய ஆய்வுகளின் வழி பரீட்சித்துப் பார்க்காமல் மறுக்க முடியாது. இன்னொரு தரப்பினர் இற்றைக்கு இருபது வருடங்களுக்கு முன்னர் கிடைக்காது தற்போது தாராளமாகக் கிடைக்கும் வளங்களும் வாய்ப்புகளும் தான் தற்போதைய இளையோர் சார் நெருக்கடிகளுக்கு முக்கியமான காரணம் என முன்மொழிகின்றனர்.

அத்தகையவர்கள் இணையப் பாவனை, புலம்பெயர் உறவுகள் வழியிலான பொருளாதார உதவிகள், தொட்டுணரும் மற்றும் தொட்டுணர முடியாத விடயங்களுக்கான திறந்த சந்தை வாய்ப்பு மற்றும் அவை மீதான கட்டற்ற நுகர்வுக்கலாசாரம் என்பவற்றை உதாரணக் காரணிகளாகப் பட்டியலிடுகின்றனர். பிறிதொரு தரப்பினர் முன் திட்டமிட்ட திணிப்புகள், புதிதாக அறிமுகமாகும் உபகலாசாரப் பண்புகள், பொறுப்புதாரர்களின் பொறுப்பின்மை மற்றும் கரிசனையின்மை என்பவற்றினாலேயே சமூகப் பதற்ற உணர்வைப் பரப்பும் இளையவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகக் குற்றச்சாட்டு உணர்வுடன் கூடிய காரணிகளை குறிப்பிடுகின்றனர். அத்தகைய தரப்பினர் அரசின் அரசியல்மயப்பட்ட நடவடிக்கைகள், சட்ட அமுலாக்கலிலுள்ளகுறைபாடுகள், சமயச்சமூகத் தலைவர்கள் மற்றும் நிறுவனங்களின் அக்கறையீனம், அதிகாரிகளின் அசமந்தப்போக்கு என்பவற்றை இவற்றுக்கான உதாரணங்களாக அடையாளப்படுத்துகின்றனர்.

**நச்சு விடயங்களின் வியாபகத்தன்மைக்கான காரணங்களுள் முதன்மைக் காரணமாக பலரும் முன்வைக்கும் கருத்து இளையதலைமுறையினர் போதிய அறநெறி விழுமியம் சார் வழிகாட்டலும் வாழ்க்கைமுறையும் இன்றி அதன் விளைவாக ஆரோக்கியமான உளவிருத்தியற்று உடலால் மட்டுமே வளர்ந்து வருகின்றனர் என்பதாகும்.**

## தீர்வு யாது?

இங்கு மிகவும் ஊன்றி அவதானிக்கத்தக்க விடயம் எதுவெனில் மேற்குறிப்பிட்ட வெவ்வேறு கருத்தியல்சார் கோட்பாடுகளைக் கொண்ட அனைத்துத் தரப்பினரும் இந்தப் பிரச்சினைக்கான தீர்வு குறித்துச் சிந்திக்கும்போது பொதுவாக ஓரளவு அண்மித்த வலயத்துக்குள்ளேயே தீர்வுகளை முன்வைக்கின்றனர். அவ்வாறு முன்வைக்கப்படும் தீர்வுகளுள் கவனத்துக்குரியவையாக பின்வருவனவற்றைக் குறிப்பிடமுடியும். இளையவர்களின் ஆன்மீக நாட்டத்தை அதிகரித்தல், பரீட்சை மையக் கல்வி சிந்தனையிலிருந்து இளையவர்களுக்குவிடுதலையளித்தல், கல்வி சாரா பிற செயற்பாடுகளில் பாடசாலை மற்றும் சமூக மட்டத்தில் ஈடுபட வாய்ப்பளித்தல், பயனுள்ள ஓய்வுநேரச் செயற்பாடுகளில் ஈடுபட வாய்ப்பளித்தல் மற்றும் அவற்றின் எண்ணிக்கையை அதிகரித்தல், சமூக வலைத்தளப் பாவனையைக் கட்டுப்படுத்தல் அல்லது அவற்றில் இருந்து விடுபட வழிகாட்டல், பெற்றோர் பிள்ளை உறவினை மேம்படுத்தல், சமூக ஊடாட்டத்தை மேம்படுத்தி அதனை வலுப்படுத்தல் என்பன இவ்வாறு முன்வைக்கப்படும் தீர்வுகளுக்குள் முன்னிலை பெறுகின்றன.

## தீர்வுக்கான தடை

இந்தத் தீர்வுகளை நடைமுறைப்படுத்தி எதிர்பார்க்கப்படும் விளைவுகளை அடைவதில் என்ன தடைகள் உள்ளன என வினவும்போது பொதுவாக ஒற்றைப் பதிலே அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் வருகின்றது. அதாவது இளையவர்களுக்கு கற்றலுக்கு வெளியேயான செயற்பாடுகளில் ஈடுபட போதிய நேரம் கிடைப்பதில்லை என்பதே அந்தப் பதிலாகும். இவ்வாறு நேரம் கிடைக்காமைக்கு என்ன காரணம் என அடுத்த வினா எழும்போது அதிகமானவர்களின் விரல்கள் தனியார் கல்வி நிலையங்களை நோக்கி நீள்கின்றன. இத்தகைய நிலைமையின் பின்னணியில் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு வழங்கப்பட்ட ஆலோசனைகள் அல்லது அழுத்தங்கள் அல்லது சமூக ஊடாட்டம் அதிகம்மிக்க அவரது தற்சிந்தனையின் விளைவுதான் தனியார் கல்வி நிலையங்கள் மீதான வெள்ளி மாலை மற்றும் ஞாயிறுத் தடையாகும். இத்தகைய திட்டம் குறித்து நீண்ட காலமாகவே பொதுவெளியில் சமூகத் தலைவர்கள் சிலர் குரல்கொடுத்து வந்ததுடன் சில பிரதேச மட்டங்களில் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பிரதேசசபைகளின் ஊடாக அதனை நடைமுறைப்படுத்தவும் விளைந்தனர். குறிப்பாக சின்மயாமிசன் துறவியாக முன்னர் ஜாக்கிரத்தைதன்யர் எனும் பெயரில் அறியப்பட்டு தற்போது சிவகுரு ஆதீனம் எனும் அமைப்பின் குருவாக நன்கு அறியப்பட்ட வேலன் சுவாமிகள், இந்து சமயப் பேரவையின் தலைவர் சக்தி கிரீவன், சைவ மகாசபையினைச் சேர்ந்த மருத்துவர் பரா.நந்தகுமார் என்போர் இவ்வாறு குறிப்பிடத்தக்கவர்கள். இந்து சமயம் சார்ந்த பிள்ளைகளின் ஆலய வழிபாட்டுக்கென வெள்ளிக்கிழமை மாலை வேளை தனியார் வகுப்புகளுக்குத் தடைவிதிக்க வேண்டும் என்பதே இவர்களின் பிரதான எண்ணமாகவிருந்தபோதும் அதனை பொதுவிடயமாக்கி கிறிஸ்தவ மக்களையும் இணைத்து வெள்ளிமாலை மற்றும் ஞாயிறு காலை தனியார் வகுப்புகளுக்கு தடைவிதிக்க வேண்டும் எனும் கோரிக்கையை ஐந்தாண்டுகளுக்கு முன்னரே பொதுவெளிகளில் இவர்கள் முன்வைத்து வந்தனர். தற்போது அரசாங்க அதிபர் அதனைச் சற்று நீடிப்புச் செய்து வெள்ளி மாலை மற்றும் ஞாயிறு முழுவதும் என்றவாறு தனது அதிகாரத்தை பிரயோகித்திருக்கின்றார். இருந்தும் சற்று யதார்த்தம் உணர்ந்தவராக இவ் முடிவு தரம் 10க்கு கீழ்பட்ட மாணவர்களுக்கே பொருந்தும் என்றவாறு அமுலாக்க அரசாங்க அதிபர் விளைகின்றார். இப்போது இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் எழுப்பப்பட்ட முதலாவது வினாவுக்கான விடை அல்லது அதற்கு அண்மித்த புரிதல் ஏற்பட்டிருக்கும் என்பது கட்டுரையாசிரியரின் நம்பிக்கையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது இரண்டாவது வினாவான பொறுப்புதாரர்கள்
னைவரினதும் கருத்துகள் பெறப்பட்டா இந்த முடிவு
எடுக்கப்பட்டன எனும் போது தெளிவான பதிலை
ங்குவதில் சிக்கல்நிலை உள்ளது. அரச அதிபர் ,
யார் கல்வி நிறுவனங்களுடன் கலந்துரையாடியே
த முடிவை எடுத்ததாகச் சொல்லப்பட்டாலும், குறித்த
ந்துரையாடலில் ஒரு பகுதியளவிலான தனியார்
வி நிறுவனப் பிரதிநிதிகளே கலந்துகொண்டார்கள்.
ல் கலந்து கொள்ளாத சாரார் , இந்த வகுப்புத்தடை
பத்தில் உள்ள சில நடைமுறைச்சிக்கல்கள் குறித்து
ச அதிபருடன் இன்னொரு கலந்துரையாடலைக்
ரவும் செய்துள்ளனர்.

வாறான முடிவு எடுக்கும் போது மிக முக்கியமான
றுப்புதாரரான தனியார் கல்வி நிலைய நிர்வாகத்தி
அனைவருடனும் கலந்துரையாடவில்லை என்ப
த தெளிவாக இரண்டு காரணங்களை அடையாளப்
த இயலும். ஒன்று, தனியார் கல்வி நிலைய நிர்வா
சிலர் இதற்கு ஒருபோதும் முழுமையாகச் இணங்
ட்டார்கள்.

ண்டாவது முக்கியமான காரணம் தனியார் கல்வி
லய நிர்வாகிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டரீதி
அமைப்புகள் எதுவும் தற்போது இயங்குநிலையில்
லை. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பா
இருந்த போது அனைத்து அமைப்புகளையும்
க அலகுகளுக்குள் உள்வாங்கிய நடைமுறையி
தனியார் கல்வி நிலையங்களின் ஒன்றியம் என ஒரு
ப்புச் செயற்பட்டது. அது பின்னர் இயங்குநிலை
இருந்த நிலையில் மீள ஒருதடவை புதுப்பிக்கப்பட்ட
ம் காத்திரமான அமைப்பாக கட்டுருவாக்கம் பெற
லை.


து அரசாங்க அதிபரின் அறிவித்தலையடுத்து தனி
ல்வி நிலைய உரிமையாளர்களின் பிரச்சினைகள்
துப் பேசுவதற்கான அழைப்புகள் அந்த அமைப்புக
தொடர்புடைய சிலரால் விடுக்கப்பட்டுள்ளன.
தனியார் கல்வி நிலையத்தினர் சிலர் இணங்கமாட்
மற்றும் உரிய பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்
ம என்பனவே அரசாங்க அதிபர் தனது முடிவை
தற்குமுன்னர் சிலதனியார்கல்விநிலையங்களுடன்
கலந்துரையாடலில் ஈடுபட்டமைக்கு முக்கியமான
ிகள் எனக் கருத இடமுண்டு. இரண்டாவது வினா
ன விடையும் ஓரளவு விளங்கிக் கொள்ளக்கூடியதா
து.

ாவது வினாவாகிய அரசாங்க அதிபரின் முடிவு
பேண் தன்மை கொண்டதா? என்பது மிகவும் முக்கி
வினாவாகும். இவ் வினாவுக்கான விடை பொது
ில்லை என்பதேயாகும். காரணம் இலங்கையின்
ங்க நிர்வாக அலகுகளில் மட்டுமன்றி அரச மட்டத்
டுக்கப்படும் பல முடிவுகள் ஆள்சார் முடிவுகளாகவே
வதுண்டு. அதனால் ஆள்மாறும் போது முடிவுகளும்
. அடுத்தவருடம் ஓய்வுபெறவிருக்கும் தற்போதைய
ங்க அதிபருக்கு பின்வருபவர் இம் முடிவை தன்
கவும் கொள்வாரா என்பது சந்தேகமே. இருந்தும்
மட்ட அழுத்தங்கள் இருப்பின் தொடரவும் வாய்ப்
. இருந்தும் இவ் முடிவின் நிலைபேண் தன்மை
முற்றிலும் கேள்விக்குரிய ஒன்றே என்பதில் எவ்
தேகமும் இல்லை. இவ் நிலைபேண் தன்மையில்
ரார்களின் கருத்தியல்கள், தனியார் கல்வி நிலைய
களின் அழுத்தங்கள், அரசியல் தலைவர்களின்
ீடுகள், அதனைத் தாண்டி சில சந்தர்ப்பங்களில்
றத் தலையீடுகள் என்பன செல்வாக்கினை
து செலுத்தி இவ் முடிவை நீர்த்துப்போக வைக்கக்
சமூக கள யதார்த்தங்கள் நிறையவே உண்டு.

ாவது வினாத்தான் மிகவும் நுணுக்கமாக அணுகப்
ண்டிய வினாவாகும். அதாவது தனியார் கல்வி
ங்களை மூடுவதற்குப் பதிலாக வேறு பொருத்த
டவடிக்கைகள் மூலம் இம் முடிவுடன் தொடர்புடைய
களை அடைந்திருக்க முடியாதா? எனும் இவ்
க்கான விடையுடனேயே கட்டுரையாளர் தன்னால்
மைக்கப்படும் தராசுக் கோட்பாட்டை முன்வைக்க
கின்றார். எனவே இவ் வினாவுக்கான விடையைத்
தியாக அணுக முன்னர் தராசுக் கோட்பாடு குறித்த
ட்டமான விளக்கம் ஒன்றைப் பெற்றுக்கொள்வது
மாகின்றது.

## ...த் தட்டுக் கோட்பாடு

தட்டு என்பது இரு வேறுபட்ட விடயங்களை ஓப்பீடு
தற்கும் சமன்செய்வதற்கும் ஏற்ற வகையில் இரு
ளைக் கொண்டது என்பது சாதாரணமாக அனை
அறிந்ததொன்றே. இப்போது இத் தராசுத் தட்டின்
டை பண்பாட்டுக்கு உகந்த அதாவது சமூகத்தின்
ான்மையினரால் விரும்பப்படும் விடயங்களைக்
தாகவும் மற்றைய தட்டை அவற்றுக்கு முரணான
களைக் கொண்டதாகவும் கருதிக்கொள்ளலாம்.
த்தியலின் அடிப்படையில் தற்போதைய இலங்கை
க்குச் சூழ்நிலை குறிப்பாக யாழ்ப்பாண நிலையை
செய்யும் போது பண்பாட்டுக்கு முரணான விடயங்
அதாவது சமூகத்தின் பெரும்பான்மையினருக்கு
விடயங்களைக் கொண்ட தட்டு பாரம் அதிகரித்து
நிற்கின்றது. பண்பாட்டுக்கு உகந்த விடயங்களைக்
இரண்டாம் தட்டின் பாரம் போதாது அது உயர்ந்து
றது. இப்போது சமூக நன்மை கருதி தட்டுக்களின்



**தராசுத் தட்டுக் கோட்பாட்டை அரசாங்க அதிபரின் தனியார் கல்விநிலையங்கள் தொடர்பான முடிவுடன் தொடர்புபடுத்தி ஆராய்ந்தால் சில ஆக்க பூர்வமான அமுலாக்கத் தன்மைமிக்க முடிவுகளை முன்வைக்க முடியும். குறிப்பாக தனியார் கல்வி நிலையங்களை வெள்ளி மாலை மற்றும் ஞாயிறு மூடுவதன் மூலம் எய்தப்படும் இலக்குகளை அடைய வேறு வழி முறைகளைப் பின் பற்ற முடியுமா என்பது குறித்துச் சிந்திப்பதற்கு அது வழிசெய்யும்.**

பும் தட்டை தாழ்த்த வேண்டும் அல்லது ஆகக்குறைந்தது இரு தட்டுக்களையும் சமன் செய்ய வேண்டும். இதற்கு யதார்த்த அணுகுமுறையில் இரண்டுவழிமுறைகள் உண்டு. ஒன்று பண்பாட்டுக்கு முரணாண தட்டின் பாரத்தைக் குறைப்பது மற்றையது பண்பாட்டுக்கு உகந்த தட்டின் பாரத்தை அதிகரிப்பது.

இவற்றுள் பண்பாட்டுக்கு முரணாண தட்டின் பாரத்தைக் குறைப்பது என்பது பெரும் சவாலான விடயம். காரணம் அத்தகைய விடயங்கள் பல நன்கு திட்டமிட்ட வகையில் அதிகார வர்க்கத்தின் அனுசரணையுடன் நடைபெறுகின்றன என்பது கசப்புடன் ஏற்றுக்கொள்ளப் படவேண்டிய உண்மை. இவற்றை நீக்குவது அல்லது குறைப்பது என்பது மிகுந்த சவாலான விடயம். எனவே இவற்றில் செலவழிக்கும் சிந்தனை,நேரம் மற்றும் வளங்கள் என்பன கொடுக்கும் விளைதிறனின் அளவு ஒப்பீட்டளவில் தற்போதைய நிலையில் மிகுந்த குறைவானதாகவேயிருக்கும். ஆனால் மாறாக பண்பாட்டுக்கு உகந்த தட்டின் பாரத்தை அதிகரிக்கும் பொறிமுறை என்பது ஒப்பீட்டளவில் இலகுவானது. இதற்கான தடைகளுடன் ஒப்பிடும்போது வாய்ப்புக்களே அதிகமாகவுள்ளன. இந்த நுட்பத்தைப் பயன்படுத்துவதே தற்போதுள்ள இலங்கையின் வடக்குச் சூழலில் பொருத்தமான அணுகுமுறையாகும்.

### தராசுத் தட்டுக்கோட்பாடும் தனியார் கல்விநிலையங்களும்

இப்போது இத் தராசுத் தட்டுக் கோட்பாட்டை அரசாங்க அதிபரின் தனியார் கல்விநிலையங்கள் தொடர்பான முடிவுடன் தொடர்புபடுத்தி ஆராய்ந்தால் சில ஆக்கபூர்வமான அமுலாக்கத்தன்மை மிக்க முடிவுகளை முன்வைக்க ம்டியும். குறிப்பாக தனியார் கல்வி நிலையங்களை வெள்ளி மாலை மற்றும் ஞாயிறு மூடுவதன் மூலம் எய்தப்படும் இலக்குகளை அடைய வேறுவழி முறைகளைப் பின்பற்ற முடியுமா என்பது குறித்துச் சிந்திப்பதற்கு அது வழி செய்யும். தனியார் கல்வி நிலையங்கள் என்பன பிள்ளைகளின் ஆன்மீக ஈடுபாட்டுக்கும் சமூகமயமாக்கலுக்கும் தடையாகவுள்ளன என்பதே பிரதான குற்றச்சாட்டு என்பதுபுரிந்துகொள்ளத்தக்கதாகவுள்ளது. இந் நிலையில் தனியார் கல்விநிலையங்களினால் பாதிக்கப்படும் விடயங்களை சீர்செய்யும் பொறுப்பையும் தனியார் கல்வி நிலையங்களிடமே சுமத்தும் பொறிமுறை ஓரளவுக்கு வெற்றி தரத்தக்கது என்பது கட்டுரையாளரின் கருத்தாகும். அவ்வாறெனில் இதனை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் எனும் அடுத்த வினா இயல்பாகவே எழும். அதற்கான விடையாக சிலவற்றை முன்வைக்கின்றவேளை கூட்டுக் கலந்துரையாடல்கள் இவ் வினாவுக்கான விடையை மேலும் செம்மைப்படுத்துவதுடன் படைப்பாற்றல் தன்மை கொண்ட முடிவுகளை எட்டவும் வழிசெய்யும் என்பது கட்டுரையாளரின் அபிப்பிராயமாகும். எவ்வாறான விடயங்களை இது தொடர்பில் எடுக்கலாம் என்பதை அடுத்து ஆராயலாம்.

(மிகுதி அடுத்தவாரம்)

# புலம்பெயரிகளின் மண்டையைக் கழுவும் ரணில்!



ந.பரமேஸ்வரன்

புலத்தில் தமிழர்களின் இருப்பை அழிப்பதற்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் உதவி செய்ய வேண்டும் ' இது தான் ஸ்ரீலங்கா சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் தற்போதைய நிலைப்பாடு. லண்டன் சென்ற ஜனாதிபதி ரணில், பிரிட்டனின் முதல் பத்துப் பணக்காரர்கள் வரிசையில் வைத்து மதிப்பிடப்படும் (2007 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்திருந்த பி.பி.சி.கொழும்பு நிருபர் சார்ள்ஸ் ஹவிலனும் இதை ஒப்புக்கொண்டிருந்தார்) 'லைக்கா 'சுபாஸ்கரனை சந்தித்துள்ளார். அவரிடம், புலம்பெயர் தமிழர்களை இலங்கையில் முதலீடு செய்ய முன்வருமாறு ரணில் அழைப்பும் விடுத்துள்ளார்.இவ்வாறு ஸ்ரீலங்கா ஜனாதிபதி புலம்பெயர் தமிழர்களிடம் அழைப்பு விடுவது இது தான் முதல் தடவையல்ல. ஸ்ரீலங்கா பொருளாதார நெருக்கடியில் சிக்கிய போது முள்ளிவாய்க்கால் நரபலிநாயகன் கோத்தாவும் புலம்பெயர் தமிழர்களை ஸ்ரீலங்காவில் முதலீடு செய்ய வருமாறு அழைப்பு விடுத்திருந்தார். அப்போது வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் , இப்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான விக்கினேஸ்வரன், 'சிங்கள அரசாங்கம் ஸ்ரீலங்காவில் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வை வழங்க முன்வந்தால் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஸ்ரீலங்காவில் முதலீடு செய்ய முன்வருவார்கள்' எனக் கூறியிருந்தார்.விக்கினேஸ்வரனின் கூற்று செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்தது.கோத்தாவோ,ரணிலோ விக்கியின் கூற்றை காதில் போட்டுக்கொள்ளவில்லை,போட்டுக்கொள்ளவும் தயாரில்லை. தொடர்ச்சியாக தமிழர்களை தமது சப்பாத்துக்களை நக்கும் அடிமைகளாக வைத்திருக்கவே ஆசைப்படுகின்றனர்.

ஸ்ரீலங்காவில் தமது சப்பாத்துகளை நக்கச்சொல்லி தமிழ் அரசியல் கைதிகளுக்கு உத்தரவிடும் அமைச்சர்கள் ,'தான் ஆடாவிட்டாலும் தன் சதையாடும்' என்பது போல் தமிழ் நாட்டுப் பிச்சைக்காரர் ஒருவர் தமிழகத் தமிழர்களிடம் பிச்சை எடுத்த பணத்தை அனுப்ப, வாய் கூசாமல் வாங்கித் தின்று ஏப்பம் விட்டுக்கொண்டு , எஞ்சியுள்ள ஈழத்தமிழர்களை தொடர்ந்தும் அடிமைகளாக வைத்திருப்பதற்கான செயற்பாடுகளையே மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழக அரசிடமும் தமிழகப் பிச்சைக்காரரிடமும் பிச்சை எடுத்த சிங்கள ஸ்ரீலங்காத் தூதுவர் மிலிந்த மொறகொட கர்நாடகாவிடமும் பிச்சைப்பாத்திரத்துடன் சென்றார் ஆனால் கர்நாடக அரசு தனக்கு மிஞ்சித் தான் தானதர்மம் என்ற நிலைப்பாட்டில் உள்ளது போலிருக்கிறது. கர்நாடக அரசு ஸ்ரீலங்காவுக்குப் பிச்சை போட முன்வரவில்லை.

இந்திய மத்திய அரசு, ' 13 ' ஐ அமுல்படுத்துமாறு பல தடவைகள் மிலிந்த மொறகொடவிடம் , முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவிடமும் கோரிக்கை விடுத்திருந்தது. ஐ.நா.மனித உரிமைகள் பேரவையிலும் இந்தியப்பிரதிநிதி இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு '13'ஐ முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென உரையாற்றியிருந்தார். இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரும் '13 'முழுமையாக அமுல்படுத்த வேண்டுமெனத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார்.

இந்தியா இவ்வாறு '13' ஐ நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்திக் கொண்டிருக்கும் வேளையில், மிலிந்த மொறகொட உள்ளிட்ட சில பேரினவாத அரசியல்வாதிகள் ' 13 ' நீக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்து வருகின்றனர்.

யானை மாலை போட்டதால் அதிர்ஷ்டவசத்தால் ஆட்சியைக் கைப்பற்றியது போல் , நியமனப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக வந்து ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க, தான் பதவியேற்றதும் 'தமிழர்களுக்கு சமஷ்டியை வழங்கப்போகிறேன்' என திருவாய் மலர்ந்தார். பின்னர் யாழ்ப்பாணம் வந்த போது '13' ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தப்போவதாக அறிவித்தார். இப்போது நிறைவேற்று அதிகாரம் இருக்கிறது என்பதற்காக இனப்பிரச்சினைக்கான தீர்வை தான் மட்டுமே தனித்து வழங்க முடியாது என அழுகிறார்.

மனமுண்டானால் இடமுண்டு என்று சொல்வார்கள். இந்தியாவின் அழுத்தம் காரணமாக பிரேமதாஸ,ஜே.வி.பி.யினர் போன்றவர்களின் எதிர்ப்பை துப்பாக்கி முனையில் அடக்கி விட்டு, ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்து இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டார் ஜே.ஆர்.

பிரேமதாஸ புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய வேளையில் நூற்றுக்கணக்கான தமிழர்களின் அழிவுக்குக் காரணமாக இருந்த வாகனங்களின் இலக்கத்துக்கு முன்னால் இருந்த 'ஸ்ரீ 'என்ற சிங்கள எழுத்தை ஒரே இரவில் இல்லாமல் செய்து வாகனங்களின் இலக்கத்தகட்டில் ஒரு கோடு மட்டும் இடம்பெறச்செய்தார் பிரேமதாஸ.

ஒருபுறம் தாயகத்தில் உள்ள தமிழர்களின் இருப்பை இல்லாதொழிக்கும் செயற்பாடுகளை திட்டமிட்ட வகையில் முன்னெடுத்துக்கொண்டு, மறுபுறத்தில் யுத்த காலத்தில் உயிருக்கு அஞ்சியோ, பணம் சம்பாதிக்கும் நோக்குடனோ வெளிநாடு சென்று தமது உழைப்பின் மூலம் தாங்கள் குடியேறிய நாடுகளில் கோடீஸ்வரர்களாக வாழ்ந்து வரும் தமிழர்களிடம் (தாங்கள் துரத்தியவர்களிடம்) கையேந்துகிறது சிங்களம்.

மலேசியா,சிங்கப்பூர் தமிழர்கள் போல யுத்தத்தை நேரடியாக அனுபவிக்காதவர்களல்லர் ஐரோப்பாவிலோ,கனடாவிலோ வாழ்ந்து வரும் புலம்பெயர்தமிழர்கள். இவர்கள் தாம் வாழும் நாடுகளில் சிங்கள அரசாங்கத்தின் கொடுமைகளை எடுத்துக்கூறியே அடைக்கலம் பெற்றவர்கள்.

லண்டனில் வாழும் தமிழர்களின் 'மண்டையைக் கழுவும்; நோக்குடனேயே ரோஹித போகொல்லாகம பிரித்தானியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளாரென 'டெய்லி மிரர்' செய்தி வெளியிட்டுள்ளது.

ரோஹித போகொல்லாகமவாலும் ரணிலாலும் லண்டன் தமிழர்களின் 'மண்டையைக் கழுவ 'முடியுமா? புலிகளைப்பற்றி விமர்சிப்பவர்களையும், ஸ்ரீலங்காவுடன் நெருக்கமாகச் செயற்படுபவர்களையும் துரோகிகள் பட்டியலில் இணைக்கும் புலம்பெயர் தமிழர்கள் ஸ்ரீலங்காவில் முதலீடு செய்ய சகபுலம்பெயர் தமிழர்களை அனுமதிப்பார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிருந்து சில நினைவுகள்



○ கோகுலராகவன்

பன்னிரண்டு எழுத்தாளர்களின் பன்னிரண்டு சிறுகதைகளோடு 2000 ஆண்டில் ஒரு சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டோம்.

நண்பர்கள் வெளியீடு.

நானும் நண்பர் எழுத்தாளர் தொல்புரம் சி.கதிர்காமநாதனும் இதில் மறைமுக ஏற்பாட்டாளர்கள். யாருக்கும் சொல்லிக் கொள்ளமாட்டோம். அப்போது அப்படி ஒரு தன்னடக்கம். என்ன இழவு ?

பன்னிரண்டு, எழுத்தாளர்களிடம் சிறுகதைகளைப் பெற்றுக் கொண்டு நல்லூரில் பிள்ளையார் அச்சகத்தில் நூலாக்கத் தொடங்கினோம். முன்னுரை வாங்க யாரைக் கேட்பது? இரண்டு பேரும் தான் முடிவெடுக்க வேண்டும்.

கதிர்காமநாதன் கொஞ்சம் கூச்ச சுபாவம். என்னுடன் எங்கும் வருவார்.

நான்தான் கதைக்க வேண்டும்.

கதைத்து முடிந்து வெளியே வந்தால் அவர் தான் கதைப்பார்.

"என்ன ஆள் உவன்? கதைக்கிற கதையை பாத்தியளோ?"என்று புறுபுறுப்பார்.

சிரிப்புத்தான்.

புத்தகத்துக்கு ஒரு பெயர் வைக்க வேண்டும். அப்போது யாழ்ப்பாணம் தனிமைப் படுத்தப்பட்டிருந்தது.

வன்னியோடு எந்தத் தொடர்பும் இல்லை. அப்போது வன்னியில் இலக்கிய முயற்சிகள் தீவிரமாக இருந்தது.




எனவே நாமும் எமது பங்குக்கு ஏதாவது செய்வோம்,செய்கிறோம் என்று நினைத்து புத்தகத்துக்கு "இங்கிருந்து" என்று பேர் வைத்தோம்.

புத்தகத்துக்கு முன்னுரை யாரிடம் வாங்குவது என்பது குழப்பமாகவே இன்னமும் இருந்தது. சிலஎழுத்தாளர்களிடம்போனோம். சில மனக்கசப்புகள் உருவாகின. புதிய எழுத்தாளர்களின் அடைவு மட்டம் போதாமல் இருக்கும் என நினைத்திருப்பார்களோ என்னவோ.

எங்களுக்கு முன்னுரை தர ஆபத்பாந்தவனாகக் கிடைத்தவர் தான், அண்மையில் மறைந்த மதிப்புக்குரிய எழுத்தாளர் குப்பிழான் ஐ.சண்முகன்.

எந்தவித மறுப்புமின்றி அற்புதமான முன்னுரை ஒன்றை வழங்கினார்.

இதில் நாம் மகிழ்ந்த விடயம் அவர் எம்மை அனுசரித்த முறை.

நாம் அனைவரும் அப்போது ஆரம்ப அறிமுக எழுத்தாளர்கள் .

நானும் கதிரும் ஏற்கனவே இதில் சில நேர் மறையான அனுபவங்களைப் பெற்றிருந்தோம்.

எனவே எச்சரிக்கையாக இருந்தோம்.

ஆனால் சண்முகன் தெளிவாக இருந்தார். அவர் எங்கள் கதைகளை ஏற்கனவே வாசித்திருக்கிறார். இதனால் அவருக்கு எங்கள் எழுத்தில் நம்பிக்கை இருந்திருக்கிறது. ஒவ்வொரு கதையையும் வாசித்து அதற்கான சிறப்பைப் பதிவு செய்து தன் முன்னுரையை வழங்கியமை எம்மை ஆச்சரியப்படுத்தியது.

அதில் எம்மை ஊக்கப்படுத்த வேண்டும் என்ற உள்ளார்ந்த உயர்ந்த எண்ணம் இருந்ததை முன்னுரையை வாசிக்கும் போது புரிந்தது. சண்முகன் எங்கள் கதைகளுக்கு "கூட்டாஞ்சோறு" என்கிற நல்ல வரைவிலக்கணம் ஒன்றைத் தந்தார்.

முதன்முதலில் 'குப்பிழானை' இதற்காக சந்தித்தது வாழ்வில் மறக்க முடியாத அனுபவம்.

கனிவான அதிராத அவரது உரையாடல் என்னைக் கவர்ந்தது.

இப்படியுமாக ஒரு மனிதன் அமைதியாக உரையாட முடியுமா ? என்பதை அவர் மூலமே உணர்ந்து கொண்டேன். நான் அநேகமாக இன்னொரு எழுத்தாளரின் எழுத்தின் பாதிப்பை என்னுடைய எழுத்துக்குள் விடுவதேயில்லை.ஏனெனில் எனது பாணியை அது பாதிக்கலாம்.

ஆனால் எனது உரையாடலில் கனிவாக உரையாடக் கற்றுகொண்டது'குப்பிழானிடம்' இருந்துதான் என்பதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன்.

அவர் எழுத்தாளராக இருந்தார் என்பதை விட நல்ல ஆசிரியராக, நல்ல மனிதராக வாழ்ந்தார் என்பதை முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அவரோடு நான் அதிகம் புழங்க வாய்ப்புக் கிடைத்ததில்லை, எங்காவது இலக்கியக் கூட்டத்தில் கண்டால் சரி. ஒருகட்டத்தில் நான் இலக்கிய முயற்சிகளில் ஒதுங்கி இருந்த போது மீண்டும் எழுதத் தூண்டியவர்.

'இங்கிருந்து' சிறுகதைத் தொகுதி வெளிவந்து இருபத்து மூன்று வருடம் ஆகிவிட்டது. அதில் நாம் இணைத்துக்கொண்ட படைப்பாளிகளில் பலர் தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருக்கின்றோம். இங்கிருந்து புத்தக வேலை கள் நடந்துகொண்டிருந்த ஒரு கட்டத்தில்,

"இந்தப் பொடியன் இலக்கியத்தில் ஆர்வமாக இருக்கிறான்."

என்றவாறு ஒருநாள் கதிர்காமநாதன் ஒரு பால்குடி இளைஞனை அழைத்துக் கொண்டு என்னைப் பார்க்க சைக்கிளில் வந்தார்.

அப்போதுதான் அவன் ஏ.எல். எடுத்திருக்க வேண்டும்.

சரி நாமும் பாரதிராஜா மாதிரி ஒரு பாக்கியராஜை அறிமுகம் செய்து பார்ப்போம் என்று அவனது 'ஆலமரம் என்ற சிறுகதையை 'இங்கிருந்து' தொகுப்பில் இணைத்துக் கொண்டோம்.

இன்றைக்கு அந்த இளைஞன் படைப்பாளி, வெளியீட்டாளர் என்பதோடு, இந்தப் பத்தி எந்தப் பத்திரிகையில் வெளிவருகின்றதோ அந்தப் பத்திரிகையின் ஆசிரியரும் கூட. சரி நம்மிடமும் கண்டுபிடிப்புத் திறன் இருக்கு.

மற்றப்படி தாட்சாயணி, கதிர்காமநாதன், ராகவன், சத்தியபாலன், உடுவில் அரவிந்தன் , இயல்வாணன், தபின்,சாரங்கா,குமுதினி, சிவாணி மற்றும் நான் இலக்கிய உலகில் தொடர்ந்து இயங்கி கொண்டிருக்கிறோம்.

"இங்கிருந்து" எங்கள் தொடக்கத்தின் பெரும் புள்ளி. இதன் வெளியீட்டு விழா பற்றி அடுத்த தொடரில் பேசலாம்.

(இன்னும் கதைப்பம்)

# யாழ்ப்பாண வரலாறு

1505–1948 வரை

○ ந.பரமேஸ்வரன்

### 1940 பெப்ரவரி

பண்டிதர் மகாலிங்கசிவம் காலமானார். இவர் பிரபல தமிழ் அறிஞர் ம.க.வேற்பிள்ளையின் மகனாவார். பண்டிதர் 'மகாலிங்கசிவம் தமிழ்மொழி,தமிழ் இலக்கியம் தொடர்பான கேள்விகளுக்கான உயர் மேன்முறையீட்டு நீதிமன்றம்' என சண்முகரத்தினம் Hindu Organ என்ற பத்திரிகையில் புகழ்ந்து எழுதியுள்ளார். தன்னுடன் வாதிடுபவர்களை பிளேட்டால் வெட்டுவது போல் தனது அறிவுத்திறனால் வெல்பவர் எனவும் சண்முகரத்தினம் எழுதியுள்ளார். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும், இராமநாதன் கல்லூரியிலும் ஆசிரியப்பணிபுரிந்த இவர் சேர். பொன்.இராமநாதனுக்கும் தமிழ் இலக்கணம் கற்பித்துள்ளார். இவரின் தமிழ்ப்புலமையை அறிந்த இராமநாதன் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் விரிவுரையாளராக நியமித்தார். இவரிடமிருந்த சமஸ்கிருதப் புலமை காரணமாக கல்வித்திணைக்களத்தில் சமஸ்கிருதப் பரீட்சகராகவும் நியமிக்கப்பட்டார். யாழ்ப்பாண கீழைத்தேயக் கற்கைகள் நிறுவனத்துக்கு ஒரு கோபுரம் போன்று பண்டிதர் மகாலிங்கசிவம் விளங்கினார்.

### 1940 செப்ரெம்பர் 02

கோப்பாயிலும்,ஆனைக்கோட்டையிலும் இரு பொலிஸ் நிலையங்கள் அரசாங்க அதிபரால் திறந்து வைக்கப்பட்டன.

### 1940 செப்ரெம்பர் 06

- பருத்தித்துறை நீதிமன்றத் திறப்பு விழா
- யாழ்ப்பாணத்தில் வசித்து வந்த சிங்களவர்களால் யாழ்ப்பாணத்தில் உள்ள சிங்களவர்களின் நலன்களைக் கவனிப்பதற்கென 'வட இலங்கை சிங்கள யூனியன்' என்ற சங்கம் உருவாக்கப்பட்டது.
- சுவாமி ஞானப்பிரகாசர் தேசிய சுவடிகள் காப்பகத்தின் தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

### 1941 பெப்ரவரி 20

ஐசாக் தம்பையா காலமானார். 18.08.1869 ஆம் ஆண்டு தெல்லிப்பழையில் பிறந்த ஐசாக் தம்பையா யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, கொழும்பு சென். தோமஸ் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். Ceylon Review பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியராகவும் Law Review சஞ்சிகையின் ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

### 1941 ஏப்ரல் 25

தொல்புரத்தில் பேராசிரியர் சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் மகாநாட்டில் இடதுசாரி அரசியல்வாதி எஸ்.ஏ.விக்கிரமசிங்க, திருமதி என்.எம். பெரேரா, காலி மாநகர முதல்வர் தகநாயக்கா ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த மகாநாட்டில் ஜீ.ஜீ.யின் 50:50 கோரிக்கைக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டதுடன் பண்டாரநாயக்காவின் இனவாத உரைகளுக்கும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. பூரண இறைமையுள்ள ஒருமித்த (ஒற்றையாட்சி) இலங்கையின் விடுதலைக்காக அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டுமென்ற ஐந்து அம்சத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

அந்தத் தீர்மானங்கள் வருமாறு

- இலங்கை இலங்கையர்களுக்கே
- இலங்கையர்கள் அனைவரும் சம உரிமையுடையவர்கள்
- பாகுபாடற்ற திறமைக்கு(merit) முதலிடம்
- இனங்களுக்கிடையே ஒற்றுமையும் ஒருங்கிணைவும்
- இலங்கைக்கு சுய நிர்ணயம்

### 1941 ஏப்ரல் 25

காகித ஆலை ஆரம்பம்.

யாழ்ப்பாண இளைஞர் சேவைகள் கழகத்தினால் (Jaffna Youths Social Service League)வண்ணார்பண்ணையில் கைகளால் கடதாசி தயாரிக்கும் ஆலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இலவசக்கல்வியின் தந்தை என அழைக்கப்படும் C.W.கன்னங்கரா இந்தத் தொழிற்சாலையைத் திறந்து வைத்தார். இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது காகித ஆலை இதுவே.திறப்பு விழாவில் உரையாற்றிய ரத்நாயக்கா யாழ்ப்பாணம் எல்லாவற்றிலும் முன்னணியில் திகழ்கிறது எனக் குறிப்பிட்டார்.

### 1941 மே

சுப்பிரமணியம் கதிரவேலு இலங்கை விமான பயிற்சி நிறுவனத்தின் ஆயுட்கால உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் இரத்மலானை விமானப் பயிற்சி நிலையத்தில் விமானியாகப் பயிற்சி பெற்றிருந்தார்.

### 1941 மே 31

விமான நிதி சேகரிப்புக்காக களியாட்ட விழா இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற வேளையில் பிரிட்டிஷ் அரசாங்கம் யுத்த செலவுகளுக்கென பொதுமக்களிடம் நிதி திரட்டியது. பாடசாலைகள்,கிராம மட்ட அமைப்புகள், அரசியல்வாதிகள் என அனைவரும் தம்மாலியன்ற பங்களிப்பைச்செய்தனர். களியாட்ட விழா ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போதைய ஆளுநர் களியாட்ட விழாவை ஆரம்பித்து வைத்தார். இந்தக் களியாட்ட விழாவுக்கு யாழ்ப்பாணத்தின் பதில் (Jaffna's Answer) எனப் பெயர் சூட்டப்பட்டது. களியாட்ட விழாவின் முதல் நாளன்று 3000.00 ரூபா சேர்ந்தது. யாழ்ப்பாணத்தில் சேகரிக்கப்படும் நிதியின் மூலம் ஒரு யுத்த விமானத்தைக் கொள்வனவு செய்து அன்பளிப்புச் செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் வந்த ஆளுநர், வீரமாகாளி அம்மன் கோயிலையும் பார்வையிட்டார். மலாயாஇலங்கையர் சங்கத்தின் ஆண்டுப்பொதுக்கூட்டம் இதே காலப்பகுதியில் நடைபெற்றது.தலைவராக வி.பொன்னம்பலமும்,உப தலைவராக விஜயரத்தினமும்,செயலாளராக தம்பிராஜாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

### 1941 டிசம்பர் 23

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் டி.எஸ்.சேனநாயக்கா உரையாற்றினார். அவர் தனது உரையில் தெரிவித்ததாவது -

"சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இலங்கை தான் தாய் நாடு. சிங்களவர்களும் தமிழர்களும் ஒன்றிணைந்து இலங்கையை வெளிநாட்டவர்கள் கபளீகரம் செய்வதைத் தடுக்க வேண்டும்" என்றார்.

### 1941 டிசம்பர் 24

வண்ணார்பண்ணையில் காகித ஆலையுடன் இணைந்ததாக தும்புத்தொழிற்சாலையொன்றை டி.எஸ்.சேனநாயக்கா திறந்து வைத்தார்.

### 1941 நவம்பர்

பருத்தித்துறையை நகரசபையாக மாற்றுவதற்கு கண்டனம்.

பருத்தித்துறைக்கு நகரசபை அந்தஸ்து வழங்கும் தீர்மானத்தை கண்டித்து தும்பளை வித்தியாலயத்தில் மருத்துவர் கந்தையா தலைமையில் ஒரு கண்டனக்கூட்டம் இடம் பெற்றது. இந்தக்கூட்டத்தில் 600 பேரின் கையொப்பத்துடன் கூடிய மனு ஒன்று ஆளுநர்,உள்ளூராட்சி அமைச்சர்,அரசாங்க அதிபர்,பருத்தித்துறை சட்டசபை உறுப்பினர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டது.

(வரலாறு தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாணவர்களே!

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்..

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555




K.ஆத்மிகா,
தரம் - 06
சென்.திரேசா மகளிர் கல்லூரி

## ஞானியின் அறிவுரை



ஒரு குடிகாரன் ஞானி ஒருவரைத் தேடி அவர் இருக்குமிடத்துக்கு வந்தான். "நானொரு குடிகாரன். நான் திருந்துவதற்கு ஒரு வழி கூறுங்கள் ஐயா..." என்று கேட்டுக் கொண்டான்.
அதற்கு ஞானி, "நாளை மாலை என்னை வந்து பார் சொல்கிறேன்" என்றார்.
மறுநாள் மாலை குடிகாரன் ஞானியைத் தேடி வந்தான். அப்போது ஞானி ஒரு தூணைக் கட்டிப் பிடித்துக் கொண்டு நின்றார்.
தூணைப் பார்த்து, "ஐயோ என்னை விட்டுவிடு... விட்டுவிடு..." என்று கத்திக் கொண்டிருந்தார்.
உடனே குடிகாரன், "நீங்கள்தானே தூணைப் பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள்? அதை விட்டு விடுங்கள்" என்றான். உடனே ஞானி சிரித்துக் கொண்டே, "நான் தூணைப் பிடித்துக் கொண்டிருப்பது போல, நீ தான் குடியைப் பிடித்துக் கொண்டிருக்கிறாய். நீயே விட்டுவிடு" என்றார்.



ஜெகன் யதுசன்,
தரம் - 9
யா/ வேலாயுதம் மகா வித்தியாலயம்

## எல்லைக் கிராமங்களில் குடியேற்றப்பட்ட

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் 1995 க்குப் பின்னர் பிறந்த பிள்ளைகளுக்குத் தாங்கள் இங்கு குடியேற்றப்பட்ட அரசியல் பின்னணியோ, அந்த அரசியலையோ அவர்களின் பெற்றோர் சொல்லிக் கொடுக்கவில்லை.
அவர்களின் பெற்றோர்கூட தாங்கள் குடியேற்றப்பட்ட அரசியல் பின்னணியை மறந்திருக்க வேண்டும். அல்லது 2009 க்குப் பின்னர் இலங்கை அரசாங்கத்தின் தொடர் புறக்கணிப்பினால் வெறுப்படைந்திருக்க வேண்டும். இளம் பிள்ளைகள் மிகவும் அப்பாவிகளாகவுள்ளனர். உயர் கல்வி கற்க விரும்புகின்றனர். ஆனால் அவர்களிடம் வசதியில்லை. போக்குவரத்துச் செய்யக்கூடிய தூரத்தில் வசதியான நகரங்கள் அருகில் இல்லை. இணைய வசதிகூட ஒழுங்காக இல்லை.
அழகான அந்தப் பிள்ளைகள் என்னுடன் தொடர்ந்து பேச விரும்பினர். வகுப்பு முடிவடைந்ததும் மொழிபெயர்ப்பு இன்றி என்னிடம் தனியாகப் பேசினர். செயலமர்வுக்கு வந்திருந்த இளம் பிள்ளைகள் ஆங்கிலம் கற்க விரும்புகின்றனர். கொழும்பில் உள்ள சிங்கள மக்கள் பேசும் சிங்கள மொழியை அவர்கள் பேசவில்லை. அவர்கள் பேசிய சிங்களம் கிராமிய இலக்கணத்துடன் கடுமையாக இருந்தது. எல்லோருமே பௌத்த சமயத்தவர்கள்.
இவர்கள் அநுராதபுரம் நகருக்குச் செல்வதற்குக்கூடத் தயங்குகின்றனர். தங்களைத் தாழ்த்தப்பட்ட மக்களாகக் கருதுவார்களோ என்ற கூச்ச உணர்வும் இவர்களிடம் உண்டு. அவ்வளவு தூரத்துக்கு இவர்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதை என்னால் உணர முடிந்தது.
இந்த மக்கள் அநுராதபுரம், நுவரெலியா போன்ற இடங்களில் இருந்தே இங்கு குடியமர்த்தப்பட்டிருக்கின்றனர். பதவியா பிரதேசத்தில் 1954 ஆம் ஆண்டு தாங்கள் குடியேற்றம் செய்யப்பட்டதாகவும் இந்தப் பிரதேசத்தில் உள்ள பதினைந்து கிராமசேவகர் பிரிவுகளிலும் வாழும் சுமார் நாற்பதாயிரம் மக்களின் உண்மையான பூர்வீகம் இந்தப் பிரதேசம் அல்ல என்றும் கருத்தரங்கில் கலந்துகொண்ட ஒரு சமூகச் செயற்பாட்டாளர் கூறினார். ஆகவே தமிழர் பிரதேசங்களை நில அடிப்படையில் பிரிப்பதற்கு வடக்கு - கிழக்கின் எல்லைக் கிராமங்களில் பௌத்த விகாரைகள் கட்டுதல், சிங்களப் பெயர்களைச் சூட்டுதல் போன்ற செயற்பாடுகளுடன் மாத்திரம் சிங்கள அரசியல்வாதிகள் நின்று விடுகின்றனர் என்பது புரிகிறது.
நிலங்களைப் பிரிக்கும் நோக்கில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களில் இவர்களுக்கு அக்கறையில்லை என்பதும் தெரிகிறது. குடியேற்றப்பட்ட பின்னர் அந்தமக்கள் எப்படியாவது வாழட்டும் அல்லது அரசியல் நோக்கில் அந்த மக்கள் சிந்திக்கக் கூடாது என்ற நிலைப்பாடும் சிங்கள அரசியல்வாதிகளிடம் இருப்பதுபோன்றும் தெரிகிறது.
ஏனெனில் 2009 க்குப் பின்னரான சூழலில் தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த எந்த நடவடிக்கைகளும் இல்லையென இங்குள்ள மக்கள் ஆதங்கப்படுகின்றனர். போர்க் காலத்தில் மாத்திரம் தங்களுக்கும் இந்தக் கிராம மருத்துவமனைக்கும் ஏன் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது என்ற சந்தேகம் கூட இப்போது அவர்களிடம் மெதுவாக எழ ஆரம்பிக்கிறது. ஆகவே அறுபது வருடங்களுக்கு முன்னர் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களே இப்படிப் புலம்புகிறார்கள் என்றால், 2009 மே மாதத்துக்குப் பின்னர் இன்று வரையும் வடக்கு - கிழக்கில் புதிதாக மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்களக் குடியேற்றங்களின் நிலை என்னவாக இருக்கும்?
ஈழத் தமிழர்களின் மரபுவழி அடையாளங்களை பௌத்த அடையாளமாக மாற்றினால் போதும் என்பது மட்டுமே சிங்கள அரசியல் தலைவர்களின் சிந்தனை. இதற்காக அப்பாவிச் சிங்கள மக்கள் பகடைக் காய்களாகப் பயன்படுத்தப்படுகின்றனர். ஆனால் இந்த உண்மையை குடியேற்றப்பட்ட சிங்கள மக்கள் தாங்களாகவே உணர்ந்து கொண்டால், எதிர்காலத்தில் சிங்கள அரசியல் தலைவர்களுக்கும் சிங்களக் கட்சிகளுக்கும் பெரும் நெருக்கடி ஏற்படக்கூடிய ஆபத்துகள் அதிகம்.
ஆனால் தமிழ்த்தேசியக் கட்சிகள் அல்லது தமிழ்ப் பிரமுகர்கள் அந்த அரசியலை இந்த மக்களிடம் சென்று போதித்தால் அது இனவாதமாகக் கிளம்பும். அத்துடன் வடக்கு - கிழக்கைத் திட்டமிட்டுப் பிரிப்பதற்காகக் கொழும்பில் இயங்கும் அரச நிர்வாக இயந்திரமும் உசாரடைந்து விடும்
இருந்தாலும் இந்த மக்கள் நன்றாகச் சிந்திக்கிறார்கள். எனது வகுப்பில் கொடுக்கப்பட்ட குழு வேலை ஒன்றின்போது, இன நல்லிணக்கம் பற்றி அவர்களிடம் இருந்து எழுந்த கருத்துக்கள் குறிப்பாக தமிழ் - முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் பற்றிய உரையாடல் அவர்களின் குறைந்த பட்ச அரசியல் சிந்தனை வளர்ச்சியை வெளிப்படுத்தியது. ஆனால் தமிழர்களின் அரசியல் விடுதலை பற்றிய உள்ளீடுகள் குறித்து அங்கு எடுத்துரைக்க நான் விரும்பவில்லை. அந்தப் பிள்ளைகள் சுட்டிக்காட்டிய விடயங்களோடு மாத்திரம் மட்டுப்படுத்தி வகுப்பை முடிவுக்குக் கொண்டு வந்தேன்.
1949 இல் கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட கல்லோயாக் குடியேற்றத் திட்டம் என்பது நிலங்களற்ற விவசாயிகளைக் குடியமர்த்தும் அரசியல் வேலைத் திட்டமாகும். சுமார் 40,000 ஏக்கர் நிலம் சிங்கள மக்களின் விவசாயத்துக்காக மாற்றப்பட்டது. ஐம்பது புதிய கிராமங்கள் உருவாக்கப்பட்டன. முன்னர் தமிழ்க் கிராமங்களாக இருந்த இடங்களில் பெரும்பான்மையான சிங்களவர்கள் குடியேற்றப்பட்டதனால் இன முரண்பாடுகள் அங்குதான் ஆரம்பிக்கப்பட்டன என்றுகூடச் சொல்லலாம். இதன் தொடர்ச்சியாக வவுனியாவுக்கு அல்லது வன்னி மாவட்ட பிரதேசத்தில் இருந்த சில குளங்கள் சிங்களப் பெயர்களுக்கு மாற்றப்பட்டுக் குடியேற்றங்களும் செய்யப்பட்டிருக்கின்றன என்பதற்குப் பதவியாக்குளம் சிறந்த உதாரணமாகும்.
பதவியா பிரதேச செயலகத்துக்கு அருகில் சிறிய பிள்ளையார் கோவில் ஒன்று உள்ளது. சிங்கள மக்கள் இப்போதும் அங்கு தீபம் ஏற்றி வழிபடுவதை அவதானிக்க முடிந்தது. தமிழர்களுக்குச் சிங்கள அரசியல் தலைவர்கள் நேர்மையாக இல்லை என்பது வேறு. ஆனால் தமிழர் நிலங்களைப் பிரிக்கும் நோக்கில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களின் வாழ்வியல் மீது அவர்களுக்கு அக்கறையே இல்லை என்பது தான் பெரும் வேடிக்கை.



அ.அக்சயன்,
தரம் - 1 B
யா/அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை




S.ஹரினி,
தரம் - 3
யா/உடுவில் மகளிர் கல்லூரி



கே. அக்ஷிதா,
தரம் - 5
யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



○ குருமன்காட்டான் வன்னிகா

# போதைவஸ்துப் பயங்கரவாதம்

**போதைப் பொருள் மாபியா அரசியல் கட்சி களிலிருந்து சகலதுறைக ளுக்குள்ளும் அதிகாரங்களைத் துய்க்கத் தொடங்கினால் ஆபத்துக்கள், பேராபத்துக் களாகி இலங்கைத் தேசம் சிதைந்தழியும் நிலை வரும்.**

இலங்கையில் மனித வளம் போதைவஸ்துகளால் அழிகிறது. போதைப் பொருள் பயன்படுத்தப்படுவதன் தாக்கம் இலங்கை முழுவதும் பாடசாலை மாணவர்களின் ஒழுக்கச் சீரழிவுகளிலிருந்து வீதி விபத்துகள்வரை தெளிவாகத் தெரிகிறது. பல்கலைக் கழகங்களில் பயிலும் ஒரு பகுதி மாணவர்கள் தமது உயர் கல்வியையும் எதிர்கால வாழ்வையும் போதைப்பொருள்களுக்கு பலியாக்கி வருகின்றனர்.

பல்வேறு துறைகளிலும் பணியாற்றும் தொழிலாளர்களில் கணிசமான தொகையினர் போதைவஸ்துகளுக்கு அடிமையாகி தமது வருமானத்தையும் அழித்து குடும்பத்தின் அங்கத்தவர்களையும் நிர்க்கதிக்குள்ளாக்கியுள்ளனர்.

நாட்டின் வெவ்வேறு துறைகளில் பணியாற்றும் தனியார் மற்றும் அரச ஊழியர்களும் போதை வஸ்துகளால் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். சமூகத்தில் பெண்கள் மத்தியிலும் மதகுருமார் மட்டத்திலும் போதை வஸ்துகள் மெல்ல மெல்ல உலாவுகின்ற நிலைமையுள்ளது.

இலங்கை கடல் சூழ்ந்த நாடு. சட்டவிரோத கடத்தல்களைத் தடுப்பதில் அல்லது கட்டுப்படுத்துவதில் கடற்படைக்கு முழுமையான பொறுப்பு உள்ளது. கடற்படைக்கு விமானப் படை, தரைப் படை ஆகியன பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அவ்வாறு நாட்டுக்குள் இவற்றைக் கட்டுப்படுத்துவதில் பொலிஸுக்கு அதிகாரம் உள்ளது. அதற்கு முப்படையும் சிவில் அதிகாரிகளும் பூரணமான ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இவற்றையெல்லாம் சரியான திசையில் வழிப்படுத்தும் அரசியல் தலைமைத்துவம் அவசியம்.

முப்படைகள் என்ன செய்கின்றன? பொலிஸ் என்ன செய்கிறது? இவற்றையெல்லாம் வழி நடத்தும் அரசியல் தலைமைத்துவம் என்ன செய்கிறது? சிவில் அதிகாரிகள் என்ன செய்கிறார்கள்? இக் கட்டமைப்புகள் எல்லாம் " கண்டும் காணாமல் ஏனோ தானோப் போக்கில்"இருக்க முடியாதல்லவா?

அதிர்ச்சியும் வேதனையும் மிக்க விடயம் என்னவெனில், அதிகாரத்தில் இருப்போரும் ஒரு சில மருத்துவ நிபுணர்களும் "பெற்றோர், பிள்ளைகளைக் கவனிக்கிறார்கள் இல்லை. போதை வஸ்துகளின் மீது நாட்டம் கொள்வதிலிருந்தும் அவற்றுக்கு அடிமையாவதிலிருந்தும் தமது பிள்ளைகளைப் பெற்றோரே பாதுகாக்க வேண்டும்" என்று கருத்துச் சொல்லத் தொடங்கியிருக்கிறார்கள்.

இத்தகைய சூழல் சமூகத்தில் மேலும் மேலும் சமூக விரோதிகளையும் கிரிமினல்களையும் உருவாக்க வழி செய்யும். ஜனநாயகத்தின் பலவீனத்தைப் பயன்படுத்தி "போதைக் கடத்தல் மன்னர்கள்" அதிகாரக் கதிரைகளில் இருந்து தீர்மானமெடுக்கும் அபத்தமான சூழலை ஏற்படுத்தும்.

இத்தகைய தீங்கான இருண்ட கொடூரச் சூழல், சட்டம் ஒழுங்கு, நாட்டின் பாதுகாப்பு, சுகாதாரம் மருத்துவம், கல்வி, நீதி, ஆன்மிகம் என சகல துறைகளையும் செயலிழக்கச் செய்யும்.

ஆகவே போதைவஸ்து வலைப்பின்னலின் தொடக்கச் செயற்பாடாகிய கடல் வழி, வான் வழி கடத்தல்களை பூரணமாகக் கட்டுப்படுத்தும் முப்படையும் ஏற்கனவே உள் நுழைந்துள்ள போதைப் பொருள்களைத் தேடிப் பிடித்து அழிக்கும் பொலிஸும் மிக அவசியம்.

அதற்கு முப்படையும் பொலிஸும் இலஞ்சம், ஊழல், மோசடி அற்ற, இலங்கை நாட்டின் எதிர்காலத்திலும் சமூக பொருளாதார வளர்ச்சியிலும் ஆரோக்கியம் மிக்க பாதுகாப்பிலும் அக்கறையுள்ள, நேர்மைமிக்க மனித வளமாகத் திருத்திச் செப்பம் செய்யப்படவேண்டும். அதற்கு தூரநோக்குள்ள அரசியல் தலைமைத்துவம் மிக அவசியம்.

போதை வலைக்குள் சிக்கியுள்ள இலங்கை மக்களை விரைவாக மீட்காவிட்டால், சமூக பொருளாதார வீழ்ச்சியிலிருந்து இலங்கை நாட்டை மீட்பதும் பொருளாதார அபிவிருத்தியை இலங்கை மக்கள் எட்டிப்பிடிப்பதும் சாத்தியமற்றுப் போகும்.

போதைப்பொருள் மாபியாக்கள் அரசியல் கட்சிகளிலிருந்து சகல துறைகளுக்குள்ளும் அதிகாரங்களைத் துய்க்கத் தொடங்கினால் ஆபத்துகள் , பேராபத்துகளாகி இலங்கைத் தேசம் சிதைந்தழியும் நிலை வரும். பிலிப்பைன்ஸ் நாட்டின் அனுபவம் மிகவும் பயங்கரமானதாகும்.

விரைவாகச் செயற்பட அரசின் கூறாகிய அரசாங்கமும், மக்களும், மக்கள் அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் தீர்மானிக்க வேண்டும்.

"போதைவஸ்துப் பயங்கரவாதம்" உலகின் ஏனைய பயங்கரவாதங்களிலும் பார்க்க மிக மிகக் கொடியது !



ஓவியம் : ஆர். இராகவன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org